3. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 33-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

4. அரசினர் தனித் தீர்மானம்

காவிரி நதிநீர் நடுவர்மன்ற ஆணையின்படி தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் வழங்க கர்நாடக அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டுமெனவும், கண்காணிப்புக்குழு மற்றும் நடைமுறைப்படுத்தும் குழுவை உடனடியாக அமைக்க வேண்டுமெனவும் மத்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தனித் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நெற்களஞ்சியமான காவிரி டெல்டா பகுதியில் ஆண்டாண்டுக் காலமாக நாம் காவிரி நதி நீரைப் பயன்படுத்தி வேளாண் தொழிலை மேற்கொண்டு வந்த உரிமைகள் சிறிது சிறிதாக மறுக்கப்பட்டு இன்று காவிரி நதியில் இருந்து தமிழகத்தின் வேளாண்

1995 டிசம்பர் 28] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தொழிலுக்குக் கிடைக்க வேண்டிய பங்கு நீரைக்கூட இழக்கின்ற ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பது ஒரு வேதனைக்குரிய விஷயமாகும்.

மரபுரிமைப்படி இயல்பாக நமக்குக் காவிரி நதி நீர் பாசனத்திற்குக் கிடைக்கின்ற சூழ்நிலை மாறி நமக்குரிய பங்கு நீரை நாம் வற்புறுத்திக் கேட்டுப் பெறுகின்ற சூழ்நிலைக்கும் நீதிமன்றங்களுக்குச் சென்று ஆணையைப் பெறுகிற சூழ்நிலைக்கும் அவ்வாறு பெற்ற ஆணை மதிக்கப்படாத நிலையில், பாசன நீரின்றி பயிர்கள் வாடிவிடாமல் காப்பாற்ற, மத்திய அரசை வற்புறுத்தி நமது உரிமைகளைப் பெறுகிற சூழ்நிலைக்கும் இன்று தள்ளப்பட்டிருக்கிறோம்.

தமிழகத்தின் ஜீவாதார உரிமைப் பிரச்சனையான காவிரி நதி நீர்ப் பிரச்சினையின் உண்மைத் தன்மையை உலகிற்கு உணர்த்தவும், மத்திய அரசு, கர்நாடக அரசை வற்புறுத்தி காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைப்படி தமிழகத்திற்கு வழங்க வேண்டிய 205 டி.எம்.சி. அடி நீரை, அந்த ஆணையில் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் விடவேண்டும் என்பதை வற்புறுத்தியும் 1993 ஆம் ஆண்டு நான் உண்ணாவிரதம் மேற்கொண்டதை இந்த இடத்தில் நினைவுகூர்வது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கர்நாடக மாநிலம் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் தொடங்கி அடுத்த ஆண்டு மே மாதம் வரைக்கும் உட்பட்ட கால கட்டத்தில் காவிரி நதியில் 205 டி.எம்.சி. அடி நீரைவிட வேண்டும் என்பதோடு அந்த மாதங்களில் ஒவ்வொரு வாரத்திலும் வழங்க வேண்டிய நீரின் அளவையும் ஒரு அட்டவணை இட்டு நடுவர் நீதிமன்றம் இடைக்கால ஆணை வழங்கியுள்ளது. அது மட்டுமின்றி மாதத்தின் ஒவ்வொரு வாரத்திலும் கொடுக்க வேண்டிய நீரின் அளவையும் குறிப்பிட்டு அதில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால் அந்த மாதத்தின் இறுதி வாரத் தவணையில் அந்தக் குறைவை முழுமையாக ஈடு செய்ய வேண்டும் என்றும் காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இன்று வரை கர்நாடக மாநிலம் அந்த ஆணையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதோடு, ஆணையை மதித்து அதன்படி தண்ணீரைத் தமிழகத்திற்கு வழங்கவும் இல்லை. ஆனால் இயற்கை அன்னையின் அருள் நமக்குக் கடந்த நான்காண்டு காலமாக, பரிபூரணமாகக் கிடைத்திருந்த காரணத்தால் கர்நாடக மாநிலம் காவிரியில் நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை விடாத போதிலும் தேவையான பாசன நீர் நமக்குக் கிடைத்தது.

முற்பகல் 10.10

இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ காலத்தில் கர்நாடக மாநிலம் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய நீரைக் கொடுக்காத காரணத்தாலும், வட கிழக்குப் பருவ மழை பொய்த்துப் போனதாலும், மேட்டூர் அணையின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து நமக்குப் பாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. அதனால் குறுவை மற்றும் சம்பா சாகுபடிகளில் பல லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில், வேளாண்மை மேற்கொள்ள இயலவில்லை. மேலும் தற்போது 13.3 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட பயிர் தண்ணீர் இன்றி வாடிக்கொண்டிருக்கிறது. காவிரி நதியில் நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லையெனில், நெற்பயிர் முழுவதும் பாழாகி விடும் பாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாசன ஆண்டு தொடக்கத்திலிருந்தே நம் மாநிலத்தின் வேளாண்மை ஏற்பாடுகளையும், பாசன ஏற்பாடுகளையும் எங்கள் அரசும், நாங்களும் கூர்ந்து கவனித்து வந்துள்ளோம். கர்நாடக மாநிலம் நமக்கு உரித்தான நீரை இந்த ஆண்டு காவிரியில் விடாத காரணத்தாலும், நமது மாநிலத்தில் காவிரியில் தண்ணீர் வரத்து குறைந்த காரணத்தாலும் இந்தப் பாசன நீர்ப் பற்றாக்குறைகளை மத்திய அரசுக்கு அவ்வப்போது சுட்டிக்காட்டி இந்த நீர்க்குறைவை கர்நாடக அரசு ஈடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளோம்.

மேலும் கர்நாடக மாநில நீர்த்தேக்கங்களின் நீர் இருப்பு, நீர் வரத்து மற்றும் நமக்கு விட வேண்டிய நீர் அளவின்படி கணிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு; நமக்குரிய நீரைக் காவிரியில் திறந்து விடுகிறார்களா என்பதைக் கண்காணிக்க ஓர் கண்காணிப்புக் குழு ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு பலமுறை நேரிலும் கடிதங்கள் மூலமும் நாம் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளோம்.

நிர்வாக முறைகளுக்கு ஏற்ப தகுந்த பரிகாரங்களையும் சட்ட முறைப்படி நியாயம் கிடைக்கின்ற எல்லா வழிவகைகளையும் ஆராய்ந்து இந்த அரசு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் இந்தப் பிரச்சினையை அணுகி உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே 1992 ஆம் ஆண்டு கர்நாடக அரசு நடுவர் மன்ற இடைக்கால ஆணையை அமல் நடத்தத் தவறியதால் அதை நிறைவேற்றும்படி ஆணையிட வேண்டும் என்று தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது. அதன்பின் இடைக்கால நிவாரணம் கோரி கர்நாடகம் வழங்கத் தவறிய நீர்ப்

1995 டிசம்பர் 28] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பற்றாக்குறையை ஈடு செய்ய வேண்டும் என்றும் தமிழ் நாட்டுக்கு உரிய நீரை வழங்கிய பின்னர்தான் கர்நாடக மாநிலம் தனது நீர்த் தேக்கங்களில் நீரைத் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆணை வழங்கக் கோரி இடைக்கால மனு Interlocutory Petition ஒன்று, தமிழக அரசால் 1-8-1995-ல் தாக்கல் செய்யப்பட்டது. தற்போது நடப்புப் பருவத்தில், 13.3 லட்சம் ஏக்கர் பரப்பளவில் உள்ள பயிரினைக் காப்பாற்ற, 30 T.M.C. அடி நீரையாவது உடனடியாக வழங்குமாறு கர்நாடக மாநிலத்திற்கு ஆணையிட ஒரு அவசர மனு Emergent Petition உச்ச நீதிமன்றத்தில், 11-12-1995 அன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் காவிரி டெல்டா பகுதியில் பயிரின் நிலைமை குறித்து தனது கவலையைத் தெரிவித்து இந்த மனுவை காவிரி நடுவர் மன்றம் உடனடியாக விசாரித்து தகுந்த நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று, 14-12-1995 அன்று தீர்ப்பு வழங்கியது. இரண்டு மாநில முதல்வர்களும் ஒன்று கூடி இது குறித்துப் பேச வேண்டும் என்றும் காவிரி நதி நீர் நடுவர் மன்றம் உடனடியாக நிலைமைகளை ஆராய்ந்து தக்க ஆணைகளை வழங்க வேண்டும் என்றும் ஆணையிட்டது. உடனடியாக நான் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து தமிழகத்தின் இக்கட்டான சூழ்நிலைகளை எடுத்துரைத்தேன். 30 T.M.C. அடி பாசன நீர் தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை என்றால் கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் பெருமானம் உள்ள விவசாய விளைபொருள் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதோடு இலட்சக்கணக்கான விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் எடுத்துரைத்தேன். அப்பகுதிகளில் வறட்சி ஏற்படும் என்பதையும் வறட்சியினால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படக்கூடும் என்ற எனது நியாயமான அச்சத்தையும் தெளிவாக எடுத்துரைத்தேன். முதல் பயிரில் தட்டுப்பாடு ஏற்பட்ட சூழ்நிலையில் மீண்டும் சம்பா பயிரில் இழப்பு ஏற்பட்டால் தமிழக விவசாயிகள், தங்கள் நிலங்களில் இட்ட முதலீட்டைக்கூட பெற முடியாமல் இழப்புக்கு ஆளாவார்கள் என்பதையும் எடுத்துரைத்தேன். அதற்கு ஆவன செய்வதாகக் கூறிய மாண்புமிகு பிரதமர் அவர்கள், உடனடியாக, மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தகவல் அனுப்பினார்கள்.

மேலும் உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்துப்படி 15-12-1995 அன்று கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது குறித்துப் பேச நான் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காமல் போய்விட்டன. நமக்கு சாதகமான பதிலும்

கிடைக்கவில்லை. இதற்கிடையில் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உடனடியாக ஒரு கூட்டத்தை டெல்லியில் கூட்டுவதாக எங்களுக்குத் தகவல் வந்தது. இந்தக் கூட்டத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டதற்கு, நான் 19-12-1995 அன்றே வைத்துக் கொள்ளலாம் என்று தகவல் கூட அனுப்பினேன். ஆனால் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள கர்நாடக மாநில முதலமைச்சர் முன்வராததால், இந்தக் கூட்டம் இன்று வரை நடைபெறவில்லை. இதற்கிடையே தமிழக அரசு, 14-12-1995 அன்று காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தில் உச்ச நீதிமன்ற தீர்ப்புப்படி, தாக்கல் செய்த மனு விசாரணைக்கு மேற்கொள்ளப்பட்டு தேவைப்பட்ட புள்ளி விவரங்களும் நடுவர் மன்ற நிபுணர்களிடம் வழங்கப்பட்டன.

முற்பகல் 10.15

கர்நாடக மாநிலத்தில் செப்டம்பர் மாதத்திற்குப் பின் தென்மேற்குப் பருவ மழை வலுத்ததால் கர்நாடக மாநிலம் நம் மாநிலத்திற்கு உரிய நீரை நமக்கு அளிக்கும் என்ற நியாயமான எதிர்பார்ப்புகளின் அடிப்படையிலும், தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை இயல்பாக இருக்கும் என்ற நம்பிக்கையிலும், காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் இன்றைய அளவில் 13.3 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடியை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒரு புறம் கர்நாடகம் நமக்குரிய நீரை வழங்கவில்லை. மற்றொரு புறம், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்து விட்டது. எனவே மேட்டூர் அணையிலிருந்து கிடைக்கும் நீரை மட்டுமே நம்பி காவிரி டெல்டா பகுதியில் வேளாண்மை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் கர்நாடக மாநிலத்தில் தென்மேற்குப் பருவ மழை வலுத்ததால் கர்நாடகத்திற்குக் கிடைத்துள்ள நீர் வரத்திலிருந்து, இடைக்கால ஆணையின்படி நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நீரை முழுவதுமாக வழங்க வேண்டும் என்று கர்நாடக அரசை நாம் வற்புறுத்தினோம். அதற்கு மாறாக, இந்த ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை தொடக்கத்தில் வறண்ட நிலையும், நீர்த் தட்டுப்பாடும் ஏற்பட்டதால் இது வறட்சி ஆண்டு என்று உண்மைக்குப் புறம்பாகக் கூறி ஓட்டு மொத்தத்தில் பகுதி அளவுத் தண்ணீரை மட்டுமே கொடுக்க முடியும் என்ற வாதத்தை கர்நாடக அரசு நடுவர் மன்றத்தின் முன்பு வைத்தது.

இந்த வாதத்தை ஏற்க இயலாது என்று நடுவர் நீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது.. அப்படியே வறண்ட நிலை இருந்தாலும் அப்படிப்பட்ட நிலை உள்ளதா என்று ஆராய்ந்து என்ன விகிதாச்சாரத்தில்

1995 டிசம்பர் 28] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

நீர்ப் பங்கீடு செய்வது, அதாவது 'புரோ ரேட்டா பேசிஸ்'-ல் நீர்ப்பங்கீடு செய்வது என்பதை கர்நாடக அரசே தன்னிச்சையாக தீர்மானிக்கக் கூடாது என்றும் அதற்குரிய அதிகாரம் நடுவர் மன்றத்திற்கு மட்டுமே உள்ளது என்ற தமிழக அரசு தரப்பு வாதத்தினையும் நடுவர் மன்றம் ஏற்றுக்கொண்டு கர்நாடக மாநில அரசின் வாதத்தை தள்ளுபடி செய்தது.

கர்நாடக மாநிலம் கொடுத்த, புள்ளி விவரங்களின் அடிப்படையிலே கூட அவர்கள் தமிழ்நாட்டுக்கு உரிய நீர் அளவில், 28 டி.எம்.சி. அடி காவிரி நீரை இதுவரை கொடுக்கவில்லை என்றும் அந்தக் குறைபாட்டை ஈடு செய்ய கர்நாடக மாநிலத்தின் வாதத்தின்படியே, இடை வரத்து விகிதாச்சாரமாக அதாவது 'புரோ ரேட்டா'-படி 17 டி.எம்.சி. நீரைக் கழித்தாவது 11 டி.எம்.சி. அடி நீரை அவர்கள் உடனடியாக தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்றும் நடுவர் மன்றம் 19-12-1995 அன்று தீர்ப்பு அளித்துள்ளது. இரு மாநிலங்களும் அளித்த விவரங்களை ஆராய்ந்து காவிரி நதிநீர் நடுவர் மன்றம் 19-12-1995 அன்று உடனடியாக 11 டி.எம்.சி. அடி நீரையும் எஞ்சியுள்ள மாதங்களில் நடுவர் மன்றத்தின் 2.5-6-1991 தேதியிட்ட இடைக்கால ஆணையின்படி அம்மாதங்களுக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ள அளவு காவிரி நீரையும் தமிழகத்திற்குக் கர்நாடக மாநிலம் வழங்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. நமது தேவையை விட நமது எதிர்பார்ப்பை விட இந்த அளவு குறைவாக இருந்தாலும் நாம் அந்தக் குறைந்த அளவு நீரையாவது நடுவர் மன்றத் தீர்ப்புப்படி கர்நாடகம் வழங்கும் என்று எதிர்பார்த்தோம்.

இரு மாநிலங்களிடையே ஏற்படும் நீர் பங்கீட்டுப் பிரச்சினையை ஆராய்ந்து, தீர்ப்புக் கூறுவதற்காக அமைக்கப்பட்ட தனி அமைப்பாக காவிரி நதிநீர் நடுவர் மன்றம் இருந்தும் அதன் தீர்ப்பை கர்நாடகம் இன்று வரை மதிக்கவில்லை.

தமிழகத்தின் நியாயமான உரிமைகள் மறுக்கப்படும்போதெல்லாம் எங்கள் அரசு உரிமைக் குரல் கொடுக்க என்றும் தயங்கியதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதே உணர்வுடன் தற்போது பாசன நீர் இன்றி வாடிவிடும் நிலையில் உள்ள பயிர்களைக் காப்பாற்ற, குறைந்தபட்சம் 30 டி.எம்.சி. அடி நீரையாவது கர்நாடக மாநிலம் தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று வற்புறுத்தி நான் மாண்புமிகு பாரதப் பிரதமர், திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்களுக்கு, 11-12-1995 அன்றும், மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. தேவே கௌடா அவர்களுக்கு 7-12-1995 அன்றும் கடிதங்களை எழுதினேன்.

கர்நாடக மாநிலத்தின் நீர்த்தேக்கங்களில் தற்போது தேக்கி வைக்கப் பட்டிருக்கும் நீரில் இருந்து 30 டி.எம்.சி. அடி நீரை நிச்சயமாக கர்நாடக மாநிலம், காவிரியில் நமக்காகத் திறந்துவிட முடியும். ஆனால் ஒரு அண்டை மாநிலத்தினுடைய பிரச்சினையை இன்னொரு மாநிலம் உணர்ந்துகொண்டு உதவ முன்வராததோடு, நமது உரிமைகளைப் புறக்கணித்திருப்பது நமக்கு வேதனையை அளிக்கின்றது. எனவே, மத்திய அரசு இதில் உடனடியாகத் தலையிட்டுத் தீர்வு காண வேண்டும் என்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டத்தைக் கூட்டினால் மட்டுமே, தான் கலந்து கொள்ளத் தயாராக இருப்பதாக திரு. தேவே கௌடா அவர்கள் கருத்துத் தெரிவித்ததாக சில செய்தித் தாள்களில் செய்தி வெளிவந்தது. எப்படியேனும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதால் 18-12-1995 அன்று சென்னைக்கு வந்திருந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் இந்த விவரங்களை எடுத்துரைத்து இந்தக் கூட்டத்தை பாரதப் பிரதமர் அவர்களே விரைவில் கூட்ட வேண்டும் என்று நானும் கேட்டுக் கொண்டேன்.

கடந்த சில நாட்களாக கர்நாடக மாநிலத்தில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள், 19-12-1995 நடுவர் மன்றத் தீர்ப்புப்படி 20 டி.எம்.சி. அடி நீரை நமக்காகத் திறந்து விடுவார்கள் என்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக இல்லை. எனவே மத்திய அரசு முனைப்புடன் தலையிட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக இரண்டு மாநிலங்களுக்கு இடையே ஏற்படக் கூடிய இத்தகைய பிரச்சினைகளை ஆராய்ந்து நல்ல முடிவெடுக்க வேண்டிய கட்டாயமும், கடமையும் மத்திய அரசுக்கு உண்டு.

நம்மைப் பொறுத்தவரையில் நமக்கு 19-12-1995-ன் நடுவர் மன்ற ஆணைப்படி வழங்க வேண்டிய குறைந்தபட்ச 11 டி.எம்.சி. அடி நீரையும், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்குரிய 9 டி.எம்.சி. அடி நீரையும் சேர்த்து ஆக மொத்தம் 20 டி.எம்.சி. அடி நீரை உடனடியாக காவிரியில் கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும். அதற்கு மத்திய அரசு அரசமைப்புச் சட்டப்படி, தீர்வுகாண, தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே நமது கோரிக்கை ஆகும். இதை இந்த அவையும் வலியுறுத்தும் என்று நம்புகிறேன்.

1995 டிசம்பர் 28] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

மத்திய அரசு கர்நாடக மாநில அரசை வற்புறுத்தி காவிரியில் 20 டி.எம்.சி. நீரை உடனடியாகத் திறந்துவிட தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வற்புறுத்தும் தீர்மானத்தையும், காவிரி நதி நீர் நடுவர் மன்றம் 25-6-1991 அன்று பிறப்பித்த இடைக்கால ஆணையை நடைமுறைப் படுத்த மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்த கண்காணிப்புக்குழு, அதாவது Monitoring Committee மற்றும் நடைமுறைப் படுத்தும் குழு, அதாவது Implementation Committee ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் தமிழக மக்கள் அனைவரின் சார்பிலும் இந்த அவையில் நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் இந்த உயிர் மூச்சுப் பிரச்சினையில், நாங்கள் மேற்கொண்டுவரும் அனைத்து முயற்சிகளுக்கும் மாண்புமிகு உறுப்பினர்களும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் தமிழக மக்கள் நலன் காக்க ஓரணியில் திரண்டு தங்களது முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசின் சார்பில் காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்த கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

தீர்மானம்

"காவிரி நதி நீர் நடுவர் மன்றம் 25-6-1991 ஆம் நாளன்று பிறப்பித்த இடைக்கால நிவாரண ஆணையில், கர்நாடக அரசு 205 டி.எம்.சி. அடி தண்ணீரை ஜூன் மாதம் முதல் அடுத்த ஆண்டு மே மாதம் வரையிலான பாசன ஆண்டு காலத்திற்கு ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட அளவுகளில் நீரை விடுவிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஆணை மத்திய அரசின் அரசிதழில் 10-12-1991 அன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனவே, அன்று முதல் இந்த ஆணை, சம்பந்தப்பட்ட எல்லா மாநில அரசுகளையும் கட்டுப்படுத்தும்.

முற்பகல் 10-25

2. 3-4-1992 ஆம் நாளிட்ட ஆணையில், காவிரி நதி நீர் நடுவர் மன்றம் மேற்குறித்த ஆணையில் ஏதாவது ஓராண்டில் மாறுதல் தேவை ஏற்படின் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் நடுவர் மன்றத்தை அணுகலாம் என்று ஆணை பிறப்பித்தது. 25-6-1991 அன்று பிறப்பித்த இடைக்கால ஆணைக்கு மாறுதல் ஏதும் தேவையில்லை என்றும் கருத்து தெரிவித்தது.

3. கர்நாடக அரசு, காவிரி நதி நீர் நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணையின்படி குறிப்பிட்ட மாதங்களிலும்/வாரங்களிலும்

குறிப்பிட்ட அளவுகளில் தண்ணீரைத் திறந்துவிடவில்லை. இதனால் 1991-92 ஆம் ஆண்டு முதல் 1994-95 ஆம் ஆண்டு வரை நடுவர் மன்றத் தீர்ப்பின்படி மேட்டூர் அணைக்கு வரவேண்டிய தண்ணீரின் அளவைவிட குறைவாகவே தமிழ்நாட்டிற்கு வரப்பெற்றுள்ளது.

4. மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் ஜூலை மாதம் 1993 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மத்திய அரசு ஒரு கண்காணிப்புக் குழுவையும் (Monitoring Committee) மற்றும் ஒரு நடைமுறைப்படுத்தும் குழுவையும் (Implementation Committee) ஏற்படுத்தும் என்று அளித்த உறுதியைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு இவ்விரு குழுக்களையும் விரைவீல் அமைக்குமாறு வற்புறுத்தி வருகின்றது. எனினும், மத்திய அரசு இவ்விரு குழுக்களையும் இந்நாள் வரையில் அமைக்கவில்லை.

5. கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டின் தென்மேற்குப் பருவ மழை இயல்பாக இருந்தும்கூட தமிழ்நாட்டுக்கு அளிக்க வேண்டிய நீரை கர்நாடக அரசு உரிய நேரத்தில் திறந்து விடவில்லை. இதனால் தமிழ்நாட்டில் குறுவை சாகுபடியில் கணிசமான குறைவு ஏற்பட்டது. தமிழ்நாட்டில் தற்பொழுது 13.3 லட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட சம்பா மற்றும் தாளடிப் பயிர்கள் போதுமான நீர் இன்றி வாடிவிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

6. தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டதால் மேட்டூரிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரைக் கொண்டு மட்டுமே தற்போதுள்ள பயிரைப் பாதுகாத்து அறுவடைக்குக் கொண்டுவர இயலாது என்றும் தற்பொழுது மேட்டூரிலுள்ள நீரின் அளவைக் கருத்திற்கொண்டும் கர்நாடக மாநில நீர்த்தேக்கங்களில் உள்ள போதுமான அளவு நீரைக் கருத்திற்கொண்டும் குறைந்தபட்ச அளவான 30 டி.எம்.சி. அடி தண்ணீரைத் திறந்துவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7-12-1995 ஆம் நாளிட்ட கடிதத்தில், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டார்கள். மேலும், 11-12-1995 ஆம் நாளிட்ட கடிதத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமர் இதில் உடனடியாகத் தலையிட்டு 30 டி.எம்.சி. அடி தண்ணீரைத் திறந்துவிட மாண்புமிகு கர்நாடக முதலமைச்சருக்கு அறிவுறுத்துமாறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

7. காவிரி டெல்டாப் பகுதியில் உள்ள பயிர்களைப் பாதுகாக்க தமிழ்நாட்டிற்கு 30 டி.எம்.சி. அடி தண்ணீரை கர்நாடகம் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு 11-12-1995 அன்று உச்ச நீதிமன்றத்தில்

1995 டிசம்பர் 28] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

ஒரு மனுவை - Emergent Petition Interlocutory Application-ஐ தாக்கல் செய்தது. இம்மனுவை விசாரித்து உச்ச நீதிமன்றம் 14-12-1995 அன்று வழங்கிய தீர்ப்பில் காவிரி நதி நீர் நடுவர் மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காவிரி நதி நீர் நடுவர் மன்றம் இதற்கு முக்கியத்துவம் அளித்து சம்பந்தப்பட்ட மாநிலங்களது கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர் ஆணையை வெளியிடலாம் என்று தெரிவித்தது.

8. 19-12-1995 ஆம் நாளிட்ட நடுவர் மன்றத் தீர்ப்பின்படி 11 டி.எம்.சி. அடி நீரையும் மற்றும் டிசம்பர் மாதத்திற்கு கிடைக்க வேண்டிய மீதமுள்ள 6.194 டி.எம்.சி. அடி நீரையும் சேர்த்து ஆக மொத்தமாக 17.194 டி.எம்.சி. அடி நீரை மொத்தமாக உடனடியாக விடுவிக்குமாறும் 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு இடைக்கால ஆணையின்படி தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய 2.51 டி.எம்.சி. அடி நீரையும் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் தொடர்ச்சியாக அளிக்குமாறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20-12-1995 ஆம் நாளன்று மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். இக்கடிதத்தின் நகலையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பி, உடனடியாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும் இதில் தலையிட்டு கர்நாடக முதலமைச்சருடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு, 19-12-1995 அன்றைய நடுவர் மன்றத் தீர்ப்பைச் செயல்படுத்த, கர்நாடக முதலமைச்சரை வலியுறுத்த வேண்டும் என்று 20-12-1995 அன்று எழுதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டார்கள்.

9. தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதியில் 13.3 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரைக் காப்பாற்ற தமிழக சட்டமன்றப் பேரவை கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கிறது :

(1) உச்ச நீதிமன்றத்தின் கருத்துப்படி காவிரி நதிநீர் நடுவர் மன்றம் விசாரித்து 19-12-1995 அன்று வழங்கிய ஆணையின்படி, கர்நாடக அரசு உடனடியாக 11 டி.எம்.சி. அடி தண்ணீரையும் டிசம்பர் மாதத்திற்குக் கிடைக்க வேண்டிய 6.194 டி.எம்.சி. அடி நீரையும் 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குக் கிடைக்க வேண்டிய 2.51 டி.எம்.சி. அடி நீரையும் சேர்த்து ஆக மொத்தம் 19.704 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாட்டிலுள்ள மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு வந்து சேரும்படி திறந்துவிட வேண்டும். மேலும், இப்பாசன ஆண்டில் உள்ள எஞ்சியுள்ள மாதங்களுக்கும் நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி குறைபாடின்றி தமிழ்நாட்டுக்கு கர்நாடக அரசு தண்ணீரை வழங்க வேண்டும்.

முற்பகல் 10-30

(2) (அ) 19-12-1995 ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்ட நடுவர் மன்றத் தீர்ப்பின்படி கர்நாடக அரசு உடனடியாக 11 டி.எம்.சி. அடி நீரோடு 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குரிய 6.194 டி.எம்.சி. அடி நீரையும், 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய 2.51 டி.எம்.சி. அடி நீரையும் சேர்த்து ஒட்டுமொத்தம் 19.704 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாட்டிலுள்ள மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு வந்து சேரும்படி திறந்துவிட கர்நாடக அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

(ஆ) காவிரி நதிநீர் நடுவர் மன்றம் 25-6-1991 ஆம் நாளன்று பிறப்பித்த இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்த மத்திய அரசு அறிவித்த கண்காணிப்புக் குழுவையும் (Monitoring Committee) நடைமுறைப்படுத்தும் குழுவையும் (Implementation Committee) மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் நான் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் முன்மொழிந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் இன்றியமையாமையையும் அவசர அவசியத்தையும் உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள் என்று கருதுகிறேன். இந்தப் பிரச்சினை தமிழ்நாடு காவிரிநீர் பாசனப் பகுதி விவசாயிகளுடைய உயிர் மூச்சுப் பிரச்சினை என்பதாக மட்டும் அல்லாமல் ஒட்டுமொத்தத் தமிழகத்தின் ஒரு ஜீவாதாரப் பிரச்சினை என்பதையும் கருத்தில்கொண்டு இந்தப் பிரச்சினையில் இந்தப் பேரவையிலே இருக்கிற அனைத்துக் கட்சியினரும் ஒட்டுமொத்தத் தமிழகமும் ஓர் அணியில் நிற்கிறது என்பதை உணர்த்த வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது என்பதை அனைவரும் அறிவீர்கள். தீர்மானத்தின்மீது முன்வரிசைத் தலைவர்கள் மட்டுமே பேச இருக்கிறார்கள். எனவே, நாம் ஓர் அணியில் இருக்கிறோம் என்பதை உணர்த்தும் வகையிலேயும் அவரவர்களுடைய அரசியல் இயக்கங்களுக்கு ஏற்ப சில பல கருத்து மாச்சரியங்கள், வேறு சில பிரச்சினைகள் இருந்தாலும் நாம் அனைவரும் இந்தப் பிரச்சினையில் ஓர் அணியில் இருக்கிறோம் என்பதை உணர்த்துகிற வகையில் உறுப்பினர்கள் பேசுவது நல்லது என்று கருதுகிறேன். அந்த வகையிலே தீர்மானத்தினுடைய வாசகங்கள் கூட கவனமாக மாண்புமிகு முதலமைச்சரின் உரையிலே எடுத்துக் கோர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். எனவே, அந்த

உணர்வோடு உங்களது உரையிலும் இந்தப் பிரச்சினையில் ஒட்டுமொத்தத் தமிழகம் ஓர் அணியில் நிற்கிறது என்பதையும் மனதிற்கொண்டு பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருவது நம்முடைய கடமை என்கிற உணர்வோடு பேசி நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

முற்பகல் 10.35

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைக் கவ்வியுள்ள சோகமான சூழ்நிலையில் கனத்த இதயத்தோடு இந்த மாமன்றம் கூடி இருக்கிறது. நமது மொத்த கால்வாய்ப் பாசனப் பரப்பில் 80 விழுக்காடு காவிரி நீரை நம்பி இருக்கிறோம். நம் மாநிலத்தில் லட்சக்கணக்கான விவசாயிகளின் நல்வாழ்வும் மாநிலத்தின் உணவு உற்பத்தியும் காவிரி நீர் வளம் தொடர்ந்து கிடைப்பதைப் பொறுத்தே அமைந்து இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள நீர் வளத்தில் பாதிக்கு மேல் காவிரியிலிருந்து தான் கிடைக்கிறது. 'வான்பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி' பொய்த்துவிட்டதை காணக்கூடிய ஒரு அவல நிலை இன்று தோன்றி இருக்கிறது.

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்."

என்ற வள்ளுவரின் எச்சரிக்கையை இதயத்தில் பதிய வைத்துக் கொள்ளாததால் நம்மை இந்தக் கேடு சூழ்ந்துவிட்டது. 480 கோடி ரூபாய் மதிப்புள்ள 13.3 இலட்சம் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் நீரின்றி வாடும் நிலையும், அந்தப் பயிர்களோடு சேர்ந்து நாமும் தலை குனிய வேண்டிய நிலையும் தோன்றியிருக்கிறது. 480 கோடி ரூபாய் இழப்பு என்பது இந்த மாநிலத்திற்கு மட்டுமல்ல, இந்த தேசத்திற்கே ஏற்பட்ட இழப்பு. இதற்கு யார் பொறுப்பாக இருந்தாலும் மக்களின் வயிற்றில் அடிக்கிற வேலை இது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டு நலனை விரும்பக்கூடியவர்கள், தேச ஒற்றுமையைக் கருதக்கூடியவர்கள், சட்டத்தின் ஆட்சியை மதிக்கக் கூடியவர்கள் யாரும் இத்தகைய இழப்புக்குப் பொறுப்பாகமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். 'தாயும் மகளும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறு வேறுதான்' என்பது நாட்டுப்புற பழமொழி. இனத்தால் திராவிடராகவும், தேசத்தால் இந்தியராகவும், உலகத்தால் மனிதராகவும் உயர்ந்து நின்றாலும் நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வு மிஞ்சி நின்றாலும் வயிறுகள் மட்டும் தனித்தனியாக படைக்கப்பட்டுவிட்டன என்பதை யாரும் மறந்துவிட

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1995 டிசம்பர் 28

முடியாது. எனவே தான், "வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என்று பாடினான் தேசியகவி பாரதி. இந்தத் தவிர்க்கமுடியாத கடமையை தலைமேல் ஏற்றுக்கொண்ட தமிழக அரசு மிகுந்த எச்சரிக்கையோடு செயல்பட்டிருக்கவேண்டும். கர்நாடக மாநிலத்தில் மின் தட்டுப்பாடு ஏற்பட்டு கலங்கி நின்றபோது அவர்களுக்குக் கைகொடுக்க முன் வந்தது நம்முடைய கருணை உள்ளத்தைக் காட்டுவதாக அமைந்திருக்கலாம். எனினும் பழங்காலத்தில் நிலவிய பண்டமாற்றாக அமையாவிட்டாலும் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு உதவுகிற வகையில் நம்முடைய தேவைக்கேற்ற நீரை நாம் கேட்டு வாங்கியிருக்க முடியும். நாம் அந்த வாய்ப்பை நழுவவிட்டதன் விளைவாக இன்று நமது விவசாயிகளுடைய வாழ்க்கையை இருள் கவ்விக் கொண்டிருக்கிறது. மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் மிகுந்த அரசு அமையாவிட்டால் மக்களின் வாழ்வில் ஒளி பிறக்கமுடியாது.

காவிரி நதிநீர்ப் பங்கீடு குறித்த பிரச்சினை இன்று நேற்று வந்ததல்ல. எனவே எதிர்பாராத வகையில் ஏதோ நடந்துவிட்டது என்று கூறி நழுவிக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இதில் இல்லை. காவிரி நீர்ப் பங்கீட்டில் தமிழகத்திற்குத் தேவையான தண்ணீரை விடுவிக்க வேண்டுமென்று கோரி நடுவர் மன்றத்தையும், உச்ச நீதிமன்றத்தையும் அணுகினோம். 205 கோடி கனஅடி தண்ணீரை விடுவிக்க வேண்டும் என்று நடுவர்மன்றம் இடைக்கால ஆணை பிறப்பித்தது. அந்த ஆணையை நிறைவேற்றுவதற்கு வகை செய்யும் பொருட்டு மத்திய அரசு தனது அரசு இதழில் அதை வெளியிட்டது. நடுவர்மன்ற ஆணைக்குப் புறம்பாக கர்நாடக சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியச் சட்டத்தை உச்சநீதிமன்றம் செல்லத்தக்கதல்ல என்று நிராகரித்தது. எனினும் நடுவர் மன்றத்தின் ஆணையின்படி தமிழகத்திற்குத் தண்ணீரைத் திறந்துவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மழை பொழிந்து நீர்வரத்து அதிகமாக இருந்த காரணத்தினால் அதற்கு அவசியம் ஏற்படவில்லை. இதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்த ஆண்டு குறுவை சாகுபடியை முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை. 5 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிட வேண்டியதற்குப் பதிலாக, பாதிக்கும் குறைவான நிலையில் 2 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடக்கூடிய அளவுக்கு இறங்கிவிட்டோம். அதற்குக் காரணமே 1991 ஆம் ஆண்டில் நடுவர் மன்றம் பிறப்பித்த ஆணையை செயல்படுத்தத் தவறியதுதான் என்று சுட்டிக்காட்டி, இந்த அரசாங்கத்தின் முன்னாள் தலைமை வழக்கறிஞர் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். டிரிபியூனலை அணுகுவதற்குப் பதிலாக உச்சநீதிமன்றத்தை அணுகியதன் விளைவாக

1995 டிசம்பர் 28] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

ஒருவார காலம் வீண் காலதாமதம் ஏற்பட்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதற்கு இந்த அரசாங்கத்தின் பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நடுவர் மன்றத்துக்கு, டிரிபியூனலுக்கு ஆணை வழங்கத்தான் முடியுமே தவிர அதற்கு Power to execute கிடையாது. சட்ட நிபுணர்களிடம் பேசி, கேட்டுத் தெரிந்துகொண்ட பின்னர்தான் Power to execute டிரிபியூனலிடம் இல்லாததால் 1-8-1995 அன்று நாங்கள் உச்ச நீதிமன்றத்திலே, சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு Interlocutory Petition-ஐத் தாக்கல் செய்திருக்கிறோம். ஆகவே இந்த அரசு பாராமுகமாக இருந்துவிட்டது என்றோ, (மேசையைத் தட்டும் ஒலி) கவனிக்காமல் இருந்துவிட்டது என்றோ கூறமுடியாது. கடந்த 4 ஆண்டுகளில் இயற்கை அன்னையின் கருணையால் நமக்குப் போதிய காவிரி நீர் கிடைத்தபோதிலும் கூட, உச்சநீதிமன்றத்தில் சட்டப்படி நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நாம் எடுத்துத்தான் இருக்கிறோம் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10.40

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனை நான் சொல்லவில்லை. நம்முடைய முன்னாள் தலைமை வழக்கறிஞர் அவர்கள், உச்சநீதி மன்றத்திற்கு முன்னால் செல்லாமல்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் நீதிமன்றத் தலைமை வழக்கறிஞர் சொல்லிவிட்டால் அது என்ன வேத வாக்கா? அது என்ன சட்டமா? அவர் சொல்லிவிட்டார், இவர் சொல்லிவிட்டார் என்று சொல்லாமல், நியாயம் என்ன என்பதைச் சொல்ல வேண்டும். அவர் சொல்லிவிட்டார், இவர் சொல்லிவிட்டார் என்று மேற்கோள் காட்டுவது தேவையில்லாத ஒன்று.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் அதை தேவ வாக்கு என்றும் எடுத்துக் கொள்ளவில்லை, அதுதான் சரி என்றும் வாதாடவில்லை. ஆனால், அவரே அப்படிச் சொல்லி இருக்கிறார்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1995 டிசம்பர் 28

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அட்வகேட் ஜெனரல் சொன்னார் என்பதை மீண்டும் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ வேத வாக்கு, தேவ வாக்கு என்பதைப்போல மேற்கோள் காட்டிக் கொண்டிருக்கிறார். முன்னாள் அட்வகேட் ஜெனரல் பதவியை இழக்க நேரிட்டது. அவர் இருக்கும்வரை இதை எல்லாம் பேசவில்லை. பதவியை இழந்த பின் பேசுகிறார் என்றால் அது ஏன் என்று எல்லோருக்கும் புரியும். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அவருடைய வாதத்திலே, கடைசியாக ஒரு வார காலம்— மிகவும் முக்கியமான குறிப்பிட்ட ஒரு கால நேரத்தில், ஒரு வார காலம் இழப்புக்குக் காரணம், முதலாவதாக நடுவர் மன்றத்திற்குச் சென்றிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அது ஏற்றுக்கொள்ளத்தக்கதா, அதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டுமென்றுதான் நான் விரும்பினேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் தெளிவுபடுத்தினேன். நான் விளக்கம் அளித்த பின்னும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் மீண்டும் அந்த சொத்தை வாதத்தையே எடுத்து வைத்துக் கொண்டிருந்தால், இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் எல்லாம் தெரிந்த சட்ட மேதைகள் என்று எங்களை நாங்களே கருதிக்கொள்ளவில்லை. நாங்கள் சட்ட மேதைகளிடம் ஆலோசனை கேட்கிறோம். லீகல் எக்ஸ்பர்ட்ஸ்—சட்ட நிபுணர்களிடம் ஆலோசனை கேட்கிறோம். அவர்களிடம் டிரிப்யூனலை அணுகலாமா என்று கேட்டதற்கு, அவர்கள் சொன்னார்கள், டிரிப்யூனல் ஆர்டரைத்தான், ஆணையைத்தான் வழங்க முடியும், ஏற்கெனவே அதை வழங்கிவிட்டது. ஆனால் அதை எக்ஸ்கியூட் செய்கின்ற பவர் டிரிப்யூனலுக்குக் கிடையாது. ஆகவே நீங்கள் உச்ச நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதைத்தான் செய்திருக்கிறோம். உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லாமல் எங்கே செல்வது? பிரதமர் அவர்களிடம் செல்லலாம். சென்று பார்த்துவிட்டோம். இப்போதும் கேட்டிருக்கிறேன். கடிதம் எழுதி இருக்கிறேன். நேரிலும் வற்புறுத்தி இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பிரதமர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், உச்ச நீதிமன்றத்தைத் தவிர எங்களுக்குப் போக்கிடம் வேறு ஏது? (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நடுவர் மன்றத் தீர்ப்பிலேயே, நடுவர் மன்ற ஆணையிலேயே, நடுவர் மன்றம் இரண்டாவது அளித்த விளக்கத்திலேயே in times of distress —

1995 டிசம்பர் 28] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

துயர் ஏற்படுகின்ற காலங்களில், நாம் எதிர்பார்த்தப்படி மழை பெய்யாமல் பொய்த்து விடுகின்ற காலங்களில் இந்த நடுவர் மன்றத்திற்கு முன்னாள் இரண்டு மாநிலங்களும் வரலாமென்று தெளிவாக அந்தத் தீர்ப்பிலேயே கூறப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நாங்களும் அறிவோம். ஒரு டிஸ்டிரஸ் காலம் என்பதை எப்போது நாம் அறிந்து கொள்வது? டிஸ்டிரஸ் வந்த பின்னர்தான். நான் மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1-8-95, அன்று அதாவது ஆகஸ்டு 1 ஆம் தேதியே சுப்ரீம் கோர்ட்டில் Interlocutory petition-ஐ ஃபைல் செய்திருக்கிறோம். அப்போது இன்னும் டிஸ்டிரஸ் வரவில்லை. ஏனென்றால் வடகிழக்குப் பருவ மழைக் காலம் அக்டோபர் மாதத்தில்தான் தொடங்குகிறது. அக்டோபர் மாதத்தில் வடகிழக்குப் பருவ மழை இன்னும் வராதபோது, அக்டோபருக்கு முன்பே இந்தப் பருவ மழை பொய்த்துவிடும், மழை வராது என்று எப்படிக் கண்டுகொள்வது? (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு ஒவ்வொரு மாதமும் வாராந்திர அடிப்படையில் கர்நாடக மாநிலம் எவ்வளவு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று நடுவர் மன்ற ஆணையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஜூன் மாதம் 10.16 டி.எம்.சி., ஜூலை மாதம் 42.76 டி.எம்.சி., ஆகஸ்டு மாதம் 54.72 டி.எம்.சி., பிறகு செப்டம்பர் மாதத்தில் 29.36 டி.எம்.சி. என்று வரையறுத்துக் கூறி இருக்கிறார்கள். நமக்கு ஜூன் மாதம் போதிய தண்ணீர் வரவில்லை. ஜூலை மாதம் நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகஸ்டில் நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. அந்தக் கால கட்டத்தில்—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10.45

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூன் மாதத்திலும் ஜூலை மாதத்திலும் வரவேண்டிய தண்ணீர் கர்நாடகத்திலிருந்து வரவில்லை. அந்த மாநில

முதலமைச்சரிடமும் பேசிப் பார்த்துவிட்டோம். பலன் இல்லை. அதனால்தான் ஆகஸ்ட் மாதம் 1-ந்தேதியே சுப்ரீம் கோர்ட்டில் Interlocutory Petition-ஐ ஃபைல் பண்ணினோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: என்னுடைய வாதம், You should have expedited the petition, whether it is before the Supreme Court or before the Tribunal. You should have asked for expediting the petition.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, We can only approach the Supreme Court, we can only file a petition. We cannot dictate to the Supreme Court or the Supreme Court Chief Justice as to when it should be taken up or when it should be heard. I am sure, the Hon'ble Leader of the Opposition knows that much. (Thumping of desks.)

Thiru S. R. Balasubramonian: Mr. Speaker Sir, I am not asking to dictate to the Supreme Court, but you could have asked the Supreme Court to expedite the petition. I am not asking to dictate to the Supreme Court. Nobody can dictate to the Supreme Court. The Supreme Court is Supreme. The law declared by the Supreme Court must be carried out by one and all. Nobody can defy the Supreme Court.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சிலவற்றைச் சொல்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள், ஆகஸ்ட் 1-ந் தேதியே நாங்கள் மனுத் தாக்கல் செய்திருக்கிறோம் என்று. அந்த மனுவின் மீது விசாரணை, 25-8-1995, 28-8-1995, 30-8-1995, 7-9-1995 இப்படி தொடர்ந்து உச்ச நீதிமன்றத்திலே விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே அதனுடைய விசாரணை தொடர்ந்து உச்ச நீதிமன்றத்திலே நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய அரசின் சார்பில் வழக்கறிஞர்கள் வாதாடியிருக்கிறார்கள். அதற்கு அவர்களுடைய சார்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. உச்சநீதிமன்றத்தில் நாங்கள் தொடர்ந்து மனுக்களைத் தாக்கல் செய்து கொண்டிருக்கிறோம். தொடர்ந்து அந்த மனுக்கள் மீது பிரஸ் செய்த பிறகுதான் தொடர்ந்து அந்த மனுவின் மீது விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல, சுப்ரீம் கோர்ட்டை நாம் டிக்டேட்

செய்ய முடியாது. நாம் விவாதத்தை எடுத்து வைக்கமுடியும். பிரஸ் பண்ணமுடியும். எங்களுக்கு நிவாரணம் கிடைக்கவேண்டும் என்று வாராவாரம் அதற்குரிய நடவடிக்கையை எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் புள்ளிவிவரங்களுக்குள் போகவில்லை. புள்ளி விவரங்களையெல்லாம் முதலமைச்சர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களுக்காக வாதாடுகிறாரா அல்லது கர்நாடக மக்களுக்காக வாதாடுகிறாரா என்பதை மட்டும் அவர் சொல்லிவிட்டு, பேச்சைத் தொடர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் தெளிவாக, முன்பே சொல்லியிருக்கிறேன். அவர்கள்தான் அதற்குப் பொறுப்பு என்பதை மிக நாசூக்காகச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இந்த இழப்பு நமக்கு மட்டுமல்ல, (குறுக்கீடு) இந்த இழப்பு தேசத்திற்கே இழப்பு. இதற்கு யார் பொறுப்பாக இருந்தாலும்... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு, கர்நாடக அரசை மிக நாசூக்காக மட்டும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஒரே ஒரு சந்தேகத்தை நான் அவர்களிடத்தில் கேட்க விரும்புவது, முன்னாள் அட்வகேட்-ஜெனரல் சொல்லிய அடிப்படையிலே ஒரு வார காலம் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்று அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதில் என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது, எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, முன்னெச்சரிக்கையாக எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொன்னார்கள். ஆனால் நாடு பூராவும், 1991-லே கிடைத்த தீர்ப்பை நிறைவேற்றித் தருவதற்கு பலமுறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை அணுகியும் இன்னும் அவர்கள் செய்யாமல் இருக்கிறார்கள் என்று தமிழகத்தில் இருக்கிற அத்துணைபேரும்

[திரு. சு. முத்துசாமி] [1995 டிசம்பர் 28

கொந்தளித்துப் போய் இருக்கிறார்களே, இந்தக் கால தாமதத்தைப் பற்றி அவர் என்ன நினைக்கிறார் என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முதலிலேயே சொன்னேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, இங்கே நாம் பேசுகிற விவாதத்தினுடைய தன்மை அல்லது அந்த அணுகுமுறை, ஏதோ ஒரு வழியில் நமக்குப் பாதகமாக அமைந்துவிடக் கூடாது. அது யார் பேசி எப்படி வந்தாலும் தவறாக அமையும். எனவே அதை மனதிலே கொண்டு பேச வேண்டுகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: சரி என்னுடைய வாதம், இப்போது சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருப்பதற்குப் பதிலாக, முன்பே டிரிபியூனலுக்குப் போயிருக்கலாம் என்பதுதான். எல்லாவற்றிற்கும் மேலாக மேட்டூர் அணைக்கு உடனடியாக தண்ணீர் வராவிட்டால் ஒரு சில நாட்களில் காவிரிப் படுகையினுடைய நெற்பயிர்கள் காய்ந்து விடக்கூடிய அபாய கட்டத்தை எட்டிவிடும். இந்நிலையில், பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு ஏற்படக்கூடிய நிலைமையை நாம் முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஒருவர் மீது ஒருவர் பழியைப் போடுவதற்கோ, சேற்றை வாரி இறைப்பதற்கோ, இது ஏற்ற தருணம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தன்னுடைய உரையின் தொடக்கத்திலேயே, எங்களுக்கு ஆற்றல் இல்லை, அக்கறை இல்லை, செயல்படும் திறமை இல்லை என்று எங்கள் மீது இவ்வாறு சேற்றை வாரியிறைத்துவிட்டு, இப்போது இந்த அறிவுரையைக் கூறுவது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. இந்தத் தருணத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நாங்கள் ஆத்மார்த்த ஈடுபாட்டுடனும், ஆற்றலுடனும்தான் செயல்பட்டு இருக்கிறோம். 1991ஆம் ஆண்டிலிருந்தே நடுவர் மன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கிய பின்னர் அதை அமல்படுத்த வேண்டுமென்று எல்லாவகையிலும் சட்டத்திற்கு உட்பட்டு நாங்கள் போராடிக் கொண்டுதான் இருக்கிறோம். என்னென்ன முயற்சிகள் எடுக்க முடியுமோ அத்தனை முயற்சிகளையும் எடுத்து நாங்கள் முடித்து விட்டோம். இதில் இனிமேல் செய்யக்கூடியது ஒன்றுதான். ஒன்று, சுப்ரீம் கோர்ட் டைரக்ஷன் கொடுக்க வேண்டும். அதைத்தான் கோரி இன்றைக்குக் கூட நாம் தொடுத்த ஒரு Interlocutary Application இன்று சுப்ரீம் கோர்ட்டில்

எடுத்துக்கொள்ளப்படுகிறது. இன்னொரு வழியும் இருக்கிறது. மத்திய அரசாங்கம் நினைத்தால் ஒரு மாநிலத்திற்கு சுப்ரிம் கோர்ட் ஆணையை நிறைவேற்றவேண்டுமென்று ஒரு டைரக்ஷன் கொடுக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்திலும் இடம் இருக்கிறது. இதை 1991 ஆம் ஆண்டிலிருந்து கட்டிக்காட்டி மீண்டும் மீண்டும் பாரதப் பிரதமர் அவர்களை நீங்கள் இதில் தலையிட்டு கர்நாடக மாநிலத்திற்கு அந்த 205 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டுமென்ற காவிரி நடுவர் மன்ற ஆணையை அமல்படுத்த வேண்டுமென்று ஒரு டைரக்ஷனை கொடுங்கள் என்று திரும்ப திரும்ப, திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கேட்டிருக்கிறேன். ஆனால் அந்த டைரக்ஷன் கொடுக்கும் ஆற்றல் ஏன் மத்திய அரசுக்கு இல்லையென்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்ரிம் கோர்ட் ஒரு ஆணை பிறப்பிக்குமானால் சுப்ரிம் கோர்ட்டிற்கு முன்னால் நாம் நிற்கும்போது We are Petitioners. Respondents, பிரதிவாதிகள் என்று வரும் நேரத்தில் கர்நாடக மாநில அரசு மட்டுமல்ல, பயன்பெறும் மற்ற மாநில அரசாங்கங்கள், மத்திய அரசாங்கம் ஒரு ரெஸ்பான்டென்ட். We should add them as Respondents. I think we have added them as Respondents. If there is a direction from the Supreme Court to the Government of India, நிச்சயமாக there will be a direction from the Government of India to the Government of Karnataka.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, it does not require a direction from the Supreme Court to the Government of India. அது இல்லாமலே மத்திய அரசு தலையிட முடியும். ஏனென்றால், காவிரி நடுவர் மன்றம் என்பது it has been constituted according to an Act of Parliament. According to an Act of Parliament, this Tribunal has been constituted by the Chief Justices of High Court (Retired).

ஆகவே, இந்த ட்ரைபியூனல் ஒரு தீர்ப்பை வழங்கினால் அதை மத்திய அரசாங்கம் கெசட் செய்ய வேண்டும். அதை கெசட் செய்தாகிவிட்டது. Once it has been gazetted by the Government of India, it becomes mandatory on all the concerned State Governments to obey that order. ஆகவே, even without a specific direction from the Supreme Court to the Government of India, the Government of India is well within its rights and has the powers to issue a direction to the Government of Karnataka to obey the Tribunal's Interim Order.

[1995 டிசம்பர் 28

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய, மாநில அரசுகளின் உறவுகளைப் பற்றி சர்க்காரியா கமிஷன் ஆராய்ந்து இருக்கிறது. அது தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறது. 1956 ஆம் ஆண்டு, மாநிலங்களுக்கிடையேயான தண்ணீர் தகராறுகள் குறித்த சட்டத்தைப் பற்றிய விளக்கம் அளித்த சர்க்காரியா கமிஷன் கீழ்க்கண்டவாறு தன்னுடைய கருத்தைத் தெரிவித்து இருக்கிறது. ``The Government of India lacked any means to enforce an Award., if any State refuses to give effect to the Award fully or even partially."

``The Commission was of the view that in order to make the Award binding and effectively enforceable, the ISWD Act, (Inter-State Water Disputes Act) should be amended to give it the same sanction as an Order or Decree of the Supreme Court."

ஒரு மாநில அரசு நடுவர் மன்றம் அளிக்கும் தீர்ப்பை முழுமையாகவோ அரைகுறையாகவோ ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால் அதை நிறைவேற்றக் கூடிய அதிகாரம் மத்திய அரசுக்கு இல்லையென்று நான் சொல்லவில்லை. சர்க்காரியா சொல்லி இருக்கிறார். தன்னுடைய ரிப்போர்டில் 1988 ஆம் ஆண்டே சொல்லி இருக்கிறார். அதற்குப் பிறகு have we amended the Act? The Act was not amended. We have the same Inter-State Water Disputes Act. It has not been amended.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கர்நாடகா முதலமைச்சர் திரு. தேவகவுடா அவர்கள் பேச வேண்டியதையெல்லாம் இவர் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மத்திய அரசாங்கம் ஏன் செய்யவில்லை என்று கேட்கிறீர்கள். நான் பதில் அளிக்க வேண்டுமென்றும் சொல்கிறீர்கள். பதில் அளித்தால் உடனே அவர் பேச வேண்டியது என்கிறீர்கள். அதுவல்ல, யதார்த்தமான உண்மைகளை நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-55

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்

சற்றுமுன் மேற்கோள் காட்டினாரே, முன்னாள் அட்வகேட்-ஜெனரல் அவர்களின் கூற்றை, அதே அட்வகேட்-ஜெனரல் பதவியில் இருந்தபோது, எங்களுக்கு சட்ட ஆலோசனை வழங்கியிருக்கிறார், அவர் சொல்லியிருக்கிறார், அவர் அனுப்பிய கடிதமும் இருக்கிறது. ``Because this Tribunal was constituted according to an Act of Parliament. the Government of India is bound to give a direction to the concerned State Government if it does not obey the Order" என்று அவரே, தெளிவாகக் கூறியிருக்கிறார். *(குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே வழக்கறிஞர் போல வாதத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். இதிலே உள்ள உண்மை நிலையை அவர் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏற்கனவே ட்ரைபியூனல் அளித்த உத்தரவை கெசட் நோட்டிபிகேசன் செய்ய வேண்டும் என்று சொன்னபோது, இப்படித்தான் ஒரு பிரச்சினை வந்தது. மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா, இல்லையா என்பதை எல்லாம் ஒரு பிரச்சினையாக எடுத்து வைத்தார்கள். அப்போதுகூட அதிகாரம் இல்லை என்றுதான் வாதிடப்பட்டது. ஆனால் மத்திய அரசு 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே கெசட் நோட்டிபிகேசன் செய்தது. ஆகவே, அவர் விளக்கங்களைச் சொல்லி கொண்டு இருப்பதைவிட, இதைச் செயல்படுத்த முடியுமா என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும். இது தவிர நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய தமிழக அரசும் 16 தடவை மத்திய அரசாங்கத்திற்கும், பிரதம அமைச்சர் அவர்களுக்கும், நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கெசட் நோட்டிபிகேசன் வந்ததற்குப் பின்னாலே, மானிட்டரிங் கமிட்டி போடவேண்டும், இம்ப்ளிமென்டேசன் கமிட்டி போடவேண்டும், தண்ணீர்ப் பற்றாக்குறையாக இருக்கிற நேரங்களிலே தண்ணீரைத் திறந்துவிடுவதற்கு மத்திய அரசு ஆவன செய்யவேண்டும் என்று 16 முறை வேண்டுகோள் விடுத்து இருக்கிறோம். எதற்கும் அவர்கள் செவி சாய்க்கவில்லை. ஆகவே, இதைப்போன்ற காரணங்களைச் சொல்லி, தட்டிக் கழிப்பது நியாயம் இல்லை. நாங்கள் உரிய நடவடிக்கைகள் எடுத்தபோதும், மத்திய அரசு சரியான முறையிலே செவி சாய்க்கவில்லை என்பதுதான் இங்கே உள்ள உண்மையான நிலை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am quoting from Justice Sarkaria whereas the Hon. Chief Minister is quoting from the former Advocate-General. who according to her was sacked. *(குறுக்கீடு)*

[1995 டிசம்பர் 28

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆக்டிலே புரவிசன் இல்லை என்று சொன்னால்-இந்த இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற அத்துணை மாநிலங்களுக்கும் நீதிமன்றத்தினுடைய வாயிலாக வருகிற ஜட்ஜ்மெண்ட்டை இம்ப்ளிமென்ட் செய்வதற்கு. இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினையானால்—இரண்டு மாநிலங்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்படுகிறபோது, இந்த நாட்டிலே பிரச்சினை ஏற்படுகிறது. எனவே—மத்திய அரசுக்கு இதைத் தீர்க்க வேண்டிய தலையாய கடமையிருக்கிறது.

எனவே, அப்படியிருக்கிறபோது, ஒருவேளை ஆக்டிலே புரவிசன் இல்லை என்றால், அந்தப் புரவிசனை ஏற்படுத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறதா, இல்லையா. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மனம் இல்லாமல், புரவிசனை கணக்குக் காட்டிக் கொண்டிருக்கிறார்களே, என்பதுதான் எங்களுக்கு இருக்கிற சந்தேகம். ஏற்கனவே மத்திய அரசாங்கம் இதைச் செய்யவில்லை என்று சொல்லி, பலமுறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நேரடியாகவும், கடிதத்தின் மூலமாகவும் தெரிவித்து இருக்கிறார்கள். இதைவிட எப்படி அணுக முடியும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொல்லவேண்டும். இதைவிட ஒரு முதலமைச்சரோ அல்லது ஒரு அரசாங்கமோ, எப்படி அணுகமுடியும்? இப்படி எல்லாம் அணுகியும், இதற்கு பதில் கிடைக்கவில்லை என்று சொன்னால், இந்த அரசாங்கம் என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள்? அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஏற்கனவே, தமிழகத்திலே இருக்கிற கோடிக்கணக்கான மக்கள் நொந்து போய் இருக்கிறார்கள். வேதனையோடு இருக்கிறார்கள். நீங்கள் பேசிய பேச்சு, வெளியிலே வருகிறபோது, இன்னும் மோசமான நிலைமை, உங்களைப் பற்றி அவர்களுக்கு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. ஆர். சிங்காரம்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேசன்.. .. .. ..

திரு. சஞ்சய் ராமசாமி: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of Clarification என்பது வேண்டாம். Point of order என்று அவர் கேட்கிறார். திரு. சஞ்சய் ராமசாமி. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

1995 டிசம்பர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சஞ்சய் ராமசாமி பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டிருக்கிறார்.

தி.மு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, it is rather a shame that the Leader of the Opposition, instead of supporting the citizens of Tamil Nadu, is trying to circumvent this problem which magnanimously . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு)

தி.மு. சஞ்சய் ராமசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது. தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக எல்லோரும் ஆதரிக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறான முறையில் பேசக்கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு)

தி.மு.மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, சில கருத்துக்களைச் சொல்கிறார்கள். அதற்கு ஒரு உறுப்பினர் தவறுதலாக ஒரு குறையைக் காண்பது சரியல்ல. அந்தக் குறையை நீக்க வேண்டும். அதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று நான் சொல்லிவிட்டேன். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தது மாதிரிதான் அவருக்கும் கொடுத்தேன். அவர் பேசியதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன். நீங்கள் ஆதரிக்கவேண்டும் என்று சொல்கிறார். அதை, இப்போது பாயின்ட் ஆப் ஆர்டரில் சொல்ல முடியாது என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

முற்பகல் 11-00

மாண்புமிகு தி.மு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சர்க்காரியா கமிஷனைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சர்க்காரியா கமிஷனுடைய

பரிந்துரையை மைய அரசு முழுமையாக ஏற்றுக்கொண்டு பார்லிமெண்டில், அதை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கின்றதா? மைய அரசு சர்க்காரியா கமிஷனுடைய பரிந்துரை எதையுமே எடுத்துக் கொள்ளாமல் குப்பையிலே தள்ளியிருக்கின்றது என்பதை அவர் அறிவாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற காவிரி நதி நீர்ப் பிரச்சினையில், தஞ்சை மாவட்டம், நாகை மாவட்டத்தினுடைய உயிர் நாடி பிரச்சினையில் இங்கே இருக்கிற எதிர்க்கட்சிகள் மிகப் பொறுப்புணர்வோடு, அரசியல் நிதானத்தோடு தமிழகத்தைப் பாதுகாக்கக் கூடிய வகையில் இந்த விவாதம் நடைபெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதே நேரத்தில் கர்நாடக அரசினுடைய சட்டமன்றமும் கூடியிருக்கிறது. அங்கே அனைத்து அரசியல் கட்சிகளிலே கொள்கை வேறுபாடு இருந்தாலும், அரசியல் முரண்பாடு இருந்தாலும், தங்கள் மாநில நலனுக்காக பொறுப்புணர்வோடு நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை தமிழ்நாட்டில் இருக்கிற அரசியல் கட்சிகள் உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் ஒட்டுமொத்த நலனுக்காக இந்தத் தீர்மானம் இன்று கொண்டுவரப்பட்டுள்ளது. அதை நான் முன்மொழிந்து இருக்கிறேன். இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்து, வேறு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதை விட்டு விட்டு, மாறாக ஒரு அரசியல் நோக்கோடு இந்த அரசின் மீது குறை கூற வேண்டும். பழிபோடவேண்டுமென்ற எண்ணத்துடனேயே பேசுவதாக எனக்குத் தெரிகிறது. தொடக்கத்திலேயே இந்த அரசு மெத்தனம் காட்டிவிட்டது. ஆற்றலோடு செயல்படவில்லை என்று சொன்னார். இது எந்தவகையிலேயும் நியாயமான கூற்று அல்ல, ஏற்றுக்கொள்ள முடியாது. அதை ஆணித்தரமாக மறுக்கிறேன்.

ஜூன் மாதம் நமக்குக் கிடைக்க வேண்டிய காவிரி நீரின் அளவு 10.16 டி.எம்.சி. அடி ஆகும். ஆனால் நமக்குக் கிடைத்தது 4.29 டி.எம்.சி. அடி மட்டுமே. அதில் ஏற்பட்ட 'ஷார்ட்ஃபால்'-பற்றாக்குறை 5.87 டி.எம்.சி. அடி நீராகும். ஜூலை மாதத்திற்குரிய காவிரி நீரான 42.76 டி.எம்.சி. அடி நீரில் 22.03 டி.எம்.சி. அடி நீரை மட்டுமே கர்நாடகம் வழங்கியது. அதிலே

1995 டிசம்பர் 28] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

20.73 டி.எம்.சி. அடி நீர் பற்றாக்குறை ஏற்பட்டதைத் தொடர்ந்து 1-8-1995 அன்றே உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம்.

`Interlocutory Petition` file செய்திருக்கிறோம். இதில் தமிழக அரசின் தரப்பில் மெத்தனம் என்பதற்கே இடமில்லை. மாறாக முனைப்புடன் செயல்பட்டிருக்கிறோம், ஆற்றலுடன் செயல் பட்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. மேலும் இந்த வழக்கினை விரைவில் விசாரிக்க வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தியதால்தான் உச்சநீதிமன்றம் *21-8-1995, 25-8-1995, 28-8-1995, 30-8-1995, 7-9-1995, 5-11-1995* மற்றும் *5-12-1995* ஆகிய நாட்களில் விசாரணையை மேற்கொண்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவரங்களை எல்லாம், இந்த உண்மைகளை எல்லாம் மறைத்துவிட்டு, இருட்டடிப்பு செய்யப் பார்த்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ' Why did you not take steps to expedite this case in the Supreme Court ?' என்று கேட்டிருக்கிறார். இப்போதுதான் இத்தனை தேதிகளையும் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். நாங்கள் முனைப்புடன் வற்புறுத்தி, வற்புறுத்தி, மீண்டும் மீண்டும் எக்ஸ்பெடைட் செய்யவேண்டுமென்று கேட்டதால்தான் இத்தனை முறை இந்தக் கேஸ் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறை கூறிக் கொண்டே யிருக்கிறார். வேறு என்ன செய்யவேண்டுமென்று எண்ணுகிறார்? என்னென்ன செய்யமுடியும்? கர்நாடக முதலமைச்சருடன் பேச முடியும். அவருக்குக் கடிதம் எழுதமுடியும். அதையெல்லாம் நான் செய்திருக்கிறேன். பலமுறை அவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவரை நேரிலும் சந்தித்துப் பேசியிருக்கிறேன். தொலைபேசியிலும் அவரிடம் பேசியிருக்கிறேன். ஆனால் அவர் நம்முடைய கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை. டிரிப்யூனலை அணுகி இருக்கிறோம். சுப்ரீம் கோர்ட்டை அணுகி இருக்கிறோம். மத்திய அரசை அணுகி இருக்கிறோம். பாரதப் பிரதமரை அணுகி இருக்கிறோம். வேறு என்ன செய்யவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நினைக்கிறார்? வேறு என்ன செய்ய முடியும் என்பதை அவர் இங்கே கூறவேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: காய்ந்து கொண்டிருக்கிற பயிரைக் காப்பாற்ற உடனடியாக காவிரியிலே தண்ணீர் வரவேண்டும். அதற்கு என்ன செய்யவேண்டுமென்று . . . (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அக்கறை எங்களுக்கு உள்ளதால்தான் பவானியிலேயிருந்து *10* டி.எம்.சி. அடி தண்ணீரை இப்பொழுது விட்டு

13.3 லட்சம் ஏக்கரில் உள்ள பயிரை காப்பாற்றுகின்ற வகையில் இந்தத் தண்ணீரை விட்டதால் தான் குறைந்தபட்சம் 10,000 ஏக்கரிலுள்ள பயிரை நாங்கள் காப்பாற்றுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: அந்த அக்கறை எனக்கும் இருக்கிற காரணத்தினாலே தான் (கூச்சல்) நாம் என்ன செய்ய வேண்டும், என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று...(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். கர்நாடகத்தில் அங்கே அனைத்துக் கட்சிக் கூட்டமாகட்டும், சட்டமன்றக் கூட்டமாகட்டும், இந்தக் காவிரி நதிநீர் பிரச்சினையில் அனைத்துக் கட்சிகளும் அரசியல் மனமாச்சரியங்களை மறந்து, ஓரணியில் திரண்டு நிற்கிறார்கள். இதை இந்தியா முழுமையுமே பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் சொல்வதற்கே வேதனையாக இருக்கிறது, வெட்கமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே நம்முடைய தயவால் பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கிறவர்கள், இந்தப் பிரச்சினையில் அக்கறையைக் காட்டாமல் (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடகத்திற்கு சாதகமாகப் பேசிக் கொண்டிருப்பது வெட்கக்கேடு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கெனவே சொன்னேன், இதை அரசியலாக்க முனையாதீர்கள் என்று. அதை எதிர்க்கட்சித்தலைவர் ஆரம்பித்து வைக்கிறார். நான் இதனால்தான் முதலிலேயே சொன்னேன், பல்வேறு பிரச்சினைகளில் மாறுபாடு இருக்கலாம், இந்தப் பிரச்சினையில் இருக்க வேண்டாம், நாம் இங்கே ஒருமுகமாக இருக்கிறோம் என்பதை உங்களுடைய வாதத்திலே காண்பிக்க வேண்டும் என்பதற்காக நான் சொன்னேன். எப்படித் தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வார்த்தைக்கு வார்த்தை அளந்து போட்டிருக்கிறார் என்பதையும் மனத்திலே வைத்து நீங்கள் பேசுங்கள் என்றும் சொன்னேன். அது வேறுவிதமாகப் போய்க் கொண்டிருக்கிறபோது, இந்த வாதத்தினுடைய தன்மை கர்நாடகத்தினுடைய கோரிக்கைக்கு வலு சேர்க்கிற வகையில் இருந்து விடக் கூடாது என்று பல நேரங்களில் இடைமறித்துச் சொன்னேன். மீண்டும் மீண்டும் போன காரணத்தினாலேதான் திரும்பவும் கேட்டுக் கொள்கிறேன், அரசியலை விட்டுவிட்டு இதற்கு என்ன வழி என்பதைச் சொல்லுங்கள்.

1995 டிசம்பர் 28]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை மிக்க பணிவன்போடு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். எதையாவது அரசியலாக்கி வெளிநடப்புச் செய்ய வேண்டும் என்று இங்கே அதற்கு வழி தேடாமல் தயவு செய்து நீங்கள் இதிலே ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம்முடைய முன்னுரையிலே மிகத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். சூழ்நிலைகள் மற்றவைகளையெல்லாம் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். இன்றைய நிலையில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கான வகையில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தில் விளக்கங்கள் சொல்லியதற்குப்பிறகு, இறுதியாக மூன்று கோரிக்கைகளை தீர்மானத்தினுடைய வடிவிலே இடம்பெற வேண்டும் என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இந்த மூன்றைப் பொறுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன கருதுகிறார்கள். இதிலே எதாவது சேர்க்க விரும்புகிறாரா? அல்லது குறைக்க விரும்புகிறாரா? மாற்ற விரும்புகிறாரா? வேறுபடுத்த விரும்புகிறாரா? என்பதைச் சொல்லி இந்த மூன்றை மட்டும் இந்த அவை ஏற்றுக் கொள்கிறது என்ற அளவுக்குக் கொண்டு வருவார்களேயானால் நாட்டுக்கு நல்லது. நாம் ஒருமித்த ஏகோபித்த எண்ணத்தை வெளிப்படுத்தினோம் என்ற பெயராவது வரும். அதையாவது செய்ய வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாதத்திற்கு மருந்து உண்டு. பிடிவாதத்திற்கு மருந்து இல்லை என்று சொல்வார்கள். இன்றைக்கு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பிரச்சினையை அரசியலாக்கி திசை திருப்புகிற பிடிவாதத்தை தான் செய்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, இதிலே அவர்களுக்கு தீர்வு காண்பதற்கு அக்கறை இல்லை என்பது அவருடைய வாதத்திலேயிருந்து தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறாரா எதிர்க்கிறாரா என்று ஒரு வரியில் சொல்லிவிட்டால்

நாட்டு மக்களுக்கு அதனுடைய கலர் தெரிந்துவிடும் அதுபற்றி தெரிவிக்க வேண்டும் என்று அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தீர்மானத்தை முழுமையாக ஆதரிக்கிறேன். அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் எங்களுடைய கருத்துக்களை, எண்ணங்களைக் கூடச் சொல்லக் கூடாது என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. முதலமைச்சர் கோபத்திலே சில வார்த்தைகளை இங்கே சொன்னார்கள். நான் பதிலுக்குச் சொல்ல முடியும். ஆனால் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கோபத்தில் பேசவில்லை. வேதனையில் தான் பேசினேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைவிட கனத்த இதயத்தோடு இங்கே பேசுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். கர்நாடக மாநிலத்தில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் அவர்களுக்கு ஆதரவாக இருக்கின்றன என்று சொன்னார்கள். இங்கே இருக்கிற எதிர்கட்சிகளும் நிச்சயமாக உங்களுக்குத் துணை நிற்பார்கள். கர்நாடக மாநிலத்தில் எத்தனை முறை திரு. தேவ கௌடா எதிர்க் கட்சிகளை சமீப காலத்தில் கூட்டிப் பேசியிருக்கிறார். நீங்கள் ஒருமுறையாவது கூட்டிப் பேசியிருக்கிறீர்களா? ஏன் பேசவில்லை? சட்ட சபையில் மட்டும் அல்ல, எதிர்க் கட்சிகளை வெளியிலேயும் கூட்டி பேசி இருக்கலாம். அவர் தினசரி கூட்டிப் பேசுகிறார். இன்றையதினம், இங்கே சட்டமன்றம் கூடியிருக்கிறது. தீர்மானம் நாம் நிறைவேற்றுகிறோம். உச்ச நீதிமன்றத்திற்கு நாம் செல்ல வேண்டும். நமக்கும் சரி, கர்நாடக அரசுக்கும் சரி, மத்திய அரசுக்கும் சரி, ஆணைகள் பிறப்பிக்கக் கூடிய ஒரே இடம் உச்ச நீதிமன்றம்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் அடிக்கடி அந்த மாநில முதலமைச்சர் எதிர்க்கட்சிகள் கூட்டத்தை, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுகிறார் என்று சொன்னால், அவருடைய நிலைமை அப்படி. அவருடைய நிர்ப்பந்தம் அப்படி. அதாவது, அவர்கள் சட்டப்படி, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு நடக்க விரும்பவில்லை. அதற்கு அவர்கள் ஆதரவு தேடுகிறார்கள். அவர்கள் எடுக்க வேண்டிய தவறான முடிவுகளுக்கு ஆதரவை நாடி அவர்கள் அடிக்கடி இத்தகைய அனைத்துக் கட்சிக் கூட்டங்களைக் கூட்டுகிறார்கள். நம்மைப்

1995 டிசம்பர் 28] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பொறுத்தவரை (மேசையைத் தட்டும் ஒலி) நாம் ஏற்கெனவே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். அனைத்துக் கட்சிகளின் ஆலோசனை களையும் கேட்டிருக்கிறோம். அந்த ஆலோசனைகளின் படிதான் நடந்து கொண்டு இருக்கிறோம். எங்களைப் பொறுத்தவரை, என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, சட்டத்திற்கு உட்பட்டு, அந்த நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகிறோம். இப்போது, இந்தத் தருணத்தில் எதிர்க்கட்சி, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டினால், என்ன ஆலோசனை வழங்குவார்கள் ? சுப்ரீம் கோர்ட்டை அணுகுங்கள், டிரிபியூனலை அணுகுங்கள், மத்திய அமைச்சரை, பிரதமரை அணுகுங்கள், மத்திய அரசை வற்புறுத்துங்கள், கர்நாடக முதலமைச்சருடன் பேசுங்கள், அவருக்குக் கடிதம் எழுதுங்கள், பிரதமருக்குக் கடிதம் எழுதுங்கள். இத்தகைய ஆலோசனைகளைத்தானே அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கூற முடியும். அதைத்தானே நாங்கள் ஏற்கெனவே செய்து கொண்டு இருக்கிறோம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசாங்கமாக இருந்தாலும், கர்நாடக அரசாங்கமாக இருந்தாலும், மத்திய அரசாங்கமாக இருந்தாலும், என்ன செய்யவேண்டுமென்று ஆணை பிறப்பிப்பது சுப்ரீம் கோர்ட் ஒன்று தான் செய்ய முடியும். சுப்ரீம் கோர்ட் டிவிஷன் பெஞ்ச் இன்றைய தினம் நம்முடைய மனுவின்மீது தீர்ப்பு அளிக்க இருக்கிறது. அந்தத் தீர்ப்பு என்ன என்று நமக்குத் தெரியாது. அந்தத் தீர்ப்பு என்ன என்று அறிந்து நாளைய தினம் தீர்மானம் நிறைவேற்றி இருந்தால், இன்னும் நலமாக இருக்கும். இன்றையதினம் நாம் ஆணை கேட்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் இன்று அந்த வழக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று முன்பே எங்களுக்குத் தெரியாது. நாங்கள் அணுகியபோது, சுப்ரீம் கோர்ட் சீஃப் ஜஸ்டிஸ் வெளிநாட்டில் இருந்தார். அவர் வெளிநாட்டிலிருந்து திரும்பி அவசரமாக நாங்கள் வற்புறுத்தியதால், இன்று எடுத்துக் கொள்வதாக நேற்றுதான் முடிவு செய்து இருக்கிறார்கள். ஆகவே முன்கூட்டியே எங்களுக்கு இது தெரியாது. ஆகவே, கர்நாடகத்தில் அவர்கள் சட்டமன்றத்தைக் கூட்டுகிறார்கள் என்று சொன்னபோது, நாங்களும் இங்கே கூட்டவேண்டும் என்று, இதற்கு அவசிய, அவசரம் உண்டு என்றுதான் 28-ஆம் தேதி என்று முடிவு செய்து இன்று கூட்டியிருக்கிறோம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இன்று கூடினாலும், தீர்மானம் இன்று

நிறைவேற்றவில்லை. நாளை நிறைவேற்றப் போகிறார்கள். அதேபோல், நாளைக்கு நிறைவேற்றியிருக்கலாம். ஒன்றும் அவசரம் கிடையாது.

மாண்புமிகு டாக்டர். ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்தில் இன்று நிறைவேற்றினாலும், நாளை நிறைவேற்றினாலும் அவர்கள் என்ன நிறைவேற்றப் போகிறார்கள். அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அங்கே என்ன தீர்மானம் நிறைவேற்றினார்களோ, அதைத்தானே அவர்கள் சட்டமன்றத்திலும் நிறைவேற்றப் போகிறார்கள். அதில் என்ன சொல்லுகிறார்கள், தண்ணீர் திறந்துவிட முடியாது, இப்போது எங்களிடம் போதுமான தண்ணீர் இல்லை என்று கூறப்போகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை எங்களுக்கு அவசர அவசியம் உள்ளது. ஆகவே, திறந்து விடுங்கள், திறந்து விடுங்கள் என்று கோருகிறோம். அதில் எதற்கு நாம் தாமதம் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு தி.மு.க. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு வருகிறது என்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு இன்றைக்கு வருகிறது என்கிறபோது, சட்டமன்றத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் இதற்கெல்லாம் ஏகமனதாக ஆதரித்தார் என்று சொன்னால் நமக்கு வலு ஏற்படும். ஆனால், இதற்கு வலு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் நீங்கள் தேவ கவுடா செய்ய வேண்டியதை இங்கே செய்து கொண்டிருப்பது மட்டும் அல்ல, இங்கே அவர்கள் பேசுகிறபோது முதலமைச்சர் எங்கள் மீது குறை சொன்னார்கள் என்று சொன்னார்கள். இதையெல்லாம் நீங்கள் முன்கூட்டியே பேசுவதற்காக எழுதிக்கொண்டு வந்து இங்கே படித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் தண்ணீர் இல்லை என்று சொல்வார்கள் என்று சொன்னார்கள். தண்ணீர் போதிய அளவிற்கு இருக்கிறது என்று நடுவர் மன்றம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. நமக்கு 11 டி.எம்.சி. தண்ணீர் விட்டபிறகும், அவர்களுக்கு பாசனத்திற்கு போதிய 56 டி.எம்.சி.-க்கு மேலான தண்ணீர் இருக்கிறது.

மேலும் தண்ணீர் கிடைக்கக் கூடும் என்றும் நடுவர் மன்றம் தன்னுடைய தீர்ப்பிலே கூறியிருக்கிறது. எனவே அவர்கள் வாதங்களைச் சொல்லட்டும். We must keep the heat on. நாம் பல முறையிலேயும் எப்படியெல்லாம் அவர்களை நிர்பந்திக்க முடியுமோ அவற்றைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் ``We must keep the heat on" என்றார். அதை நான் நூற்றுக்கு நூறு முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதில் என்ன அவருக்கும் எனக்குமுள்ள வேறுபாடு என்றால் we are trying to keep the heat on Karnataka, he is trying to keep the heat on us (Thumping of desks)

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே போல முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்தார்கள். டெல்லியிலே நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டி இந்தப் பிரச்சினையில் முழுமையாக தமிழகத்தினுடைய நிலையை ஆதரிக்க வேண்டும் என்று அவர்களிடத்திலே பேசி அந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து நாடாளுமன்றத்திலே எழுப்புவதற்கு அவர்களிடத்திலே பேசியிருக்கலாம். அதேபோல இந்தப் பிரச்சினை நமக்கு...

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நாடாளுமன்ற உறுப்பினர்களையெல்லாம் சந்தித்து அவர்களையும் அழைத்துக் கொண்டு பிரதமரைப் போய்ச் சந்திக்க வேண்டும் என்றுதான் திட்டமிட்டிருந்தேன். ஆனால் அன்றையதினம் திடீரென்று இந்தப் பயணம் முடிவானதால் ரெகுலர் பிளைட்டில் செல்ல முடியவில்லை. ஒரு சார்ட்டர்டு ஏர் க்ராஃப்ட் அதுதான் கிடைத்தது. அதில் செல்லவேண்டியிருந்தது. அது தாமதமாக வந்ததால் பிரதமர் அவர்கள் ஏற்கெனவே மாலை 7 மணி என்று நேரம் கொடுத்துவிட்டதால் நான் ஏர்ப்போர்ட்டிலிருந்து நேராக பிரதமர் இல்லத்திற்குத்தான் சென்றேன். அங்கு அவரைச் சந்தித்தேன். அதன்பிறகுதான் நான் தமிழ்நாடு இல்லத்திற்குச் சென்று மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க முடிந்தது. ஆகவே வேண்டுமென்றே திட்டமிட்டு இப்படி நான் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே போல நம்முடைய நிலையிலே இருக்கக்கூடிய கேரளா,

புதுவை மாநில முதலமைச்சர்களையும் கலந்துகொண்டு கூட்டு முயற்சியிலே இறங்கியிருப்போமேயானால் நம்முடைய நிலையை அவர்களும் ஆதரித்திருப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 20.5 டி.எம்.சி. தண்ணீரை விட வேண்டும் என்று நடுவர் மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. நமக்குத் தெளிவான உத்தரவு இருக்கிறது. அந்த உத்தரவை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் நாம் உச்ச நீதிமன்றத்திற்கு சென்றோம். அவர்கள் இப்போது இருக்கின்ற தேவையைக் கணக்கிட வேண்டும் என்று அங்கே நம்முடைய நடுவர் நீதிமன்றத்தை அணுகச் சொன்னார்கள். நாம் அணுகினோம். அவர்களும் இத்தனை டி.எம்.சி. உடனே விட வேண்டும் என்று உத்தரவிட்டுவிட்டார்கள். ஆகவே நம்மிடத்திலே உத்தரவு தெளிவாக இருக்கிறது. நம் பக்கம் நியாயம் இருக்கிறது. ஆகவே நமக்கு வேண்டிய தண்ணீரை உடனே பெறுவதற்கு மற்ற மாநிலங்களை எல்லாம் அழைத்துக் கொண்டிருந்தால் இருக்கின்ற பயிரைக் காப்பாற்ற முடியாது. நடுவர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு 11 டி.எம்.சி. தர வேண்டும் என்பது. சுப்ரீம் கோர்ட்டிலே நாம் சொல்லி அதனுடைய ஆலோசனைப்படி நாம் ட்ரிபியூனலுக்குப் போனதற்குப் பின்னாலே கிடைத்திருக்கின்ற தீர்ப்பை இம்ப்ளிமெண்ட செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லாமல் பல யோசனைகளை நம்முடைய எதிர்கட்சித் தலைவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அது காலதாமதத்திற்கு வழி வகுக்கும். நம்மிடத்திலே தீர்ப்பு இருக்கிறது. தீர்ப்பை நிறைவேற்ற வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் தெளிவு படுத்த வேண்டும். நாம் உத்தரவைப் பெற்றிருக்கிறோம்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: தலைவர் அவர்களே, யோசனைகளைச் சொல்லுங்கள் என்று சொல்கிறீர்கள். யோசனைகளைச் சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதற்கும் பதில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர்களுடைய வாதம், யோசனை இந்தத் தீர்மானத்தை எப்படி நிறைவேற்றுவது, இதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதற்குக் கேட்டார்கள். இதை எப்படிக் கிடப்பிலே போட வேண்டும் என்பதற்கு யோசனை சொல்லுங்கள் என்று அவர்கள் கேட்கவில்லை. மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

1995 டிசம்பர் 28]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, II டி.எம்.சி. தண்ணீரைப் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டும். கேரளாவிலே போய்ச் சொன்னால் கொடுத்துவிடுவார்களா கர்நாடகத்துக்காரர்கள்? வீண் காலதாமதம். மத்திய அரசே சொல்லி கொடுக்க மறுக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறோம். அங்கேயும் காலதாமதம் செய்துகொண்டிருக்கிறார்கள். கேரளாவிலே பேசி என்ன பலன் கிடைக்கும்? இது வீணாகப் பிரச்சினையை திசை திருப்புவதாக அமையுமே தவிர நல்ல யோசனையே அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே நீங்கள் சொன்னீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே அவருடைய முன்னுரையாக இருந்தாலும் சரி, தீர்மானமாக இருந்தாலும் சரி எவ்வளவு கவனத்தோடு ஒவ்வொரு வார்த்தையாகப் பார்த்து இதற்கு வலு சேர்ப்பதற்கு யாருடைய மனமும் புண்படாமல், எவ்வளவோ பிரச்சினைகள், எவ்வளவோ சொல்ல வேண்டிய கருத்துக்கள் இருந்தாலும் கூட, அதையெல்லாம் கொஞ்சம் கூட காட்டிக்கொள்ளாமல் அதைத் தயாரித்து அவர்கள் இங்கே கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஆரம்பத்திலேயிருந்து பேசுவது எப்படியாவது ஏதாவது ஒரு இடத்தில் முதலமைச்சர் அவர்களோ அல்லது இந்த அரசாங்கமோ இதிலே நடவடிக்கை எடுக்கத் தவறியிருக்கிறது என்பதை எப்படியாவது ஒரு இடத்திலே காட்ட வேண்டும் என்பதற்காக பெரும் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான், தமிழகத்திலே எங்கேயும் அதைச் சொல்ல முடியாமல் கேரளாவிற்குப் போயிருக்கிறார்கள். எனவே, நாங்கள் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்வது இந்தப் பிரச்சினையிலே அரசாங்கம் முழுமையாக எந்த ஒரு சின்ன சுணக்கமும் இல்லாமல் நடவடிக்கை எடுத்து முடித்தாகிவிட்டது. இனிமேல் எடுக்கப்போக வேண்டிய நடவடிக்கை என்ன? இந்தத் தீர்மானத்திற்கு மேலே நாம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம்? அவர்கூட ஒன்றைச் சொன்னார். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட் வந்த பின்னாலே இந்தத் தீர்மானத்தை போட்டிருக்கலாம் என்று சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட் வந்த பின்னாலே, அந்த ஜட்ஜ்மெண்டை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கே வந்துவிடுகிறது. அதற்கு இங்கே, சட்டமன்றத்திலே தீர்மானம் போட்டுத்தான் அங்கே செய்ய வேண்டுமா? உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை முதலமைச்சர் அழைத்துப் பேசிய பின்னால்தான் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமா?

நீங்களாக தமிழகத்திற்காக எதையும் செய்ய மாட்டீர்களா? இந்தப் பிரச்சினை இங்கே கொதித்துக் கொண்டு இருக்கிறது. நீங்களே இதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று உங்களுக்கு எண்ணம் வராதா? முதலமைச்சர் இங்கே கூட்டம் போட்டு உங்களை எல்லாம் கேட்டுக்கொள்ள வேண்டுமா? நீங்களாக தமிழகத்திற்காக என்ன செய்யப் போகிறீர்கள்? இது ஒரு கொதிக்கிற பிரச்சினை. கர்நாடக மாநிலத்திலே எல்லோரும் சேர்ந்து செய்துகொண்டு இருக்கிறார்கள். அங்கே அவர்கள் எல்லாம் சேர்ந்து பேசிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு கட்சியிலே இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள், நீங்களாக என்ன செய்து இருக்கிறீர்கள்? நான் உங்களைக் கேட்கிறேன். உங்கள் கட்சியிலே இருக்கிற தலைவர்கள் கூட்டம் போட்டு இதற்காக நாம் என்ன செய்ய வேண்டும். காங்கிரஸ் கட்சி சார்பாக என்ன செய்ய வேண்டும்?

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அண்மைக்காலமாக அடிக்கடி டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்து இருக்கிறார். அப்படி சந்திக்கும்போதெல்லாம் எங்கள் மீது ஊழல் குற்றச்சாட்டைச் சொல்லி இந்த அரசாங்கத்தைக் கலையுங்கள், கலையுங்கள், கலையுங்கள் என்று பேசுகின்ற நேரத்தில், காவிரியில் தண்ணீர் விடச் சொல்லுங்கள் என்று பேசி இருக்கக் கூடாதா? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்றுவரை ஒருமுறைகூட இந்த அரசாங்கத்தைக் கலையுங்கள் என்று யாரையும் கேட்டுக் கொண்டது இல்லை. இது ஒன்று. இரண்டாவது நான் பலமுறை பிரதமரைச் சந்தித்தேன் என்று சொன்னார்கள். நீங்கள் தேவகௌடாவுக்கு எழுதுவதற்கு முன்பே, நான் அபாயச் சங்கு ஒலித்து இருக்கிறேன். நான் வேண்டுகோள் விடுத்து இருக்கிறேன். நீங்கள் பிரதமருக்கு எழுதுவதற்கு முன்பாகவே, நான் பிரதமரிடத்திலே பேசி இருக்கிறேன். மீண்டும் டிசம்பர் மாதம் 9-ஆம் தேதி பிரதமரைச் சந்தித்து உடனடியாக காவிரியிலே தண்ணீர் வராவிட்டால் நிலுவைப் பயிர்கள் அத்தனையும் காய்ந்து போய்விடக் கூடிய அபாயம் இருக்கிறது, எனவே, இதிலே நீங்கள் தலையிடுங்கள் என்று நான் நேரடியாக அவரைச் சந்தித்துப் பேசி இருக்கிறேன். பத்திரிகையிலேயும் அந்தச் செய்தி வந்திருக்கிறது. நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்று என்னிடம் கேட்டீர்கள். நானும் பேசியிருக்கிறேன்.

1995 டிசம்பர் 28] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

நான் பிரதமரிடத்திலே இதுபற்றிப் பேசி இருக்கிறேன். நான் பேசவில்லை என்று நீங்கள் சொல்வது முறையாக இருக்காது. நான் பலமுறை பேசி இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர். மத்திய அரசில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இவர் இன்றைக்கு வலியுறுத்திக் கொண்டு இருக்கிறேன் என்று சொல்லி தமிழ் நாட்டையே ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார். அங்கே அவர் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பாரதப் பிரதமருக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள். தஞ்சை தரணியைச் சார்ந்தவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் அங்கே என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவேதான், காங்கிரஸ் கட்சியினுடைய நிலை காவிரி நீர் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் என்ன நிலையில் இருக்கிறது என்பதை இப்போது எதிர்கட்சித் தலைவர் நாட்டு மக்களுக்கு தெரிவித்து விட்டார். ஆகவே, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையிலும் காவிரி நீர் பிரச்சினையில் கர்நாடகத்தையும் தமிழகத்தையும் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்களேயொழிய, தமிழ்நாட்டு மக்களுக்குத் தண்ணீர் வரவேண்டுமென்ற அக்கறை காங்கிரஸ் கட்சிக்கு இல்லை என்பது இன்றைக்கு அவர் பேசுவதிலேயிருந்து தெரிகிறது.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்கு காவிரிப் பிரச்சினையிலே அக்கறை இல்லை என்று கூறுவது தவறான செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய பேச்சை வைத்துச் சொல்கிறார். இதுபற்றி நான் பேசுகிறேன்; அக்கறை இருப்பது போல் பேசுவேன் என்று நீங்கள் சொன்னால், பேசுங்கள். (குறுக்கீடு) அவர் சொல்வது, காங்கிரஸ் கட்சியினுடைய செயல்பாடுகளை வைத்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய பேச்சை வைத்து, அவர் ஆரம்பிக்கும்போதே, எதிர்கட்சித் தலைவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர், இப்போது இப்படிப் பேசி இருக்கிறார் என்றுதான் சொன்னார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் காங்கிரசுக்கு, காவிரியிலேயிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு

அக்கறை இருக்கிறது என்று நீங்கள் சொல்லுங்கள், சொல்லுங்கள் என்று இங்கே எங்களை வற்புறுத்துகிறார். தமிழக மக்கள் சொல்கிற அளவுக்கு நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். எங்களை வற்புறுத்தி நீங்கள் இந்த வார்த்தைகளையெல்லாம் வாங்கக்கூடாது. நீங்கள் பேசுகிற பேச்சிலே, நீங்கள் எடுக்கிற நடவடிக்கையிலே, நீங்கள் காட்டுகிற அக்கறையிலே தமிழக மக்கள் காங்கிரசுக்கு அக்கறை இருக்கிறது என்று சொல்லவேண்டுமேயொழிய நீங்கள் வற்புறுத்தி தலைவரிடத்திலே சொல்லி, எங்களைச் சொல்ல வைப்பது நியாயமல்ல.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திற்கு இந்த அரசு வழங்குகின்ற மின்சாரத்தை நிறுத்திப் பாருங்கள். அதற்குப் பலன் கிடைக்கிறதா என்று பார்ப்போம்.

மாண்புமிகு டாக்டர். ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நிறுத்தி விட்டோம். நிறுத்தி வெகுநாட்கள் ஆகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை எவ்வளவு முக்கியமான உயிர்நாடிப் பிரச்சினை என்பதையும் இதை அணுகுகின்ற முறை எப்படி இருக்க வேண்டுமென்பதையும் தாங்கள் தங்களுடைய முன்னுரையிலேயே எடுத்துத் தெரிவித்தீர்கள். இப்போது இருக்கிற பிரச்சினை உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு, நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. அதை நடைமுறைப் படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு சீரிய யோசனைகளை எதிர்கட்சித் தலைவர்கள் சொல்லலாம். இதிலே என்ன செய்யக் கூடும்; என்ன செய்ய முடியும் என்பதைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தீர்மான வடிவிலே கொண்டு வந்து இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த என்ன செய்ய முடியும், என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிச் சொன்னால் அது நாட்டுக்கும் நல்லது செய்ததாகும்; தமிழக மக்களுக்கும் நல்லது செய்ததாகும். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலைக்கும் அப்படி நடப்பது நல்லதாக அமையும்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்கு காவிரிப் பிரச்சினையில்

1995 டிசம்பர் 28] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அக்கறை உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் இங்கே தெரிவித்தார்கள். நாங்களும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார். நடவடிக்கைகளைப் பற்றி எப்படித் தெரிந்து கொள்கிறோம். அந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளிவருகின்றன. அவர்களும் இரகசியமாக எதையும் செய்துவிடவில்லை, நாங்களும் இரகசியமாக எதையும் செய்துவிடவில்லை. நம்மைப் பற்றி என்ன செய்திகள் பத்திரிகைகளில் வருகின்றன? உச்சநீதிமன்றத்தை அணுகினோம். நடுவர் மன்றத்தை அணுகினோம், கர்நாடக முதலமைச்சருக்குக் கடிதம் எழுதினோம், மாண்புமிகு பாரதப் பிரதமருக்குக் கடிகம் எழுதினோம், நேரில் சந்தித்தோம், காவிரிப் பிரச்சினைப் பற்றி வலியுறுத்திக் கூறினோம். கர்நாடகத்தை தமிழகத்திற்குத் தண்ணீர் விடும்படிச் செய்ய வேண்டுமென்று கோரினோம். இத்தகைய செய்திகள் நம்மைப் பற்றி வருகின்றன. ஆனால் அவர்களைப் பற்றி என்ன செய்திகள் வருகின்றன? பிரதமரைச் சந்தித்தார்கள், அ.தி.மு.க. அரசைக் கலையுங்கள் என்று கேட்டார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களுடன் கூட்டணி வைத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்கிறார்கள்; விருப்பமே இல்லாத ஒருவரை இழுத்து வந்து அவருடன் கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள், வற்புறுத்துகிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்டச் செய்திகள்தான் அவர்களைப் பற்றி பத்திரிகைகளில் வருகின்றன. அதற்கு யார் பொறுப்பு? நாங்களா பொறுப்பு? (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களோ, இவர்களுடைய கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களோ பிரதமரைச் சந்தித்து காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையைப் பற்றி வற்புறுத்தினார்கள் என்ற செய்தியை ஏன் அவர்கள் வெளிவரச் செய்யவில்லை? அந்தத் தவறு எங்களுடையதா?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிரதமரைச் சந்தித்து வலியுறுத்தியதும், பத்திரிகையிலே வந்திருக்கிறது, தமிழகத்தைச் சார்ந்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்து வலியுறுத்திய செய்தியும் பத்திரிகையில் வந்திருக்கிறது. முதல்வருக்கு பத்திரிகையிலே இருக்கின்ற செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. ஏதோ அச்ச உணர்வோடு எங்களைப் பார்க்கிறீர்கள். ஏதோ ஒரு கூட்டணி வரவிருக்கிறது, தன்னைத் தூக்கி அடிக்கவிருக்கிறது என்ற அச்சத்திலே எங்கள் மீது காய்ந்து விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சம் என்பது என்ன என்றே எங்களுக்குத் தெரியாது, (மேசையைத் தட்டும் ஒலி) யாருடன் கூட்டணி

வைத்துக்கொள்வது என்று அச்சப்படவோ அல்லது ஆதங்கப்படவோ எங்களுக்கு சிறிதும் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப் போனால் காங்கிரஸ் கட்சிதான் இன்றைக்கு அ.தி.மு.க.-வுடன் கூட்டணி வைத்துக்கொள்வதா, தி.மு.க.-வுடன் கூட்டணி வைத்துக்கொள்வதா அல்லது வேறு யாருடனாவது கூட்டணி வைத்துக்கொள்வதா என்று அவர்கள்தான் தனியாக நிற்க முடியாமல் அலைபாய்ந்து கொண்டிருக்கிறார்களே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) நான் இப்போதும் சொல்கிறேன், எப்போதும் சொல்கிறேன், நாங்கள் தனியாகவே நின்று தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தேர்தலில் வெற்றி பெற்றுக் காட்டுவோம் என்பதைச் சூளுரைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே நீங்கள் என்ன விளக்கம் சொல்லப் போகிறீர்கள்? திரு. டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே....(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு ஏதாவது வழி சொல்லுங்கள் என்று கேட்டால், வேறு எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டரா? என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட மக்களும், நாகை மாவட்ட மக்களும் குமுறி எழுந்து கொண்டிருக்கிறார்கள், உங்களுடைய தேர்தல் பிரச்சாரங்களை எல்லாம் வெளியிலே வைத்துக்கொள்ளலாம். ஆகையால், எங்களுடைய கொடுமைகளைத் தீர்ப்பதற்கு ஏதாவது உருப்படியான தீர்மானத்தை நிறைவேற்ற தாங்கள் உதவிபுரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, நீங்கள் சொல்வதற்கு முன்னரேயே, விவாதம் ஆரம்பிக்கின்றபோதே இப்படியெல்லாம் போகக்கூடாது என்று நானே வேண்டுகோள் விடுத்தேன். அதற்கு ஒரு எடுத்துக்காட்டும் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது தீர்மானத்திலே எப்படி வார்த்தைகளை அளந்து போட்டிருக்கிறார்கள் என்பதை அளவுகோலாக வைத்துக்கொண்டு பேசுவது தமிழ்நாட்டிற்கு நல்லது என்றும் சொன்னேன். அதை மீறிப்

போய் கொண்டே இருக்கின்ற காரணத்தினாலேதான் இதுவெல்லாம் வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் இந்தத் தீர்மானத்தின்மீது—இரண்டு தீர்மானமாக உள்ளது—உங்கள் மேலான கருத்துக்களைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பழனிசாமி அவர்களுடைய உணர்வுகளை நான் முழுமையாக மதிக்கிறேன். தண்ணீர் வரவேண்டும். தண்ணீரைக் கொண்டுவருவதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைத்தான் நான் சொல்கிறேன். ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு வியாக்கியானம். அதிலே தேர்தல் கூட்டணி பற்றிய பேச்சு வந்திருக்க வேண்டிய அவசியமே கிடையாது. முதலமைச்சர்தான் சொன்னார். தனித்து நிற்பீர்கள் என்று நான் சொல்லவில்லை. நீங்கள்தான் சொன்னீர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசியல் பேச வேண்டுமென்று இந்த அவை கூட்டப்பெறவில்லை. நானும் அந்த எண்ணத்தோடு இங்கே வரவில்லை. சற்று ஆராய்ந்து பார்த்தீர்களானால்,"என்னுடைய தொடக்க உரையிலும் சரி, நான் தீர்மானத்தை முன்மொழிந்தபோதும் சரி, சற்றும் அரசியல் கலப்பு இல்லாமல் இந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் மிக எச்சரிக்கையாக வார்த்தைகளைப் பயன்படுத்தி நான் பேசியிருக்கிறேன்.

முற்பகல் 11-30

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் தன்னுடைய உரையில் தொடக்கத்திலேயிருந்தே அரசியல் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார். அரசியல் ரீதியாக பல குற்றச்சாட்டுக்களை அவர் இங்கே அள்ளி வீசும்போது அதற்கு நாங்கள் பதில் சொல்லாமல் இருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்த்தால் அது எப்படி நியாயமாக இருக்கமுடியும். அவர் அரசியல் பேசப் பேச, நாங்களும் பதில் சொல்லவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இனியாவது இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து இந்தத் தீர்மானத்தின்மீது பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிச்சயமாக அரசியல் பேசவில்லை. ஆனால், சொல்லுகின்ற ஒவ்வொன்றுக்கும் வித்தியாசமான அர்த்தம் எடுத்துக் கொண்டால் நான் பொறுப்பல்ல. என்றாலும்கூட, இந்தப் பிரச்சினை மிக முக்கியமானப் பிரச்சினை. அடுத்து, என்ன செய்ய வேண்டும்,

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1995 டிசம்பர் 28

என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்கள். உச்சநீதி மன்றத்திற்கு நாம் இப்போது போய் இருப்பது சரியான அணுகுமுறை. உச்சநீதிமன்றத்திற்கு முன்னால் நாம் நம்முடைய தரப்பு வாதத்தை முழுமையாக வலியுறுத்த வேண்டும். வலியுறுத்தி, ஆணை பிறப்பிக்கப்பட நாம் கேட்க வேண்டும். கர்நாடக மாநில அரசாங்கம் உடனடியாக அந்த ஆணையை மதித்து நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பின்படி—ஏற்கெனவே அளித்த தீர்ப்பின்படி—இந்த நின்றுபோய்விட்ட 11 டி.எம்.சி. தண்ணீரை உடனடியாக வெளியிட வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்க வேண்டும். அத்துடன் அல்லாமல், மத்திய அரசாங்கத்திற்கும் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும். மத்திய அரசும் உடனடியாக கர்நாடக மாநிலத்தை தண்ணீர் விடும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். Under Art.256, the Government of India can issue direction to the Government of Karnataka. That can be done only when there is a decision. When the Superme Court says, this is our order, that is a decision. So, the Supreme Court is entitled to issue an order not only to the Government of Karnataka, it is competent to issue an order even against the Government of India to implement its order. If the Karnataka Government fails, they should be warned of strict action. Art.256 will be a proper thing. Next thing, if they fail, அடுத்து 365-ல்..(குறுக்கீடு) நான் 356-க்கு வரவில்லை. உங்களுக்குப் புரியாவிட்டால் நான் என்ன பண்ண முடியும்? In 365, look here, there is an order. There has been an order. முன்பு ஏற்கெனவே நடுவர் மன்றம் 205 டி.எம்.சி. தண்ணீரை விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டும் நீங்கள் விடவில்லை. இப்போது 11 டி.எம்.சி. தண்ணீரை உடனடியாக விடுவிக்க வேண்டும், நீங்கள் விடுவிக்காவிட்டால், விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்குமேயானால், பிறகு logical conclusion நீங்கள் விரும்புவீர்களேயானால் அதுவாகத்தான் இருக்க முடியும். நான் அதை வேண்டும் என்று கேட்கவில்லை. 256, 365-ம் வந்தவுடனே அந்த அரசாங்கம் நிச்சயமாகச் செயல்படும், நமக்குத் தண்ணீர் விடும் என்று நம்புகிறேன். காரணம், அரசியல் சட்டத்தின்மீது அவர்கள் சத்தியப் பிரமாண வாக்குமூலம் எடுத்திருக்கிறார்கள். "நாங்கள் அரசியல் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, நாங்கள் உண்மையாக நடந்து கொள்வோம்" என்று உறுதிமொழி மேற்கொண்டு பதவியில் அமர்ந்து உள்ள யாரும் உச்சநீதிமன்றத்தின் உத்திரவுகளை உதாசீனம் செய்துவிட முடியாது. சட்டத்தின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிற நம்முடைய ஜனநாயக அமைப்பில் சட்டத்திற்கு அப்பாற்பட்டவராக யாருமே செயல்பட முடியாது. இந்த பிரச்சினையில் நம்முடைய விவசாயிகளின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாப்பதற்கு இந்த அரசு மேற்கொள்கின்ற நியாயமான நடவடிக்கைகள் அனைத்திற்கும் ஒத்துழைப்பு கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை

1995 டிசம்பர் 28] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

மீண்டும் தெளிவுபடுத்துகிறேன். குறுகிய அரசின் மற்றும் கட்சிக் கண்ணோட்டங்களைக் கடந்து நமது மக்களின் உரிமைகளைக் காக்கும் புனிதப் போரில் இதய சுத்தியோடு இருக்க வேண்டும் என இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். இதில் மத்திய அரசுக்கு உள்ள பொறுப்புகளையும், கடைமைகளையும் சுட்டிக்காட்டி அண்மையிலே திரு.வி.சி. சுக்லா அவர்கள் பேசியிருந்ததையும், அதனை கர்நாடக மாநில துணை முதல்வர் ஏற்க மறுத்து கருத்து வெளியிட்டிருப்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, உச்சநீதிமன்றம், நடுவர் மன்றம் மற்றும் மத்திய அரசு உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருடைய ஒருமித்த ஆதரவைப் பெற்றுள்ள நமது விவசாயிகளின் காவிரி நீரைக் காக்கத் தவறினால் நிச்சயமாக தமிழ்ச் சமுதாயம் ஒருபோதும் மன்னிக்காது.

விதியே, விதியே, தமிழ்ச் சாதியை என்ன செய்ய நினைத்தாய் என்று விதியை நோக்கித்தான் வினா எழுப்புகிறேன். உங்களை நோக்கி எழுப்பவில்லை. எனவே, பேசிய உடனே கோபத்தைக் காட்ட வேண்டாம். தயவுசெய்து பேசுகிற வார்த்தைகளை கொஞ்சம் கவனியுங்கள் ** இந்த அரசின் நிலை அமைந்துவிட்டதை எண்ணி, உங்களின் முன்னாள் தலைமை வழக்குரைஞர் வருத்தத்தை வெளியிட்டிருக்கிறார். அதைத்தான் நான் சொன்னேன்.

முற்பகல் 11.35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நாம் இங்கே நிறைவேற்றுவதற்கே காரணம், மத்திய அரசாக இருந்தாலும் சரி, கர்நாடக அரசாக இருந்தாலும் சரி, ஏன் நீதிமன்றங்களிலும் கூட ஒருமித்த கருத்தோடு நியாய உணர்வுகளை நாம் வலியுறுத்துகிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான். அதற்காகத்தான் இது இங்கே கொண்டுவரப்பட்டு இருக்கிறது. ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே, நாங்கள் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒரு அரசியல் நோக்கத்தோடு ஏதோ இந்த அரசாங்கம் சரியாகச் செய்யவில்லை என்று எப்படியாவது சொல்லிவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு பேசி இருக்கிறார். கடைசியாக அவர் 'வைன்ட் அப்' செய்கிறபோது கூட அந்த வார்த்தை களை அவர் பயன்படுத்தியதன்மூலம் இந்த அரசாங்கத்தின் மீது ஒரு குற்றம் சொல்லவேண்டும் என்பதையே பிரதான நோக்கமாகக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொண்டு இங்கே அவர்கள் வந்திருக்கிறார்களேயொழிய, இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்துவதற்காக, அல்லது நமக்கு வலுவைச் சேர்ப்பதற்காக அவர்கள் வரவில்லை என்பதை அவர் நிரூபித்திருக்கிறார் என்று நாங்கள் கருதுகிறோம். இவ்வளவு நடவடிக்கைகள் அடுக்கடுக்காக எடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் எந்த நடவடிக்கை சரியாக இல்லை என்று ஒன்றையாவது அவரால் குறிப்பிட்டுக் காட்ட முடியவில்லை. அப்படியிருந்தும் கடைசியிலே, நாங்கள் சரியான நேரத்திலே நடவடிக்கை எடுக்கவில்லை என்பதாகச் சொல்லி அவர் முடித்திருப்பது இந்தத் தீர்மானத்தின் வலுவைக் குறைப்பதாகவேதான் அமைகிறது. அதற்காகத்தான் அவர் பேசி இருக்கிறார் என்பதை உணர்த்துகிற வகையில் அது இங்கே இருக்கிறது. எனவே இந்தத் தமிழகத்து மக்களுடைய நன்மையைக் கருதி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ற புள்ளிவிவரங்களைச் சொல்லியிருக்கிறோம். என்னென்ன நடவடிக்கைகள் அடுக்கடுக்காக எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நேரடியாக இதற்காக டெல்லிக்கேகூட உடனே சென்று பிரதம அமைச்சரைப் பார்த்திருக் கிறார்கள். இத்தனைக்கு பின்னாலே வேறு எந்தக் குற்றத்தைச் சொல்லி அவர் இப்படி ஒரு காரணத்தைச் சொல்கிறார். எதிலே நாங்கள் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் சொல்ல வேண்டும். இல்லை என்றால் தயவு செய்து அவர் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்கிக் கொண்டு, இந்தத் தீர்மானத்திற்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் முழுமையாக இதை நிறைவேற்றுவதற்கான ஏற்பாட்டை அவர் செய்ய வேண்டும். இல்லை என்றால் காங்கிரஸ் கட்சி இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறது என்றுதான் நாங்கள் எடுத்துக் கொள்ளவேண்டி இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், உழுகின்ற நேரம் மட்டுமல்ல, விதை போடுகிற நேரம், நீர் பாய்ச்ச வேண்டிய நேரம், களை எடுக்க வேண்டிய நேரம் என்று இப்படி எந்தெந்த நேரத்திலே எல்லாம் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை எல்லாம் சொல்லி கடைசியில் விளைகிற நேரத்திலே தண்ணீர் இல்லையே என்றுதான் இப்போது அவர்கள் சொன்னார்களே தவிர வேறல்ல. ஆனால் நீங்கள் அதற்கு நேர்மாறாகச் சொல்வது இந்தத் தீர்மானத்திற்கு ஒரு எதிர் விளைவைத்தான் உண்டாக்கும். எனவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் நீங்கள் எடுத்துக்காட்டிய அந்தப் பழமொழி தேவையில்லை என்று நினைக்கிறேன். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம்.

1995 டிசம்பர் 28]

தி.மு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: அதிலே என்ன தவறு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் சொன்னதை வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (குறுக்கீடு) நீங்களே வரவேற்றீர்கள். அதாவது முதலமைச்சர் அவர்கள் பேசிய அந்தப் பேச்சுக்களை எல்லாம் வரவேற்றீர்கள். (குறுக்கீடு) அதாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தெந்தத் தேதியில் என்னென்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் சொன்னதற்குப் பிறகு, நீங்கள் கூறிய இந்தப் பழமொழி தேவைதானா என்பதற்காகத்தான் வேண்டாம் என்று சொன்னேன். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

தி.மு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வாதம் அனைத்தும் உங்களுக்கு வலு சேர்க்குமே தவிர நிச்சயமாக உங்களுக்கு எந்த வகையிலும் பாதகமாக இருக்காது என்ற உறுதியை நான் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் பேசிய பேச்சுக்கள் எல்லாம் அவைக்குறிப்பிலே இருக்கிறது. பத்திரிகைகளிலும் வெளிவாப்போகின்றன. இன்றும் மாண்புமிகு எதிக்கட்சித் தலைவர் அவர்கள் பேசிய பேச்சு முழுவதுமே கர்நாடக மாநிலத்தின் வாதத்திற்குத்தான் வலு சேர்ப்பதாக அமையுமே தவிர நிச்சயமாக தமிழகத்திற்கு வலு சேர்ப்பதாக அது இல்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தி.மு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பலமுறை சொல்லி இருக்கிறேன். நம்முடைய நிலையை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது. நீங்கள் எடுத்திருக்கிற நிலையை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்துகிற நிலையில், ஏற்கெனவே செய்யாமல் விட்டிருக்கிற நிலைகளைத்தான் நான் எடுத்துச் சொல்கிறேன். அதிலே உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது என்பது தெரியவில்லை. கோபம் வந்தவுடனே ஏதேதோ பேசினார்கள். அதற்கெல்லாம்கூட நாங்கள் பதில் சொல்ல வரவில்லை. ஆகவே கிராமத்திலே வழங்கப்படுகிற பழமொழியைச் சொன்னால் அதை

அவைக்குறிப்பிலே இருந்து அகற்றவேண்டும் என்று அமைச்சர் கேட்கிறார் தாங்கள் அகற்றுகிறீர்கள்.

மாண்புமிகு போவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு தி.மு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, கிராமத்துப் பழமொழியைச் சொல்ல எல்லோருக்கும் தெரியும்.

மாண்புமிகு போவைத் தலைவர்: ஆகவே நீங்கள் ஒரு பழமொழியைச் சொல்ல வேண்டாம். அவர் சொன்னதை அவைக்குறிப்பிலே இருந்து நீக்கி விட்டேன்.

மாண்புமிகு தி.மு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நான் சொல்லவேண்டாம் என்று கூறுகிறீர்கள். மன்னிக்க வேண்டும். நான் சொல்லத்தான் போகிறேன். அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு போவைத் தலைவர்: அதை நான் அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட்டேன். அதற்குப் பிறகும் அது வருவது நல்லதல்ல. அவர் கூறியது அவைக்குறிப்பில் இருந்தால் நீங்கள் சொல்வது என்பது வேறு. ஆனால் அதை அவைக்குறிப்பிலிருந்து நான் நீக்கிவிட்டேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடிக்கட்டும். அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

தி.மு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, நடுவர் மன்றத்தினுடைய இடைக்கால ஆணையை நிறைவேற்றாமல் தொடர்ந்து கர்நாடக அரசு காலம் கடத்தி வந்தது. காலம் கடத்தி வருகிறது. தமிழகத்திற்குத் திறந்து விடுவதற்கு போதுமான தண்ணீர் இல்லை என்று முன்பும் வாதாடியது இப்போதும் வாதாடிக்கொண்டு இருக்கிறது.

முற்பகல் 11-40

ஆனால் அந்த வாதத்தைப் பரிசீலனை செய்த நடுவர் மன்றம் அதை ஏற்க மறுத்துவிட்டது. எனவே எந்த அடிப்படையில் பார்த்தாலும் தமிழகத்தின் நிலைதான் நியாயமானது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. நர்மதா நதி நீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்றம் தனது தீர்ப்பை அளிப்பதற்கு 9 ஆண்டுகள் எடுத்துக் கொண்டது. அதேபோல கிருஷ்ணா

1995 டிசம்பர் 28] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

நதி நடுவர் மன்றத்திற்கு 4 ஆண்டுகளும், கோதாவரி நடுவர் மன்றத்திற்கு 10 வருடங்களும் ஆகிவிட்டன. நம்முடைய காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளிவர எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பது விளங்கவில்லை. இருப்பினும், மகிழ்ச்சிக்குரிய வகையில் நமக்கு ஒரு இடைக்காலத் தீர்ப்பு கிடைத்து இருக்கிறது. கர்நாடக மாநிலத்தின் பல்வேறு வியாக்கியானங்களையும் காலம் தாழ்த்தும் நடவடிக்கைகளையும் கட்ந்து இப்போது ஆணை வந்திருக்கிறது. அதற்கு உயிரூட்டும் வகையில் நமது நடவடிக்கை அமையவேண்டும். அதற்கு உயிரூட்டும் வகையில் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் காங்கிரஸ் கட்சி சார்பில், எதிர்க்கட்சியின் சார்பில் எங்களுடைய முழுமையான ஆதரவை நான் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உதாரணத்தை எடுத்துவிட்டீர்கள், மிக்க மகிழ்ச்சி. நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் பேசுகின்றபோது இதய சுத்தியுடன் இந்த அரசு அணுகவில்லை என்று சொன்னார்கள். அதேபோல இந்த அரசு மெத்தனமாக செயல்படுகிறது என்றும் சொன்னார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், யாராவது ஒருவன் திருடினால், அவன் துரயவன், அவனைக் கண்டுபிடிக்க முடியாது என்று மற்றவர்களைப் பார்த்து திருடன், திருடன் என்று சொல்வான். அதேபோல, அவர்கள் இதய சுத்தி இல்லாது இருப்பதனால், எங்களை இதய சுத்தி இல்லாதவர்கள் என்று சொன்னார்கள். அவர்கள் மெத்தனமாகப் போவதை நாங்கள் சொல்வோமே என்பதற்கு, எப்படி திருடன் தன்னைக் கண்டுபிடிப்பவர்களைத் திருடன், திருடன் என்று கூச்சல் போடுவானோ அதேபோல எங்களை மெத்தனம் என்று சொல்கிறார்கள், என்று பணிவன்புடன் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு கூட, இந்தத் தீர்மானத்தின் இரண்டாவது பகுதியிலே 'பாரதப் பிரதமர் உடனடியாக இரு முதலமைச்சர்களை அழைத்துப் பேசவேண்டுமென்று' சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பொதுவாக இந்தப் பிரச்சினையை நாம் பேசிக்கொண்டு இருந்தாலும், தமிழகத்தின் உணவு உற்பத்தி கடுமையாக பாதிக்கப் பட்டிருக்கிறது என்ற அச்சம் இன்றையதினம் ஏற்பட்டு இருக்கிறது. தமிழகதத்தின் உபரி மாவட்டமாக இருக்கக்கூடிய நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் பயிர்கள் இன்றையதினம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. குடிதண்ணீருக்குக்கூட சிரமம் ஏற்படக்கூடிய அபாய சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஒரு அபாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் இந்த மாநிலத்தைப் பற்றியோ அல்லது மாநில மக்களைப் பற்றியோ கொஞ்சம்கூட மத்தியிலே ஆளுகின்ற காங்கிரஸ் கட்சி கவலைப்படாமல் இருப்பது மிகமிக வருந்தத்தக்க விஷயமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காவிரிப் பிரச்சினை இன்று நேற்று தோன்றிய பிரச்சினை அல்ல. நீண்டகாலமாக இருக்கக கூடிய பிரச்சினை. நீண்டகாலம் மட்டும் அல்ல, குறிப்பாக ஒரு ஐந்து, ஆறு ஆண்டு காலமாக காவிரி நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு தஞ்சை, நாகை மாவட்டங்களில் தொடர்ந்து நடவுப் பயிர் செய்கின்ற முறை மாற்றப்பட்டு, தெளிப்பு விவசாயம் முறைகள் இன்றைய தினம் வரப்பட்டு, அதற்கும் ஆபத்து ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஐந்து, ஆறு ஆண்டுகளாக ஏற்பட்டு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மத்தியிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி இந்தப் பிரச்சினையில் விரைவாக தலையிட்டு தீர்ப்பதற்கு தயாராகயில்லை. மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கிற நீர் தாவாவை கோர்ட்டிலே போய்தான் தீர்க்கவேண்டிய கட்டாயம், அவசியம் ஏற்பட்டிருக்கிறபோது ஒரு மத்திய அரசு தேவைதானா என்ற கேள்வி நமக்கு எழத்தான் செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு இரண்டு மாவட்டங்களிலும் ஏறக்குறைய ஆயிரம் கோடிக்கு மேல் உற்பத்தி இழப்பு ஏற்பட்டிருப்பதாக எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதுகிறார்கள். தொலைக்காட்சியில்கூட வயல்கள் எப்படியெல்லாம் இருக்கின்றன என்பதையெல்லாம் காட்டினார்கள்.

இதற்கு யார் பொறுப்பு? இதற்கு மத்தியிலே இருக்கின்ற அரசுதான் பொறுப்பே தவிர வேறு யாரும் பொறுப்பாக இருக்கமுடியாது. இரண்டு மாநிலங்களிடையே தாவா வருகின்றபோது மத்தியிலே ஆட்சி நடத்தக் கூடிய மத்திய அரசு தலையிட்டு எது உண்மை எது சரியில்லை என்று பரிசீலித்து அதை விரைவாக நிவர்த்தி செய்வதற்கு தொடர்ந்து முயற்சி எடுத்திருந்தால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்காது.

இன்றையதினம் தஞ்சை, நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் இந்த பாதிப்பு ஏற்பட்டிருப்பது மட்டுமல்ல மாநிலம் முழுவதும் உணவுப்

பற்றாக்குறையும், அதனால் ஏற்படக்கூடிய நெருக்கடி, அதனால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பு-இன்றைய தினம் விவசாயம் ஒரு தொழிலாக இருக்கின்ற காரணத்தால்—அதிலே போடப்பட்டிருக்கின்ற மூலதனம், அந்த மூலதனத்தை கடன் வாங்கிப் போட்டிருக்கின்ற அந்த விவசாயிகளின் எதிர்கால நிலைமை என்ன ஆகும் என்பதை எல்லாம் மத்திய அரசு கவலையோடு பார்த்திருக்க வேண்டும். அப்படிப் பார்த்திருந்தால், இந்தப் பிரச்சினையில் கோர்ட்டில் போய்த்தான் தீர்வு வரவேண்டும், அதை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு காலகட்டத்திற்கு நாம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அந்த அளவுக்கு மத்திய அரசு இந்தப் பிரச்சினையை ஒரு கவலையற்ற போக்கிலேதான் பார்த்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பிரச்சினையை தீர்ப்பது குறித்து பேசும்போது, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் தண்ணீர் கொடுக்கவில்லை என்றால் மின்சாரத்தை நாம் நிறுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி மின்சாரத்தை நிறுத்தினால் மட்டும் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடுமா என்றால் தீராது. அப்படி மின்சாரத்தை நிறுத்துவதன் காரணமாக அந்த மாநிலத்தில் இருக்கின்ற அனைத்துப் பகுதி மக்களும் பாதிக்கப்படுவார்கள். எப்படி இங்கே தண்ணீர் இல்லாமல் அனைத்துப் பகுதி மக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறதோ அதைப்போன்ற பாதிப்பு அவர்களுக்கும் ஏற்படக்கூடும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் கட்சியும் கர்நாடகத்திலே ஆட்சி செய்திருக்கிறது. அப்போதேகூட இந்தப் பிரச்சினை குறித்துப் பேசி தீர்த்திருக்க முடியும். அதைச் செய்யாமல், இப்போது மின்சாரத்தை நிறுத்துங்கள் என்று சொல்லுகிறார்கள், அப்படிச் செய்தால் என்ன ஆகும், என்ன பிரச்சினை வரும் என்றால் இரண்டு மாநில மக்களிடையே கருத்து வித்தியாசங்கள், வேறுபாடுகள், முரண்பாடுகள், சிக்கலான பிரச்சினைகள் போன்றவை எதிர்காலத்திலே எழும். ஆனால், பொதுவாக இந்தப் பிரச்சினையை மையமாக வைத்து இரண்டு மாநில மக்களுக்கும் ஒரு மோதலை ஏற்படுத்துவதற்கு எந்த சக்தியும் முன்வரக்கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். இது அப்படிப்பட்ட ஒரு பாதிப்பாகும். இந்தப் பாதிப்பை விரைவாகத் தீர்ப்பதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து முயற்சி எடுக்க வேண்டும். குறிப்பாக தஞ்சை, நாகை-காயிதேமில்லத் மாவட்டங்களில் உணவு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், விரைவாக தண்ணீர் விடவில்லை என்றால், நிச்சயமாக அறுவடை அங்கே செய்ய முடியாது. அங்கே பயிர்கள் கர்ப்பமாக இருக்கின்ற பருவம். இன்னும் இரண்டொரு நாட்களில் கதிர்கள் எல்லாம்

வெளிவரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் இப்போதே அவற்றில் சரிபாதி காய்ந்து, கருகுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பெரும் பகுதி இடங்களில் பயிர்கள் காய்ந்து விடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை அங்கே இருக்கிறது. ஆகவே, மிக விரைவாக, உடனடியாக மத்திய அரசு தலையிட்டு இரண்டு மாநில அமைச்சர்களைக் கூட்டி சரியான முடிவை எடுத்து தண்ணீர் கிடைப்பதற்காக வழிவகைகளை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குறிப்பாக பாரதப் பிரதமர் அவர்கள் இதில் ஏனோதானோ என்று இருப்பது வருந்துதற்குரியது. அந்த வகையில் பாரதப் பிரதமர் அவர்கள் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும் என்று கூறி நான் தெரிவித்த அந்த வாசகத்தையும் இந்த தீர்மானத்திலே சேர்த்துக் கொள்வது இன்னும் இந்தத் தீர்மானத்திற்கு ஒரு நல்ல உறுதுணையாக இருக்கும் என்பதை எங்கள் கட்சியின் சார்பாக நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் நீங்கள் அதை ஒரு திருத்தமாக முன்மொழிய வேண்டும். அவ்வாறு நீங்கள் கொடுங்கள். கடைசியில் திருத்தமாக வேண்டுமானால் முன்மொழியலாம். அதை அவை ஏற்றுக் கொண்டால், ஏற்றுக் கொள்ளலாம்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தம் என்பது அல்ல, ஒரு வரியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது, பாரதப் - பிரதமர் அவர்கள் இரண்டு மாநில முதலமைச்சர்களையும் விரைவாக அழைத்துப் பேசி தீர்வு காணவேண்டும் என்று இந்த சபை கேட்டுக் கொள்கிறது என்ற அந்த வாசகத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் திருத்தம் என்பது. அதற்குப் பிறகு இதைச் சேர்க்க வேண்டும் என்று நீங்கள் கொடுக்க வேண்டும். அதுமாதிரி அறிவிப்புக் கொடுங்கள். திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

திரு. வே. தம்புசாமி: திருத்தத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற காவிரி நதிநீர் பிரச்சினை குறித்த தீர்மானத்தை நான் இந்திய கம்யூனிஸ்ட்

1995 டிசம்பர் 28] [திரு. ஜி. பழனிசாமி]

கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். காவிரி நதிநீர் பிரச்சினை என்பது தஞ்சை, நாகை-காயிதேமில்லத் மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தமிழகத்தினுடைய மக்களுக்கு உணவு அளிக்கக்கூடிய உயிர்நாடிப் பிரச்சினையாக அமைந்து இருக்கிறது. கர்நாடக அரசு நதிநீர் வழங்குவதை மறுத்திருப்பதை எதிர்த்து கொண்டுவர்ப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

குறிப்பாக, காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து, 1974 ஆம் ஆண்டு முதற்கொண்டு, தமிழக அரசையும், கர்நாடக அரசையும் சேர்ந்தவர்கள் 23 தடவை பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். பேச்சு வார்த்தை மூலம் தீர்வு ஏற்படாத சூழ்நிலை இருந்தது. கர்நாடகத்தில் இருக்கக் கூடிய முதலமைச்சர்கள் ஆண்டுக்கொரு முதலமைச்சர்கள், 6 மாதத்திற்கு ஒரு முதலமைச்சர், மாதத்திற்கு ஒரு முதலமைச்சர் மாற்றம் ஏற்படுகிற காரணத்தால் இந்தக் காவிரி நதி நீர் பிரச்சினையில் ஒரு நிரந்தமான தீர்வு காண முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதை உணர்ந்து, தமிழக அரசின் சார்பாக இந்தப் பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விட வேண்டுமென்று, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளும் இச்சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, நடுவர் மன்றத்திற்கு இப்பிரச்சினை விடப்பட்டது.

காவிரி நடுவர் மன்றம் 205 டி.எம்.சி. அடி தண்ணீரை தமிழகத்திற்கு விட வேண்டுமென்ற இடைக்கால தீர்ப்பினை வழங்கியது. கர்நாடகம் அதை மறுத்து வருகிறது. இன்றைக்கு, தஞ்சை மற்றும் நாகை-காயிதேமில்லத் மாவட்டங்களில் உள்ள பயிர்கள் முற்றிலும் வாடிப்போய்க் கொண்டிருக்கின்ற ஒரு துயரமான நிலையில் இருக்கின்றன.

சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 2 இலட்சம் ஏக்கருக்கு மேலே குறுவை சாகுபடி நடந்ததாக ஒரு தவறான கணக்குக்கூடச் சொன்னார்கள். தஞ்சை மற்றும் நாகை மாவட்டங்களில், இறவைப் பாசனம் உள்ள தகுதி வாய்ந்த இடங்களில் மட்டும் ஒரு இலட்சம் ஏக்கருக்கும் குறைவான நிலத்தில்தான் சாகுபடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கமாக காவிரி தண்ணீர் ஜூன் மாதம் 12 ஆம் தேதி திறந்து விடப்பட்டால் 4½ இலட்சம் ஏக்கருக்கு மேலே குறுவை சாகுபடி, இருபோக சாகுபடி செய்யக்கூடிய தஞ்சை மாவட்டத்திலும், நாகை மாவட்டத்திலும் இன்றையதினம் 1 இலட்சம் ஏக்கருக்கும் குறைவான நிலங்களில்தான், இறவைப் பாசனம், பம்பு பாசனம் உள்ள

இடங்களில் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டங்களிலிருந்து இருபோக சாகுபடியில் கிடைக்கக்கூடிய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தத் தொழிலை நம்பி இருக்கக்கூடிய 11 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கின்றார்கள். விவசாயிகளுக்கு இந்தக் குறுவை சாகுபடியிலே வரக்கூடிய லாபமான 200 கோடி ரூபாயை அவர்கள் இழந்துவிடக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கொண்டு வந்திருக்கிற இத்தீர்மானத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சொன்னது போன்று, மத்தியிலே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியினுடைய அரசாங்கம், பாரதப் பிரதமர் அவர்கள் காவிரி நடுவர் மன்றம் அளித்த இடைக்கால தீர்ப்பை விரைவாக நிறைவேற்ற இரு மாநில முதல் அமைச்சர்களையும் அழைத்துப் பேசி, இப்பிரச்சினைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஒரு வாசகத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கர்நாடக அரசுக்கும், நம்முடைய தமிழக அரசுக்கும் காவிரி நதிநீர்ப் பங்கீடு பிரச்சினை இருந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் —நம்முடைய தமிழக அரசின் சார்பாக பல முறை மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களையும், பாரதப் பிரதமர் அவர்களையும் நேரிடையாகச் சந்தித்துப் பேசிய பின்னரும் கூட மத்திய அரசு கவனமற்ற முறையில் இருக்கிறது என்று சொன்னால், இந்தியாவிலே ஒரு மத்திய அரசு இருக்கிறதா, இல்லையா என்ற நிலை, (மேசையைத் தட்டும் ஒலி) பரிதாபப்படக்கூடிய நிலையாக இருக்கிறது. செவிடன் காதிலே ஊதிய சங்கு போன்று இருக்கிறது.

கொடூரமான இந்தப் பிரச்சினையில், தமிழகத்திற்கு உணவளிக்கக்கூடிய, குறிப்பாக 11 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யக்கூடிய மாவட்டம் இன்றைய தினம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அனைத்து அரசியல் கட்சிகளும் அந்த மாவட்டங்களுக்கு வந்து நாளுக்கு ஒரு போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கூட பல இடங்களிலும் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். காவிரி தண்ணீரை விட வேண்டுமென்றுதான் சொல்கிறார்கள். ஆனால் எந்த வகையிலே தண்ணீர் பெற வேண்டும் என்கிற ஆலோசனையை இந்தச் சந்தர்ப்பத்திலே அவர்கள் முன் வைத்திருக்க வேண்டும். ஆட்சி நடத்துகிறவர்களிடத்தில் வித்தியாசம் தேவையில்லை.

1995 டிசம்பர் 28] [திரு. ஜி. பழனிசாமி]

நான் மாண்புமிகு முதலமைச்சரிடம் ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். எதிர்க்கட்சிகளை அழைத்துப் பேசியிருந்தால் தமிழக அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளைத்தான் ஆலோசனையாக கூறியிருப்பார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது—தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக இடம் பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தங்களுடைய குரலை ஆதரவாக வெளியிலிருந்து கொண்டே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-55

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அரசு எடுத்திருக்கிற, காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்காக, அதனை வலுவூட்டுவதற்காக, நம்முடைய ஒற்றுமை வலுவுற்றிக்கிறது என்பதற்காகவாவது, சர்வ கட்சிக் கூட்டத்தை அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கையை எல்லா அரசியல் கட்சிகளுக்கும் விளக்குவது அரசினுடைய கடமை. அதை உடனடியாக நீங்கள் கூட்ட வேண்டு மென்று உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலமாகத்தான் தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தமான கருத்துக்களை நாம் வலியுறுத்தி, காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்கிற நிலைமைக்கு வந்திருக்கிறோம். நான் ஒன்றை இந்தச் சபையிலே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, கர்நாடக அரசிடத்தில் தமிழக அரசு பிச்சை கேட்கவில்லை. உரிமையைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நம்முடைய உரிமையை. (மேசையைத் தட்டும் ஒலி) இது, இன்று, நேற்று எடுத்திருக்கிற பிரச்சினை அல்ல. தமிழக அரசுக்கு, கர்நாடக அரசு உடனடியாகத் தண்ணீர் வழங்குவது என்பது பிச்சை அல்ல. ஆக, நம்முடைய உரிமையைப் பெற்றுத் தருவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், மத்திய அரசு காலத்தோடு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காணவில்லை என்று சொன்னால், தமிழகத்தில் இருக்கக்கூடிய, தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள், மத்திய அரசின் போக்கினால் திருவோடு எடுத்து தெருவிலே போகிற நிலைமை வந்துவிடும். அதை ஒருபோதும் மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது. இதிலே காலத்தோடு நடவடிக்கையை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட கொடுமையான நிலை அங்கே உருவாகியிருக்கிறது. அந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களிடத்திலே இருக்கிற பொருளாதாரத்தைக்

கொண்டு, விவசாயம் செய்து, வயல் காட்டிலே போய் உட்கார்ந்து கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். இயற்கை ஒத்துழைக்கவில்லை. இது கொடுமையான நிகழ்ச்சி. அதையெல்லாம் நேரிடையாகப் பார்க்காமல், ஏதோ அரசியல் கட்சி ஒன்றைப் பேச வேண்டும் என்று ஒருபோதும் இருக்காத வகையில், இந்தக் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற, அரசு கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன். எனவே, மத்திய அரசு இந்தத் தீர்மானத்திற்குச் செவிசாய்த்து, கர்நாடக அரசினுடைய தண்ணீரை வழங்க வேண்டும்.

இதே சபையில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கர்நாடக அரசிற்கு 200 மெகாவாட் மின்சாரம் வழங்குவது சம்பந்தமாகத் தெரிவித்தபோது நாங்கள் எல்லாம் கேட்டோம். கர்நாடகம், தமிழகத்திற்குத் தண்ணீர் கொடுக்கவில்லை ஏன் நீங்கள் 200 மெகாவாட் மின்சாரத்தை வழங்குகிறீர்கள் என்று கேட்டோம். அதற்குப் பின்னாலும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே தொடர்பு கொண்டு மேலும் மின்சாரம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதையும் வழங்கியிருக்கிறார்கள். மத்திய அரசிடத்திலேகூட அவர்கள் அணுகியபோது....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு நம்மிடம் மின்சாரம் கேட்டபோது இருந்த பிரச்சினை வேறு. நமக்குத் தண்ணீர்ப் பிரச்சினை என்பது வேறு. இரவு நேரத்திலே, 10 மணிக்கு மேலே, நம்முடைய தேவைக்குப்போக மீதம் இருக்கின்ற மின்சாரத்தை மற்றவர்களுக்குக் கொடுத்தால் நமக்கு வருமானம் வரும். அந்த நேரத்திலே, மனிதாபிமான அடிப்படையிலே அவர்கள் இரவு நேரத்திலே 100 மெகாவாட் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டது. அதைக்கூடப் பின்னாலே வேண்டாம் என்று நிறுத்தி விட்டோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். நிறுத்திவிட்டோம். ஆகவே, நமக்குத் தேவைக்கு அதிகமாக இருந்த மின்சாரத்தை, மின்சார வாரியத்திற்கு வருமானம் வருகின்ற சூழ்நிலையில்தான் கொடுத்தோமே தவிர, இதற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. அந்தப் பிரச்சினை 2 நாட்களிலே முடிந்து விட்டது. ஆகவே, அதற்குள்ளே போகவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1995 டிசம்பர் 28]

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்று நாம் மனிதாபிமானத்தோடு நடந்து கொண்டாலும், இன்றையதினம் அவர்கள் மனிதாபிமானத்தோடு நடந்துகொள்ளவில்லை என்ற போக்கை, அப்படிப்பட்ட போக்கு இன்றையதினம் இருக்கிறதே என்று சொல்வதற்காகத்தான் நான் அதைக் குறிப்பிட்டேன். அந்த வகையில் இன்றையதினம் தமிழகத்தினுடைய உணவுக் களஞ்சியமாக இருக்கக்கூடிய, தஞ்சை மாவட்டத்தைப் பாதுகாக்கக் கூடிய விதத்தில் மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, தீர்வு காண வேண்டும் என்று கேட்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு பரிதி இளம்வழுதி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தை வரவேற்று, ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள காவிரி டெல்டா பகுதிகளில் போதிய மழை பெய்யாததாலும், மேட்டூர் அணையிலும் போதுமான தண்ணீர் இல்லாததாலும், குறுவை, சம்பா பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, நடுவர் மன்றத்தை நாடிய நமக்கு 11 டி.எம்.சி. தண்ணீரைத் தரவேண்டுமென்று கர்நாடக அரசுக்கு நடுவர் மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால், கர்நாடக அரசோ தமிழகம் நமது சகோதர மாநிலம்தான் என்பதை மறந்துவிட்டு, ஏதோ தமிழகத்தை அன்னிய நாட்டைப் போல நினைத்துக் கொண்டு நமக்கு வஞ்சனை செய்கிறது. எனவே, வாட்டமுற்று இருக்கின்ற விவசாயிகளின் நிலைமையைக் கருத்திற் கொண்டும், வாடிக் கொண்டிருக்கும் பயிர்களைக் காப்பாற்றவும், உழவர் பெருமக்களின் உரிமைகளைக் காப்பாற்றவும், தமிழகத்தில் உள்ள பல்வேறு எதிர்க்கட்சிகளும் இன்றைக்கு போர்க்கோலம் பூண்டிருக்கிறது. தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்த போராட்டத்தையும், கடை அடைப்பையும், இரயில் மறியலையும் நடத்திக் கொண்டிருக்கின்றன. நாங்கள் கூட, தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மிகப் பெரிய கண்டனப் பேரணி ஆர்ப்பாட்டத்தை நடத்த இருக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டீர்கள். இது இரண்டு மாநிலங்களுக்கிடையில் இருக்கக்கூடிய பிரச்சினை. மிகவும் முக்கியமான ஜீவாதாரப் பிரச்சினை.

இதிலே நாம் சொல்லக்கூடிய கருத்துகளால் எந்தவிதச் சிக்கலும், எந்தவிதப் பாதிப்பும் ஏற்பட்டுவிடக் கூடாது: எனவே வார்த்தைகளை அளந்து மிகவும் ஜாக்கிரதையாக நீங்கள் உங்களுடைய கருத்துக்களை இந்த மன்றத்திற்கு வைக்க வேண்டுமென்று சொன்னீர்கள்.

நண்பகல் 12-00

அதே போல நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உட்பட தீர்மானத்தின் துவக்கத்திலே சொல்கின்றபோது, இந்தப் பிரச்சினையிலே தமிழகமே ஒட்டுமொத்த உணர்வோடு ஒரே அணியிலே நிற்கின்ற வகையிலே நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதை நான் முழுக்க முழுக்க, நூற்றுக்கு நூறு அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையிலே தமிழகத்திலே இருக்கிற எல்லாக் கட்சிகளும், எல்லா மக்களும் ஒரேவிதக் கருத்தோடுதான் இருக்கிறார்கள். நமக்குக் கிடைக்க வேண்டிய ஜீவாதார உரிமை, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி நமக்குக் கிடைக்கவேண்டிய தண்ணீர் கிடைத்தாக வேண்டும் என்பதிலே யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. அதனால்தான் முதலமைச்சர் அவர்கள் காவிரி நதி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாகக் கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்திலேகூட எங்கள் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா அவர்கள் கலந்துகொண்டு எங்களுடைய கட்சியின் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதேபோல தமிழ் மக்களினுடைய பொதுவான ஜீவாதாரப் பிரச்சினை என்று வருகின்ற போது, இதிலே கட்சிமாச்சரியங்கள் எல்லாம் நாங்கள் பார்ப்பது கிடையாது. இட ஒதுக்கீடு பிரச்சினையாக இருந்தாலும்கூட, முதலமைச்சர் கூட்டிய கூட்டத்திலே எங்கள் கட்சியின் சார்பிலே என்.வி.என். சோமு போன்றவர்கள் எல்லாம் வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் கடந்த காலத்தில் நாங்கள் ஆட்சியிலே இருந்தபோது, காவிரி நதிநீர் சம்பந்தமாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டியபோது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வரமாட்டேன் என்று கடிதம் எழுதினார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். அப்படியே எங்கோ போகிறீர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிதி அவர்கள் அமைதியாகப் பேசும்போதே ஏதாவது பிரச்சினையைக் கிளப்புவதற்கு அவர் பேசுவார் என்பது வாடிக்கையாக

1995 டிசம்பர் 28] [திரு. சு. முத்துசாமி]

எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. இந்தப் பிரச்சினையில் ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன் பங்கிற்கு அவர் சொல்லிவிட்டுப் போய் இருக்கிறார். உங்கள் பங்கிற்கு ஏதாவது சொல்லி இதைக் கெடுக்கக் கூடாது என்பதற்காகத்தான், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே இந்தத் தீர்மானம் எவ்வளவு முக்கியம்—மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இரண்டு தலைவர்களும் ஒன்றை தீர்மானத்திலே சேர்க்கவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களுக்குச் சொன்னார்கள். உடனே, நாம் போட்ட தீர்மானத்திலே அதை எப்படிச் சேர்ப்பது என்றெல்லாம் முதலமைச்சர் அவர்கள் கருதவில்லை. உடனே அதைச் சேர்ப்பதற்குண்டான ஆயத்தங்களை அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கன்ஸ்ட்ரக்டிவ் ஆக செய்வதற்கு முயற்சியை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம். நம்முடைய பரிதி அவர்கள் இங்கே சில விளக்கங்களைச் சொன்னார்கள். ஒன்றை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்துவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே மக்களவை உறுப்பினராக இருந்தபோது—அவர்கள் சொன்னார்கள் கூட்டத்திற்கு வரவில்லை என்று—9-8-1984-லேகூட காவிரிப் பிரச்சினைபற்றி மிகத் தெளிவாக நாடாளுமன்றத்திலே பேசி இருக்கிறார்கள். அது தவிர, 10-3-1987-லே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலங்களவையிலே காவிரிப் பிரச்சினைபற்றி மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். அதையெல்லாம் இங்கே எடுத்துச்சொல்ல முடியும். ஆகவே, 1984-ஆம் ஆண்டே பேசி இருக்கிறார்கள்; 1987-லே பேசி இருக்கிறார்கள்; இந்தக் காவிரிப் பிரச்சினையை அவர்கள் நாடாளுமன்ற உறுப்பிராக இருந்த நேரத்திலே மிகுந்த அக்கறையோடு தெளிவாக பேசி இருக்கிறார்கள் என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[1995 டிசம்பர் 28

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை என்று வருகின்றபோது, தமிழ்நாட்டு மக்கள் ஒருமித்து இருக்க வேண்டுமென்று நீங்களும் சொல்லி, முதலமைச்சர் அவர்களும் சொல்லி, அதை எல்லோரும் ஆதரிக்க வேண்டும் என்றும் சொல்லி, இதற்கு முன்பே பல முறை இங்கே பேசப்பட்ட விஷயம். எங்களுடைய முதலமைச்சர், எங்கள் தானைத் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது கூப்பிட்டபோது அவர் வரவில்லை என்று சொன்னதற்கு பல முறை அதற்கு நான் இங்கே பதில் சொல்லி இருக்கிறேன். அதை மீண்டும் மீண்டும் பேசத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி, நீங்கள் முதலிலே என்ன உணர்வோடு ஆரம்பித்தீர்களோ அப்படியே பேசுங்கள்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, என்ன சொல்ல வந்தேன் என்றால், அன்றைக்கு அனைத்துக் கட்சியைக் கூட்டியபோது முதலமைச்சர் வரவில்லை; டில்லியிலே பிரதமரை சந்திக்கச் சென்றபோதும் வரவில்லை.....

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலமைச்சர் ஆன பிறகு, காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு அனைத்துக் கட்சி டீமை பிரதமரை சந்திக்க அழைத்துச் சென்றேன். அதிலும் தி.மு.க.வினர் கலந்து கொள்ளவில்லை. பின்னர் 69 சதவீத இட ஒதுக்கீடு பிரச்சினைக்காக ஒரு அனைத்துக் கட்சி குழுவை நான் பிரதமரை சந்திக்க அழைத்துச் சென்ற போது அதிலும் தி.மு.க.-வினர் கலந்துகொள்ளவில்லை என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்குத்தான் துவக்கத்திலேயே சொன்னேன். நீங்கள் கூட்டிய கூட்டத்திலே எங்கள் கட்சியின் சார்பிலே ஆலடி அருணா வந்தார்; என்.வி.என். சோமு வந்தார் என்று சொன்னேன். நான் ஏன் சொல்ல வருகிறேன் என்றால், நீங்கள் ஆரம்பத்திலே சொன்னீர்கள், ஒட்டுமொத்தமாக ஒரே அணியில் நாம் நிற்க வேண்டும், உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என்று சொன்னீர்கள். இப்போதாவது உங்களுக்கு இந்த உணர்வு வந்ததற்காக வரவேற்கிறேன் என்று சொல்வதற்குத்தான் வந்தேனே தவிர, அன்றைக்கு நீங்கள், (குறுக்கீடு) நடந்தது நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் (சிரிப்பு) என்ற அடிப்படையிலேதான் நான் கருத்துக்களை வைக்கிறேன். எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடுவர் மன்றம் இந்த

இடைக்காலத் தீர்ப்பு வழங்கியபோதுகூட, அது தெளிவாக ஆராய்ந்து கர்நாடக அரசுக்கு எந்தவிதப் பாதகமும் இல்லாத வகையில்தான் தீர்ப்பு அளித்து இருக்கிறது. அங்கே வந்து, அவர்கள் பருவ மழை பொய்த்து விட்டது என்று சொல்கிறார்கள். கர்நாடகத்தில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிலையம் கொடுத்த அந்தப் புள்ளிவிவர அடிப்படையிலே நன்றாகப் பரிசீலித்து ஆராய்ந்து, அவர்கள் சொல்வது * உண்மைக்கு மாறானது என்பதைத் தெரிந்துகொண்டு, விஞ்ஞானப் பூர்வமான தீர்வுதான் கொடுத்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * என்பது உண்மைக்கு மாறானது என்று மாற்றப்படுகிறது.

பிற்பகல் 12.05

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறானது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதாவது அடுத்த ஆண்டுக்குப் போதுமான அளவுக்கு தண்ணீர் இருக்கிறது. 11 டி.எம்.சி. தண்ணீர் விட்டபிறகு கூட அடுத்த ஆண்டுக்குப் போதுமான தண்ணீர் கர்நாடகத்திற்கு இருக்கிறது என்பதை ஆராய்ந்து பரிசீலித்துத்தான் கர்நாடகத்திற்கு எந்தப் பாதகமும் ஏற்படாத வகையில் நடுவர் மன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஆனாலும் கூட கர்நாடகத்தில் இருக்கிற சகோதரர்கள் நம்முடைய தேசிய ஒருமைப்பாட்டில் அக்கறையுடைய அந்தச் சகோதரர்கள் என்ன காரணத்தினாலோ உச்சநீதிமன்றத்தைப் புறக்கணிப்போம், நடுவர் மன்றத்தைப் புறக்கணிப்போம், எதையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்ற ரீதியிலே தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் கூட பொதுக் கூட்டத்தில் பேசும் போது செய்தியாளர்களிடம் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். இதை இரண்டு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினை என்று பார்க்காதீர்கள். இரண்டு மாநிலங்களுக்குள்ள பிரச்சினையாக கருதுங்கள். அப்படிக் கருதினால்தான் நன்றாக இருக்கும். உங்களுக்கு நாங்கள் தண்ணீர் விடமாட்டோம், காவிரி கர்நாடகத்தில் உருவாகிறது என்ற ஒரே காரணத்திற்காக காவிரி கர்நாடகத்திற்கே சொந்தம் என்று சொன்னால்—நெய்வேலியிலே, கல்பாக்கத்திலே உருவாகின்ற மின்சாரம் தமிழகத்திற்குத் தான் சொந்தம் என்று நாங்கள் சொல்ல ஆரம்பித்தால் தேசிய ஒருமைப்பாட்டினுடைய நிலைமை என்ன ஆகும், கேள்விக் குறியாகிவிடும் என்ற வகையிலே அவர்கள் கருத்தைச் சொன்னார்கள். இங்கே கூட நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள் மின்சாரத்தை நிறுத்துங்கள் என்று. அது ஒரு சரியான அணுகுமுறை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பட்டது.

இல்லை. ஏன் என்றால் அதற்கு இந்தியர்களாக நாம் இருக்கிறோம், அவர்களும் இந்தியர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மின்சாரத்தை நிறுத்திவிட்டோம் என்றால் அது ஒரு சரியான அணுகுமுறை கிடையாது. நாளை ஒரு காலத்திலே மின்சாரம் அங்கு உபரியாகிவிட்டால் நாம் தண்ணீருக்குப் போய் நிற்கவேண்டிவரும். அந்த அணுகுமுறை கூட சரியான அணுகுமுறை கிடையாது. இன்னொன்று இந்த நடுவர் மன்றம் வந்தது என்றால் எந்த அடிப்படையில் வந்தது. 27 முறை பேச்சு வார்த்தை நடத்திய பிறகு பேச்சு வார்த்தைக்கு செவி சாய்க்காத காரணத்தால் பேச்சு வார்த்தையினால் இனி எந்தப் பலனும் கிடையாது என்கிற எண்ணம் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் இதே சட்டமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்து உச்சநீதிமன்றத்தில் உங்கள் கருத்தாகச் சொல்லுங்கள் இனி பேச்சு வார்த்தையால் எந்தப் பலனும் கிடையாது, நடுவர் மன்றம் தான் ஒரே தீர்வு என்று அன்றைக்கு அனுப்பினார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்போது யார் பதில் சொன்னார்கள். கலைஞர் சொன்னாரா - அதற்குப் பிறகு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். சொன்னாரா என்ற வாதம் இப்போது தேவையில்லை, அது தேவையில்லாதது. இப்போது அதையெல்லாம் சொன்னால் வேறு மாதிரி போய்விடும். கலைஞர் என்ன என்ன தப்பு பண்ணினார் என்று சொல்ல வேண்டுமா, சொல்லவேண்டுமானால் சொல்லிவிட்டு அதற்குக் குறிப்புரை வேண்டாம் என்று சொல்லிவிடுகிறேன். (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் கர்நாடகத்திற்கு மின்சாரத்தை நிறுத்துவது சரியான அணுகு முறையல்ல. இப்படிச் செய்தால் தேசிய ஒற்றுமை என்னாவது என்று கேட்டார். கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின் போது இதே உறுப்பினர் கர்நாடகத்திற்கு மின்சாரத்தை கொடுத்ததை எதிர்த்துப் பேசி இருக்கிறார். ஆகவே அன்று பேசிய பேச்சை அவர் வாபஸ் பெறுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கும் சரியாகத்தான் நான் சொல்கிறேன். அன்று நான் சொன்னது நமக்கே மின்சாரம் போதாது என்று நிலைமையில் இருக்கிறோம்; உபரி மாநிலமாக இருக்கிற மகாரஷ்டிரம் 100 மெகாவாட் தான் தராங்க; நமக்கு தேவை அதிகமாக இருக்கிறது; நம்முடைய மாநிலத்தின் சார்பாக 200

மெகாவாட் தருகிறீர்களா என்ன நியாயம் என்று தான் கேட்டேன். அது மட்டுமல்ல தண்ணீருக்கு மின்சாரம், மின்சாரத்திற்கு தண்ணீர் என்ற பிரச்சினை வந்தால் தேசிய ஒருமைப்பாடு இல்லை. தேசிய ஒருமைப்பாடு கேள்விக்குறியாகிவிடும் என்றே தெரிவித்திருக்கிறேன். ஆகவே என்ன சொல்ல வருகிறேன் என்றால் இந்த நடுவர் மன்றம் அமைந்ததன் அடிப்படைக் காரணமே....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மின்சார வாரியத்தினுடைய அந்த ஆண்டு வரவு செலவு அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்பட்டபோது மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய இதே சட்டமன்ற உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் "கர்நாடகத்திற்கு இங்கே இருந்து மின்சாரம் தருகிறீர்கள் இங்கே இரவில் கடந்த இரண்டு மூன்று தினங்களாக நாங்கள் கூட சென்னை நகரத்திலே தூங்கமுடியாமல் அவதிப்படுகிறோம்" என்று சொல்லி அன்றைக்கு மின்சாரத்தை தரக்கூடாது என்று சொல்லி இந்த அவையிலே பேசியிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்ட கருத்திற்கு, தான் பேசியது தவறு என்று ஒத்துக் கொள்ளாமல் அதற்கு மழுப்பலாக ஒரு பதில் தெரிவித்து இருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.10

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் ஒன்றும் மழுப்பல் இல்லை. நான் சொல்ல வந்ததை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவில்லை. நான் சொல்ல வந்தது கர்நாடகத்தில் உபரியாக இருக்கும் தண்ணீரை நாம் கேட்கிறோம். இங்கே நம்முடைய தேவைக்கே மின்சாரம் இல்லை, இன்னும் தேவைப்படுகிறது. அப்படி இருக்கும்போது உபரி மாநிலமாக இருக்கும் மகாராஷ்டிரம் 100 மெகாவாட் மின்சாரம் கொடுக்கும்போது நாம் எதற்கு 100 மெகாவாட் மின்சாரத்தைக் கொடுக்கவேண்டும் என்று தான் கேட்டேனேத் தவிர (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்கள் அன்றைக்கு மின்சாரம் கொடுப்பதைப் பற்றி எதிர்த்துப் பேசினார்கள். அது உண்மை.

அதை மறுக்கமுடியாது. நம்மைப் பொறுத்தமட்டிலும் இரவு நேரங்களிலே 10-30 மணிக்கு மேலே நம்முடையத் தேவைக்கு அதிகமாக இருக்கும் போதுதான் நாம் மின்சாரம் கொடுக்கமுடியும் என்று நாங்கள் தெரிவித்து இருக்கிறோம். நமக்குத் தேவையான நேரங்களிலே கர்நாடக மாநிலத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என்பதை நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலே விவாதம் நடைபெறுகிறபோது சொல்லியிருக்கிறேன். ஆகவே இப்போதும் நான் சொல்கிறேன். நம் தேவைக்கு அதிகமாக இருந்தபோது, இரவு நேரங்களிலேப் பற்றாக்குறை இல்லாத நேரத்திலே தான் ஒரு 2,3, நாட்களுக்கு, ஒரு வார காலத்திற்கு மின்சாரம் கொடுக்கப்பட்டதே தவிர நம்முடைய தேவைக்குப் பற்றாக்குறை இருக்கிற நேரத்திலே நாம் கொடுக்கவில்லை.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ நான் சொல்லக்கூடாத ஒன்றைச் சொல்லிவிட்டது போல இங்கே பேசினார்கள். நம் மாநிலத்திலிருந்து மின்சாரம் பெறுகிற திறமை கர்நாடக முதல்வருக்கு இருக்கும்போது, கர்நாடகத்திலிருந்து தண்ணீரைப் பெறுகிற திறமை நம்முடைய முதலமைச்சருக்கு இல்லையா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டையும் இணைத்துப் பேசுவது சரியல்ல என்றே கருதுகிறேன். அவர்கள் நாம் கேட்டால் தண்ணீர் விடவில்லை, அதற்காக நாம் மின்சாரத்தை நிறுத்திவிட்டோம், இது சரியான அணுகு முறை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் பேசுவது சரியான கருத்தல்ல. பதிலுக்குப் பதில் என்ற ரீதியில் நாங்கள் செய்யவில்லை. அவர்கள் தண்ணீர் கொடுக்கவில்லை என்பதற்காக நாங்கள் மின்சாரத்தை நிறுத்தவில்லை. மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் இப்போது விளக்கிக் கூறியதைப் போல் அப்போது கர்நாடக முதல்வர் அவர்கள் முதலில் என்னிடத்தில் இதைப் பற்றிக் கேட்ட வேளையில் எங்களுக்கு இரவு நேரத்தில் உபரியாக இருந்த மின்சாரத்தை கொடுக்கலாம் என்று ஒப்புக்கொண்டோம். அதற்காக அவர்கள் கட்டணத்தையும் செலுத்திவிட்டார்கள். ஆனால் இப்போது நாம் நம்முடைய விவசாயிகளுக்கு இரவு நேரங்களில் மின்சாரம் வழங்குகிற நேரத்தைக் கூட்டியிருக்கிறோம். ஆகவே இப்போது தமிழகத்திடம் உபரியான மின்சாரம் இல்லை. ஆகவே தான் கர்நாடகத்திற்கு மின்சாரம் வழங்குவதை நிறுத்தியிருக்கிறோம்.

1995 டிசம்பர் 28]

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது உங்களுக்கல்ல. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னாரே அதற்குத் தான் நான் சொன்னேன். இந்த ரீதியிலே விவாதத்திற்கு வாதம் பிரதிவாதம் மாதிரி நீங்கள் தண்ணீர் கொடுக்கவில்லை என்றால் நாங்கள் மின்சாரத்தை நிறுத்திவிடுவோம் என்று சொன்னால் அது தேசிய ஒருமைப்பாட்டுக்கு பிரச்சினையை உண்டாக்கிவிடும் என்ற அடிப்படையில் தான் சொன்னேன். இந்த நடுவர்மன்றம் வந்ததற்கு அடிப்படைக் காரணமே 27 முறை பேச்சுவார்த்தைகள் நடத்தியதற்குப் பிறகு இனி பேச்சு வார்த்தையால் எந்தப் பலனும் கிடையாது, ஆகவே இதற்கு ஒரே தீர்வு நடுவர் மன்றம் தான் என்று அன்றைக்கு எங்கள் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது இதே மன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பி, உச்சநீதிமன்றத்தில் அதை உங்கள் கருத்தாகச் சொல்லுங்கள் என்று சொன்ன பிறகு, இந்த நடுவர் மன்றம் வந்தது. நான் இதை ஏதற்காகச் சொல்கிறேன் என்றால் பேச்சு வார்த்தையால் பலனில்லை, எனவே நடுவர் மன்றம் தான் தீர்வு என்று சொன்ன பிறகு தான் நடுவர் மன்றம் கிடைத்தது. நடுவர் மன்றம் வந்த பிறகு (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-லே நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது என்பது உண்மை. ஆனால் 6-7-1986-லே பேச்சு வார்த்தையால் எந்தப் பலனும் ஏற்படவில்லை என்று தீர்மானித்து சட்டத்தின்படி காவிரி நீர் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு விடவேண்டும் என்று வற்புறுத்தி, மத்திய அரசுக்கு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அந்த விண்ணப்பம் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே தான் தாக்கல் செய்யப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். இந்த அசெம்பிளியில் தீர்மானம் நிறைவேற்றியப் பிறகு தான் நடுவர் மன்றம் வந்தது. நடுவர் மன்றம் வந்த...(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மத்திய அரசுக்கு விண்ணப்பம் 86-லே அனுப்பப்பட்டது. நடுவர் மன்றம் வேண்டுமென்று பிரச்சினை உருவாக்கப்பட்டதே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[1995 டிசம்பர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பேசப்பட்டு, பேசப்பட்டு 10 முறை இதற்கு பதில் இந்த அவையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மீண்டும் மீண்டும் இதை ஏன் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. தமிழகத்தின் முதல்வராக புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறபோது கூட கூப்பிட்டதற்கு அவர்கள் வரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

பிற்பகல் 12.15

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவதைப் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறீர்கள். பேச்சு வார்த்தையில் இனிப் பலன் இல்லை என்பதால் தான் நடுவர் மன்றம் வந்தது. அந்த நடுவர் மன்றம் வந்த பிறகு, அங்கே கர்நாடகத்திலே காவிரிப் பிரச்சினை வந்தபோது, கர்நாடகத்தில் உள்ள காங்கிரஸ் எம்.பிக்கள் எல்லாம் நாங்கள் ராஜினாமா செய்வோம் என்று சொன்னார்கள். ஒரு இக்கட்டான சூழ்நிலை அன்றைக்குப் பிரதமருக்கு உருவாயிற்று. உடனே என்ன செய்தார்கள்? இரண்டு மாநில முதலமைச்சர்களையும் நான் கூப்பிட்டு, இரண்டு பேரும் சந்தித்துப் பேச வைக்கிறேன் என்று சொல்லி, நம்முடைய முதலமைச்சரும் அன்றைக்குப் பேச்சு வார்த்தைக்குப் போனார்கள். பேச்சு வார்த்தை முறிந்துவிட்டது என்று சொல்லிவிட்டு வந்தார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் பேச்சு வார்த்தையிலே பலனே இல்லை என்றுதான் நடுவர் மன்றம் வந்தது. அதற்குப் பிறகு எதுவாக இருந்தாலும் நாம் நடுவர்மன்றத்திற்குத்தான் போய் இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, நீங்கள் அன்றைக்குப் பேச்சுவார்த்தைக்குப் போன காரணத்தால் இத்தனை சிக்கல்களும், இடையூறுகளும் நீண்டுகொண்டே போய்க்கொண்டிருக்கிறது என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல தடவை தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். நடுவர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அமல்படுத்த வேண்டும், அதிலே எந்த மாறுபாடும் கிடையாது, அதை மீறி எந்தப் பேச்சுவார்த்தையும் கிடையாது என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இதுதான் நம்முடைய நிலையும் கூட.

1995 டிசம்பர் 28]

திரு. இளம்வழுதி: இப்போதும் கர்நாடகத்தில் என்ன சொல்லுகிறார்கள்? பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். யாரிடம் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும்? இப்போது 10 துண்டு இருக்கிறது. நீங்கள் 2 துண்டு கேட்கிறீர்கள். உங்களுக்கு ஒரு துண்டுதான் தருவோம், அதைக்கூட பேசிக்கொள்ளலாம், வாருங்கள் என்று சொன்னால், அவர்களிடம் போய் பேசலாம் உங்களுக்கு ஒன்றுமே கிடையாது. போங்க என்று சொல்லுகிறவர்களிடம் போய் என்ன பேச்சு வார்த்தை நடத்த முடியும்? ஆகவே பேச்சு வார்த்தையிலே பலன் கிடையாது. எதற்காக இதைச் சொல்ல வருகிறேன் என்றால், இதிலே ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலேதான் நாங்கள் எங்களுடைய கருத்துக்களைச் சொல்லுகிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை. இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் யார்? தமிழ்நாட்டிலே இருக்கிற எல்லா விவசாயிகளுக்கும் நன்றாகத் தெரியும். இங்கேகூட நம்முடைய திரு. பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது, இந்தப் பிரச்சினையிலே மத்திய அரசுக்கு அக்கறை கிடையாது என்று சொன்னார்கள். அது உண்மைதான். நூற்றுக்கு நூறு அதை வரவேற்கத் தயாராக இருக்கிறோம். கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் ஒரு வருடத்திற்கு ஒரு முதல் அமைச்சர், 6 மாதங்களுக்கு ஒரு முதலமைச்சர், ஒரு வாரத்திற்கு ஒரு முதலமைச்சர் என்று சொன்னார். அது உண்மைதான். நூற்றுக்கு நூறு அப்படியே வரவேற்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் அதே நேரத்திலே கர்நாடகத்திலே 6 மாதங்களுக்கு, ஒரு வருடத்திற்கு என்று மாறி மாறி முதலமைச்சர்கள் வந்தாலும், இந்தியாவினுடைய பிரதமராக நான்கரை ஆண்டுகளாக இருக்கிற ஒரே மனிதர் நம்முடைய பிரதமர் மாண்புமிகு நரசிம்ம ராவ் அவர்கள்தான். அவர் மனது வைத்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும். ஆனாலும் இங்கே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள், நான் முன்பே சங்கொலித்து இருக்கிறேன் என்று சங்கொலித்துக் காட்டினார். எதிர்க் கட்சித் தலைவர் சங்கொலித்த பிறகும்கூட, பிரதமர் காதுக்கு அது எட்டாமல் இருக்கிறதென்று சொன்னால் என்ன செய்வது? (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழினம் நாதியற்ற தமிழினம் என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவர் மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பின்படி 11 டி.எம்.சி. தண்ணீரை ஒருவேளை கர்நாடக அரசு தமிழகத்திற்கு வழங்குவதற்கு மறுத்தால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி கர்நாடக அரசுமீது

மத்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று பாரதத்தினுடைய பிரதமர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு பிரதமர் எப்போது தெரிவித்தார்? யாருக்குமே தெரியாத ஒரு செய்தியை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறையினுடைய மத்திய அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது தமிழகத்தினுடைய அனைத்துப் பத்திரிக்கைகளிலும் செய்தியாக வந்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் படுகையிலே இருக்கிற நெற் பயிர்கள் எல்லாம் காய்ந்து சருகாய்ப் போன பிறகு நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிகிறது.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறுகின்ற வகையில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்; நடுவர் மன்றத் தீர்ப்பையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்கிற கர்நாடக அரசு மீது உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று பிரதமர் சொல்லியிருப்பதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். உள்ளபடியே அப்படி நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறேன். ஆனால் நடவடிக்கை எடுப்பதற்கு இவ்வளவு காலதாமதம் ஏன் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட இதே சபையிலே சொல்லி இருக்கிறார்கள், செயல்படாத பிரதமர் என்று. அந்தக் கண்ணோட்டத்தில் செயல்படாத பிரதமர் என்று தன்னைத் தானே நிரூபித்துக்கொள்ளும் வகையிலே இப்படி கால நீட்டிப்பு செய்துகொண்டு போகிறாரோ என்று எனக்குத் தெரியவில்லை. நான் கேட்க விரும்புவது எல்லாம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. எஸ்.டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுடைய பிரதமர் அவர்கள் தவறான பாதையிலே சென்று கொண்டிருப்பதாகச் சொல்கிறார், செயல்படாத பிரதமர் என்று. அவர் எப்படிச் செயல்படுகின்ற பிரதமர் என்பதை இந்த இந்திய நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். உலக நாடுகள்கூட நன்றாக அறியும். 195 பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டும் வைத்துள்ள காங்கிரஸ் கட்சியை, ஒரு மைனாரிட்டி கட்சியை, இன்றைய தினத்திலே ஆளுங் கட்சியாக மாற்றி, நான்கரை ஆண்டுக் காலமாக இந்திய நாட்டின் பிரதமராக இருந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதைவிட ஒரு பிரதமருக்கு என்ன செயல் வேண்டும்? (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு, எதற்கு உங்கள் வாதத்தை வைத்தே உங்களுக்கு எதிர்ப்பைத் தேடிக்கொள்கிறீர்கள்?

திரு. இளம்வழுதி: நான் அதைத்தான் கேட்கிறேன். அதாவது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்களே சொன்னார்கள். அது மட்டுமல்ல, ஒரு மைனாரிட்டி அரசாங்கத்தை இப்படி திறமையாக நாலரை ஆண்டுகளாக ஆண்டு கொண்டிருக்கிறாரே என்று சொன்னார். நாலரை வருடமாக நடவடிக்கை எடுக்க வில்லையே, நாலரை வருடமாக லேட்டாக ஆகிறதே, என்று அதைத்தான் நான் கேட்டேன். வேறு ஒன்றும் கிடையாது. அது மட்டுமல்ல பேரவைத் தலைவர் அவர்களே, இனி இந்தப் பிரச்சினையில் என்ன மாதிரியான அணுகுமுறை வேண்டுமென்று பிரதமர் விரும்புகிறார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால், (குறுக்கீடு)

திரு. எஸ். டேனியல்ராஜ்: திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவர் அதை விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தி.மு.க. மத்தியிலே ஆட்சியில் இல்லை. இங்கேதான் ஆட்சியில் இருந்தார்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவர் மன்றம் அமைப்பதற்குக் காரணமே, தஞ்சை

மாவட்டத்திலே இருந்த ஒரு விவசாயி தனிப்பட்ட முறையில் உச்சநீதி மன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடுத்து, அதன் மூலமாகத்தான் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டதே தவிர, எந்தவொரு அரசியல் கட்சியும் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று அப்படி அமைக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.க.-வுக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது.

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இருந்த விவசாயச் சங்கம் போட்ட வழக்கின் அடிப்படையில் டிரிபியூனல் வந்தது என்று சொல்கிறார். அதைக்கூட மத்தியிலே, திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருக்கும்போதுதான் வந்ததே தவிர, இவர்கள் இருக்கும்போது வரவில்லை. (குறுக்கீடு)

திரு. எஸ். டேனியல்ராஜ்: விவசாயச் சங்கம்தான் உச்சநீதி மன்றத்திற்குச் சென்றது. அந்த நேரத்தில் தி.மு.க. ஆட்சிப்பீடத்தில் இங்கே இருந்தது. அந்த நேரத்தில் இந்த தீர்ப்போடு தங்களை இணைத்துக் கொண்டதே தவிர, இவர்கள் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று இந்த நடுவர் மன்றத்தை அமைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தஞ்சாவூர்க்காரன். அதனால் சொல்கிறேன். மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் அவர்கள், வி.பி.சிங் காலத்தில்தான் டிரிபியூனல் வந்தது என்று சொன்னார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத்தலைவர் சொன்னதைப்போல, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ரங்கநாத அய்யர் என்ற ஒரு விவசாயியும், எங்கள் தொகுதியைச் சேர்ந்த சீனிவாச அய்யரும் சேர்ந்து, சுப்ரீம் கோர்ட்டில் வழக்குப் போட்ட பிறகு, சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசுக்கு ஒரு டைரக்ஷன் வழங்கி, அதில் 30 நாட்களுக்குள் இந்த நடுவர் மன்றம் அமைக்கவேண்டும் என்று ஆணையிட்டதன் அடிப்படையில், 29 நாட்களையும் கடந்து, முப்பதாவது நாள் கடைசி நேரத்தில், அந்த நடுவர் மன்றத்தை மத்திய சர்க்கார் அமைத்தது. அதற்கு தி.மு.க. எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்பதை ஆணித் தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: தனி நபர் போட்ட வழக்கு வாபஸ் வாங்கப் பட்டது. மன்னார்குடியைச் சேர்ந்த திரு. ரங்கநாதன் வாபஸ் பெற்றுக் கொண்டார். திரு. வி.பி. சிங் ஆட்சிக்கு வந்தபிறகுதான் நடுவர் மன்றம்

வந்தது. இந்த மாமன்றத்தில் அதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நடுவர் மன்றத்திற்கு அனுமதிக்கப்பட்டது. விவரம் தெரியாமல் அவர் பேசுகிறார். நம்முடைய அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டு வந்து பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பேருமே தவறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அன்றைக்கு அரசாங்கம் போட்ட வழக்கை வாபஸ் வாங்கிவிட்டார்கள். இந்தத் தனி நபர் போட்ட வழக்கு பெண்டிங்கில் இருந்ததால்தான் அதில் தீர்ப்பு வந்தது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித்தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: ரங்கநாதன் வழக்கை வாபஸ் பெற்றார் என்று சொல்வது தவறு. தமிழக அரசு வழக்கை வாபஸ் பெற்றது. அதற்கான சூழ்நிலை என்ன என்பது வேறு விஷயம். ஆனால் வழக்கு வாபஸ் பெறப்பட்டது. பிறகு 1990 ஆம் ஆண்டு மீண்டும் பேச்சுவார்த்தை நடந்தது. அன்றையதினம் கர்நாடக மாநில முதலமைச்சராக இருந்த திரு. வீரேந்திர பட்டீல் இங்கே வந்து ஒருநாள் பேச்சு வார்த்தையும் நடந்தது. பிறகு மீண்டும் என்ன நடந்தது என்று சொல்லாமலேயே அந்தப் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டோம் என்று சொன்னார்கள். அது சரியான முடிவாகக் கூட இருந்திருக்கலாம். அதில் தவறு கிடையாது. அன்றைக்கு எல்லோரையும் கலந்தாலோசித்துத்தான் அன்றைக்கு முதலமைச்சர் முடிவு செய்தார். அதைத் தவறு சொல்லவில்லை. அதற்குப் பிறகு again the plea before the Supreme Court was that we must be added as a respondent in the petition பிறகுதான் தமிழக அரசு மீண்டும் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றது. சுப்ரீம் கோர்ட், ஏற்கெனவே இருந்த வழக்கில் தீர்ப்பு அளித்தது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் டிரிபியூனல் அமைக்கவேண்டும் என்று தீர்ப்பளித்தற்குப் பின்னால்தான், திரு. சிங்காரம் குறிப்பிட்டதைப் போல, சரியாக முப்பதாவது நாள் அந்த டிரிபியூனல் அமைக்கப்பட்டது. அதுதான் உண்மை.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். அவர்கள் புரிந்து கொள்ளாமலேயே பேசிக்கொண்டிருந்தார்கள். ஏன் சொல்கிறேன் என்றால், பேச்சுவார்த்தையால் இனி எந்தப் பயனும் இல்லை. நடுவர் மன்றம் தான் இதற்குச் சரியான தீர்வு என்று மத்திய அரசாங்கத்தை உச்சநீதி மன்றத்தில் சொல்லச் சொன்னதால்தான் இந்த நடுவர் மன்றம் வந்தது. அதை ஏன் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கிறீர்கள்? (குறுக்கீடு) சரி,

அதையே வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்கிற மாதிரியே வைத்துக் கொள்ளுங்கள்.

பிற்பகல் 12-25

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ட்ரிபியூனல் வேண்டுமென்று ஒரு உத்தரவு கேட்டோம். சுப்ரீம் கோர்ட் உத்தரவை கொடுத்ததே தவிர யாரோ போய் சொன்னதால் தான் சுப்ரீம் கோர்ட் உத்தரவு கொடுக்கவில்லை. அந்த வழக்கு நிலுவையில் இருந்தது. நிலுவையில் இருந்த வழக்கில் தன்னையும் தமிழக அரசு இணைத்துக் கொண்டது. இணைத்துக் கொண்டதற்குப் பின்னால் தமிழக அரசு மட்டுமல்லாமல் ஏற்கெனவே இருந்த மனுதாரர் திரு. ரங்கநாதன் போன்றவர்கள், வேறு மனுதாரர்கள், பொன்னுசாமி ரெட்டியார் போன்ற மனுதாரர்கள் எல்லாம் வலியுறுத்தினார்கள். எங்களுக்கு இந்தப் பேச்சு வார்த்தையில் நம்பிக்கை கிடையாது; எனவே, ஒரு நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. வலியுறுத்தியதை ஏற்றுக்கொண்டு அன்றையதினம் உச்ச நிதிமன்றம் உடனடியாக நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தது. அந்த ஆணையைதான் அன்றையதினம் இருந்த மத்திய அரசாங்கம் அமல்படுத்தியது.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காவிரி நதி நீர்ப்பிரச்சினை என்பது விடியாத இரவாக நீண்டு கொண்டே இருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடம் ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன். வி.பி. சிங்கோ, மொரார்ஜி தேசாயோ ஒரு சில ஆண்டுகள்தான் இருந்தார்கள். மற்றபடி 40 ஆண்டுகள் நீங்களே தான் ஆண்டு இருக்கிறீர்கள். இந்தப் பிரச்சினையில் ஏதாவது ஒரு நல்ல முடிவை எடுத்திருக்க முடியுமா, இல்லையா?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நல்ல கேள்வி இது. நான் பேசும் போது என்னால் சொல்ல முடியவில்லை. ஒரு நல்ல சந்தர்ப்பத்தை கொடுத்திருக்கிறார். 1971 ஆம் ஆண்டு இந்த வழக்கை வாபஸ் பெற்றதற்குப் பின்னால் பலமுறை முதலமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்திரா காந்தி அவர்கள் தலைவராக இருக்கும்போது பலமுறை முதலமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது. இறுதியாக 1974ஆம் ஆண்டு நவம்பர் மாதம்-தேதி மட்டும் தீர்மானத்தில் வரும் - இல்லாவிட்டாலும் அன்றையதினம் பொதுப்பணித் துறை செயலாளராக இருந்தவர் - பெயர் வேண்டுமென்றால் சொல்கிறேன். திரு. சங்கரசுப்பையன் அவர்கள் எழுதிய கடிதத்தில் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். 280 டி.எம்.சி--நாம் வலியுறுத்தியது அதிகம். ஆனால் கர்நாடக மாநிலம் அன்றைய தினம்

ஒப்புக் கொண்டது குறைந்த பட்சம் 280 டி.எம்.சி. தருகிறோம், மிகவும் குறைந்த, இதுபோன்று துயர் இருக்கிற ஆண்டுகளில் 260-க்கும் குறையாமல் தண்ணீர் கொடுக்கிறோம் என்று அன்றையதினம் கர்நாடகா அரசு ஒப்புக்கொண்டது. அதை ஒப்புக்கொள்ள மறுத்தது யார் என்று சொன்னால், வேதனையோடு சொல்கிறேன், உங்களுடைய தலைவர் தான் அன்றையதினம் முதலமைச்சராக இருந்தார்கள். ஒப்புக் கொள்ள மறுத்த காரணத்தால் தான் இவ்வளவு சிரமும். அதை அன்றையதினம் ஒப்புக்கொண்டிருப்பாரானால் 260 to 280. It is there on the records. I have got it. All of you can see it. I would even read it. கொஞ்சம் நேரம் கிடைத்தால் எடுத்து படிக்கிறேன். இங்கே இருக்கிறது. வேறு எங்கும் போகவேண்டியதில்லை. 260-லிருந்து 280 - நல்ல ஆண்டுகளில் மிகவும் குறைந்தபட்சம் 280 டி.எம்.சி., மிகவும் குறைவாக, சொற்பமாக மழை பெய்கிற காலங்களில் 260 டி.எம்.சி. கர்நாடகா அரசு கொடுக்கும் என்று அன்றையதினம் முதலமைச்சராக இருந்த தேவராஜ் அர்ஸ் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அதை ஒப்புக் கொள்ள மறுத்தது இவருடைய தலைவர், அன்றையதினம் முதலைமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் தான்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்கேயோ சுற்றி வளைத்து சொல்கிறார்கள். நான் திரும்பத் திரும்பக் கேட்கிறேன். அன்றைக்கு கர்நாடகத்திலே இருந்து உங்களுடைய முதலமைச்சர்தான். நாங்கள் அதிகமாக கேட்டோம், குறைவாகக் கொடுத்தார்கள், அதற்கு ஒப்புக்கொண்டார்கள் என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன்.. .. ..

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: வேண்டுமானால் நான் இதைப் படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நீங்களும் இங்கே சொல்கிறபோது பழைய விவரங்களை எல்லாம் கிளற வேண்டாம் என்றீர்கள். ஆனால் இப்போது கிளறிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டு நாங்கள் பிரிந்து வந்தாலும், அப்போது

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் செய்தது சரியா, சரியில்லையா என்பது இப்போது வாதிட்டுக் கொண்டுப் போக வேண்டிய தேவையில்லை. அப்போது பலவகையான சிக்கல்கள் இருந்திருக்கின்றன. அந்தச் சிக்கல்கள் இருந்தாலும் பூரண பொறுப்பையும் இந்தியப் பேரரசுதான் ஏற்றுக்கொண்டு இருக்க வேண்டும். ஆனால் இந்தியப் பேரரசு, தேவராஜ் அர்ஸ் அவர்களைக் கூப்பிட்டு இதை ஒப்புக் கொள்ளச் சொல்வது, கலைஞரைக் கூப்பிட்டு ஒப்புக்கொள்ளச் சொல்வது, இப்படிப் பல நடந்தன. என்னிடத்தில் இப்போது ரெக்கார்ட் இல்லை. ஆனால் வைத்திருக்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் காவிரி தண்ணீரை எந்த இடத்தில், எவ்வளவு டி.எம்.சி. தண்ணீர் கொடுப்பது? மேட்டூரிலா, மேலணையிலா, கிருஷ்ணராஜசாகரிலா என்று பேச்சு வருகிறது. அப்படி பேச்சு வருகிறபோது திரு. கருணாநிதி சொன்னது ஒன்று, அவர்கள் சொன்னது ஒன்று. எங்களுக்கு 300 டி.எம்.சி. மேட்டூரில் தர வேண்டுமென்று கருணாநிதி அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு என்ற சரியான கணக்கு இப்போது எனக்குத் தெரியாது. 300 டி.எம்.சி. இங்கே தர வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் கிருஷ்ணராஜசாகரில் திறந்து விடுகிறோம் என்றார்கள். 268 ஆக இருக்கலாம், 270 ஆக இருக்கலாம். கணக்கு சரியாக தெரியாது. இந்த 270-ஐ நாங்கள் ஏற்றுக்கொள்ளமுடியாது, கூடுதலாக வேண்டுமென்று கருணாநிதி அவர்கள் கேட்டதில் என்ன தவறு இருக்கிறது? போதாது என்று கேட்டார்கள். போதாது என்று கேட்டதற்கு, அவர்கள் கெடுத்து விட்டார்கள் என்று எப்படி சொல்ல முடியும்? அதிலே என்ன தவறு? (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ட்ரிபியூனலில் சொன்ன 205 டி.எம்.சி. என்பதில் முழுத் திருப்தி என்பதல்ல. கிடைத்திருப்பதை நாம் இப்போது வாங்க முடியவில்லை என்பதற்காகத்தான் இப்போது நாம் பாடுபடுகிறோம். அதனால், 260-ஐ ஒத்துக் கொண்டிருக்கலாம் என்பது அல்ல. எனவே, வேண்டாம். இதைத் திரும்பத் திரும்பப் பேசி விவாதத்திற்குள்ளே போனால், பிரச்சினைதான் வரும். (குறுக்கீடு) நீங்கள் தெரிவித்திருப்பதில் இங்கே தவறு என்று யாரும் சொல்லவில்லை. அன்றைக்கு 260-க்கு ஒப்புக்கொள்ள மாட்டோம் என்று சொல்லியிருக்கலாம். இன்றைக்கு ட்ரிபியூனல் கொடுத்திருக்கிற 205 டி.எம்.சி.யில்கூட நமக்கு முழுத் திருப்தி என்பது இல்லை. ஆனால், உங்களுடைய வாதம் எங்கே கொண்டுபோய் விடும் என்று சொன்னால், 205 டி.எம்.சி.யிலே திருப்தி அடைந்துவிட்டீர்கள் என்கிற மாதிரி அது வரும். மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் வேறு பல நேரங்களிலே, இந்த 205 டி.எம்.சி என்பது கூட நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல, இருந்தாலும் ட்ரிபியூனல் கொடுத்திருக்கிறது, அப்படிக் கொடுத்ததை முதலிலே கேட்போம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.(குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: திருப்தி என்று நான் சொல்லவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பைக் காட்டிலும், அன்றையதினம் அதிகமான தண்ணீரை கர்நாடக அரசு கொடுப்பதாக ஒப்புக் கொண்டது. அதை ஏற்றுக் கொண்ட பிறகுகூட, மீண்டும் தாவா போட்டிருக்கலாம். அதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. ஏன் என்றால், we demanded more, we demanded 100 t.m.c. more அதைச் சொல்லியிருக்கலாம். அன்றையதினம் ஏற்றுக் கொள்ளாததால்தான், காலம் கடந்து கடந்து போய், இவ்வளவு கஷ்டத்திலே நடுவர் மன்றம் 205 டி.எம்.சி. கொடுத்திருக்கிறது. அந்த 205 டி.எம்.சி.யும் இப்போது நமக்கு வரமாட்டேன் என்கிறது. ஆனால், அன்றையதினம் கர்நாடக அரசு குறிப்பிட்டதை நாம் ஏற்றுக் கொண்டிருந்தால், நிச்சயமாக அந்தத் தண்ணீரை கர்நாடக அரசு கொடுத்திருக்கவேண்டும். அதுதான் எங்களுடைய வாதம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்குப் பேச்சுவார்த்தை நடந்தபோது, திரு.கே.எல். ராவ் அவர்கள் இரண்டு மாநில முதலமைச்சர்களையும் கூப்பிட்டுப் பேசினார்கள். அது எனக்கு நன்றாகத் தெரியும் அன்றைக்கு நான் டெல்லியிலே இருந்தேன். அதுமட்டுமல்ல, உங்களுக்குச் சொல்கிறேன். அப்படிப் பேசுகிறபோது, கருணாநிதி அவர்கள், 267 டி.எம்.சி. போதாது என்று சொனனார்கள். போதாது என்று சொல்லும்போது, அந்த 267 டி.எம்.சி. தண்ணீரை மேட்டூரிலேயிருந்து கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், அவர்கள் கே.ஆர்.எஸ். டாமிலிருந்து தருவோம் என்று சொன்னார்கள். இப்படி மாறி மாறி பேச்சு வந்தபோது, கருணாநிதி அன்றைக்கு அதிகமாகக் கேட்டதிலே என்ன தவறு ?

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் கொஞ்சமாக காலதாமதம் ஆகியதற்கு நாங்கள்தான் காரணம் என்று சொல்கிறார்கள். அப்படியே இருக்கட்டும், உங்களுடைய வாதம் பிரகாரம். எம்.ஜி.ஆர். அவர்களின் அரசாங்கத்திற்கு முன்பு எங்களுடைய அரசாங்கம் இருந்தது. எங்கள் அரசாங்கத்திற்குப் பிறகு எம்.ஜி.ஆர். அரசாங்கம் இருந்தது. அதற்குப் பிறகு நாங்கள் வந்தோம். இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா தி.மு.க வந்திருக்கிறது. நாங்கள் மாறி மாறி வந்தாலும், மத்தியிலே நீங்கள்தானே இருக்கிறீர்கள். நீங்கள் ஏன் இந்தப்

பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காணக்கூடாது, என்பதுதான் எங்களுடைய கேள்வியே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இந்தப் பிரச்சினை, மொத்தத்திலே தமிழகத்திலே உள்ள விவசாயப் பெருமக்களுடைய வயிற்றில் அடிக்கக்கூடியது மட்டுமல்ல, மொத்த தமிழக மக்களுக்கு ஒட்டுமொத்தமாக சோறு படைக்கின்ற நெற்களஞ்சியமாக இருக்கிற தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படுகிறது என்று சொன்னால், ஒட்டு மொத்தமாக தமிழகத்தைப் புறக்கணிக்கிறார்கள் என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்தப் பிரச்சினையில் தமிழ் நாட்டின் சார்பிலே என்ன செய்யவேண்டும் என்று நினைக்கிறீர்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட .. .. .. (குறுக்கீடு)

திரு. எஸ். டேனியல்ராஜ்: கர்நாடக மாநிலத்திலே உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலை என்ன என்பதை அவர்கள் விளக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள், உங்களைத்தான் கேட்கிறார்கள். கர்நாட காங்கிரசைக் கேட்கவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கர்நாடக மாநிலத்தில் தி.மு.க. கட்சியின் நிலை என்ன என்று கேட்கிறார்கள். அதே கேள்வியை நான் திருப்பிக் கேட்கிறேன். கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியின் நிலை என்ன? அங்கே காங்கிரஸ் எம்.பி.க்கள் அனைவரும் கூடி, ஒரு கூட்டத்தைக் கூட்டி, இப்போது நடுவர் மன்றம் கூறியபடி ll டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம், தமிழகத்திற்குத் திறந்துவிட்டால், கர்நாடக மாநில முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்களே, அது எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியுமா?

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற காங்கிரஸ் கட்சியினுடைய பாராளுமன்ற உறுப்பினர்களை எப்போதாவது நீங்கள் அழைத்துப் பேசியிருக்கிறீர்களா? (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் பலமுறை அழைத்து இருக்கிறேன். அவர்கள்தான் வரவில்லை என்பது உண்மை.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி குறுக்கிட்டு வாதத்தை திசைதிருப்பப் பார்க்கிறார்கள். நான்

திரும்பத் திரும்ப நேரடியாகவே கேட்கிறேன். இந்தப் பிரச்சினையிலே இதற்கும் மேலே என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க் கிறீர்கள்? நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட உண்ணாவிரதம் இருந்தார்கள். எப்படியெல்லாம் இருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த உண்ணாவிரத்தின்போது, முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? நான் பிரம்மாஷ்திரத்தைப் பயன்படுத்துகிறேன், என்னுடைய கடைசி ஆயுதம் இதுதான் என்று சொல்லி உண்ணாவிரதம் இருந்தார்கள். நான்கூட நினைத்தேன். கடைசி ஆயுதம் என்கிறபோது, இந்தப் பிரச்சினைக்குக் கடைசியாக ஒரு தீர்வு வரும் என்று நினைத்தேன். தீர்வு வரவில்லை. சுக்லாதான் வந்தார். மாண்புமிகு மத்திய அமைச்சர் சுக்லா வந்தார். வந்து இரண்டு கமிட்டி போட்டார்கள். மானிடரிங் கமிட்டி, இம்ப்ளிமென்டேசன் கமிட்டி என்று. அதையேகூட இப்போது தீர்மானம் போட்டு, அதை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கேட்கிற நிலைமைதான் இருக்கிறதே தவிர, இதிலே தெளிவாக தீர்க்கமாக செயல்படக்கூடிய மத்திய அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதிலே சொல்ல விரும்புவது எல்லாம் இந்தத் தீர்மானத்தை முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பில் நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே மத்தியிலே உள்ள மரியாதைக்குரிய மாண்புமிகு பிரதம அமைச்சரவர்கள் உடனடியாக இந்தப் பிரச்சினையின் முக்கியத்து வத்தைக் கருதி, இதிலே தலையிட்டு 11 டி.எம்.சி. அடி தண்ணீர் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், முழுமையாக ஒரு நிரந்தர தீர்வு காண்பதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த அரசினர் தனித் தீர்மானத்தை எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முழு மனதோடு வரவேற்கிறேன். ஏறக்குறைய 200 கோடி ரூபாய்க்கு குறுவைப் பயிர்கள் பாதிப்பால் நாசமும், 13.3 லட்சம் ஏக்கர் களில் இப்போது சம்பா பயிர்கள் பாதிக்கப்படுகிற சூழ்நிலைகள் ஏற்பட்டு, அதனால் சுமார் 800 கோடி ரூபாய் அளவிற்கு தமிழக விவசாயிகளுக்கு நஷ்டமும், மொத்தத்தில் சுமார் ஆயிரம் கோடி ரூபாய்க்கு தமிழகத்தில் பெருத்த நஷ்டமும், விவசாயத்தையே முழுமையாக நம்பியிருக்கிற பல லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களின்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1995 டிசம்பர் 28

வாழ்வு பாதிப்பும், தஞ்சை காயிதே மில்லத் மாவட்டம், திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், தொன்னாற்காடு மாவட்டம் போன்ற காவிரி நதி நீர் பாயும் இந்த மாவட்டங்கள் மட்டுமன்றி, இந்த மாவட்டங்களில் உற்பத்தியாகிற, உற்பத்தியால் வாழ்ந்து வருகிற ஒட்டுமொத்த தமிழக மக்களின் நிலையும், கஷ்டத்திற்கு ஆளாகிற, உணவுப் பற்றாக்குறைக்கு, பஞ்சத்திற்கு ஆளாகிற விதத்தில் பெரும் அவதி இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதை மனதிலே கொண்டு அரசின் சார்பிலே கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை நான் முழு மனதோடு வரவேற்கிறேன்.

கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் ஆட்சியிலே எந்தக் கட்சிகள் இருந்தாலும், அவர்களுக்குள் எவ்வளவு கருத்துவேறுபாடுகள் இருந்தாலும், ஒன்றிலே மட்டும் கருத்து ஒன்றுமையோடு இருக்கிறார்கள். தமிழகத்திற்கு ஒரு சொட்டு தண்ணீர்கூட திறந்து விடுவதில்லை என்பதில் ஆட்சியிலே, அதிகாரத்திலே எந்த இயக்கம் இருந்தாலும் உறுதியாக இருக்கிறார்கள். ஆட்சியிலே இருக்கிற இயக்கம் மட்டுமல்ல, எதிர்க் கட்சிகளும் அந்த ஒரே உணர்வோடு எதிர்க்கிறார்கள். அதே நிலையைத் தான் இன்றைக்கு எடுத்து நடுவர் மன்றத்தின் தீர்ப்பின் வாயிலாக 11 டி.எம்.சி. அடி தண்ணீர் அளவு தமிழ் நாட்டிற்கு திறந்து விடவேண்டும். அதுவும் உபரியாக அல்ல. நமக்கு தர வேண்டிய தண்ணீரை அவர்கள் ஒவ்வொரு மாதமும் தராத அடிப்படையில் கூட்டி, இப்போது அவர்களுக்கு பற்றாக்குறை என்று அவர்கள் சொல்வதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அந்த அளவையாவது உடனடியாக திறந்து விட வேண்டுமென்று நடுவர்மன்றம் தீர்ப்பு அளித்ததற்குப் பின்னாலேயும்கூட எல்லாக் கட்சிகளும் சேர்ந்துகொண்டு, ஆட்சியில் இருக்கிற கட்சி, எதிர்கட்சி இப்படி அனைத்துக் கட்சிகளும் சேர்ந்துகொண்டு தமிழகத்திற்கு தண்ணீர் தர மாட்டோம் என்று சொல்வது மிகவும் துர்ப்பாக்கியவசமானதாகும். மிகுந்த வருத்தத்திற்கும் கண்டனத்திற்கும் உரியதாகும். இதிலே பொதுவுடமை கட்சி சகோதரர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாரதப் பிரதமர் அவர்கள் இரண்டு முதலமைச்சர்களையும் விரைவிலே அழைத்துப் பேசவேண்டுமென்று ஒரு திருத்தத்தை இதிலே சேர்க்கவேண்டுமென்று கேட்டார்கள். தயவுசெய்து இதைச் சேர்க்கவேண்டாம் என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்றால் இது மேலும் காலதாமதம் ஏற்படுத்துகிற முயற்சிக்கு உதவியாக இருக்கும். நம்முடைய தீர்மானங்களிலே ஒன்று கர்நாடக அரசை வற்புறுத்தி இருக்கிறோம். இரண்டாவது மத்திய அரசை வற்புறுத்தி இருக்கிறோம். மூன்றாவது 'இம்பிளிமெண்டேஷன் கமிட்டி', 'மானிடரிங் கமிட்டி' இந்த இரண்டு கமிட்டிகளையும் - திரு. சுக்லா அவர்கள் நமது முதலமைச்சரவர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது

வந்து அன்று அறிவித்த குழுக்களை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இந்த மூன்று பாராக்களிலே, மூன்று தீர்மானங்களாக.

பிற்பகல் 12-40

இதிலே முதலமைச்சர் அவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று வந்தால், இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, மத்திய அரசு முதலமைச்சர்களை அழைத்தால், கர்நாடக முதலமைச்சர் இந்தத் தேதி எனக்கு சரிப்படாது, ஒத்துவராது, இன்னும் 10 நாட்கள் கழித்து வருகிறேன், அவகாசம் வேண்டுமென்று கேட்பார். பிறகு ஒரே பேச்சுவார்த்தையோடு, ஒரே நாளில் முடிந்து விடப்போவதில்லை. அதற்கு அடுத்த பேச்சு வார்த்தை என்று இன்னொரு முறை தள்ளி வைத்தால் அதற்குள்ளே விவசாயம் முழுவதும் பட்டுப் போய் விடும். இப்போதே மேட்டூர் அணை மூடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே பேச்சு வார்த்தை என்று ஆரம்பித்தால், அதனாலே ஏற்படுகிற கால தாமதம் தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிகள் ஒட்டுமொத்தமாக பாதிக்கிற சூழ்நிலையும் பயிர்கள் பட்டுப்போகிற சூழ்நிலையும் ஏற்படும். எனவே பேச்சு வார்த்தைக்கு வழி செய்கிற விதத்தை அடைக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை, அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து சட்டமன்றத்திலே, அந்த வேண்டுகோளையும் சேர்த்து நிறைவேற்ற வேண்டியது இல்லை. அதைச் சேர்க்க வேண்டியது இல்லை. நீங்கள் கொண்டு வந்திருப்பதே போதுமானது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இன்னும் சொல்லப்போனால் 'வலியுறுத்துகிறோம்' என்று இரண்டாவது பாராவிலே போட்டிருப்பதற்கு பதிலாக, மைய அரசு கர்நாடக அரசை நிர்பந்திக்க வேண்டும், கட்டாயப்படுத்த வேண்டும் என்று சேர்த்தால் அது இன்னமும் வலுவுள்ளதாக இருக்கும். எனவே வேண்டுகோளை விட வேண்டும். மத்திய அரசு கர்நாடக அரசை வலியுறுத்த வேண்டும் என்பதற்கு பதிலாக, நிர்பந்தப்படுத்த வேண்டும். டிரிப்யூனலுடைய உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி, கர்நாடக அரசை மத்திய அரசு வற்புறுத்த வேண்டும், கட்டாயப்படுத்த வேண்டும் என்ற விதத்திலே அந்த வாசகம் அமைந்திருக்க வேண்டும் என்ற என் கருத்தை இந்தநேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு அரசியல் கட்சிகளும் ஒவ்வொரு விதத்திலே ஒவ்வொரு தினத்திலே வேறு வேறு வகையான போராட்டங்களைச் செய்கிறார்கள். ரயில் மறியல், பஸ் மறியல் ஆர்ப்பாட்டம் என்றெல்லாம் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற அரசியல் கட்சிகள் அனைவரும் ஒன்றாக இதிலே இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுகிற விதத்திலே தமிழக அரசே ஒரு நாள் முழு அடைப்பு - தமிழ்நாடு முழுவதுமோ அல்லது காவிரி நதிநீர் பாய்கின்ற இந்த

4,5 மாவட்டங்களிலாவது—எல்லாக் கட்சியினரையும் சேர்த்துக் கொண்டு ஒரு ஒட்டுமொத்தமான போராட்டத்தை நடத்தி, நம்முடைய ஒட்டு மொத்தமான உணர்வுகளை மத்திய அரசுக்கும் கர்நாடக அரசுக்கும் காட்ட முன்வரலாம் என்பது ஒன்று. இரண்டாவது அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று இன்னமும் ஒரு முறை நம்முடைய பிரதமரைச் சந்தித்து வற்புறுத்தலாம் என்பது என்னுடைய இரண்டாவது யோசனையாகும். அதிலே சென்றமுறைகூட முதலமைச்சர் அவர்கள் மற்ற கட்சிகளையெல்லாம் அழைக்கின்றபோது எல்லோரையும் அழைத்திருந்தார்கள். ஆனால் டெல்லிக்குச் செல்லுகிறபோது அழைக்கவில்லை. அதுபற்றி பரவாயில்லை. நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ, எந்தக்கட்சியினர் கூட வரவேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அந்தக் கட்சியினரையெல்லாம் அழைத்துக் கொண்டு மீண்டும் சென்று பிரதமரிடத்திலே வற்புறுத்தலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

மூன்றாவது, உச்ச நீதிமன்றத்திலே இன்றைக்குத் தீர்ப்பு வருகிறது. அந்தத் தீர்ப்பு நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை ஒட்டி ஒரு டைரக்ஷன் கொடுக்கிற விதத்திலோ, உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பைத் தருமேயானால் ஏற்கெனவே நடுவர் மன்றம் 11 டி.எம்.சி. தண்ணீர் தரவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. எனவே நடுவர் மன்றம் சொல்லியிருப்பது சரிதான், எனவே அதைக் கர்நாடக அரசு நிறைவேற்ற வேண்டும் என்றோ அல்லது மத்திய அரசு அதை நிறைவேற்ற உதவ வேண்டும் என்ற முறையிலோ ஒரு டைரக்ஷன் வருமேயானால், அதையும் கர்நாடக அரசு ஒருவேளை மீறுகிற நிலை ஏற்பட்டால் நிச்சயமாக அரசியல் சட்டத்தை மீறியதற்காக நியாயம், தர்மம் இவற்றையெல்லாம் விட்டு விட்டு அரசியல் சட்டத்தை மீறுகின்ற காரணத்திற்காக கர்நாடக அரசை மத்திய அரசு கண்டிப்பாக டிஸ்மிஸ் செய்ய முன் வரவேண்டும். வேறு வழியே கிடையாது. இல்லையென்றால் இந்தியா ஒரே நாடு, ஒற்றுமையோடு இருக்கிற நாடு, ஒருமுனைப்போடு உள்ள நாடு என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமே கிடையாது. தமிழகத்திற்கு வேறு விமோசனமே கிடையாது. வேறு வழியே கிடையாது. இன்னும் ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இதிலே காலதாமதம் அரசின் சார்பிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இதில் முன்கூட்டியே குறுவைப் பயிர் பாதிக்கப்பட்டபோதே, 200 கோடி ரூபாயக்கு குறுவைப் பயிர் பாதிக்கிற சூழ்நிலை தஞ்சாவூரிலே ஏற்பட்டதும், அப்போதே நீங்கள் டிரிப்யூனலை அணுகி இருக்க வேண்டும். உச்ச நீதிமன்றதை அணுகி இருக்க வேண்டும். 200 கோடி அப்போதே நஷ்டம் ஏற்பட்டது. இப்பொழுது கூட இன்டர்லாக்குடரி பெட்டிஷன்

போட்டதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆகஸ்ட் மாதத்திலே போட்டதாக சொன்னார்கள். ஆனால் அந்த மனுவை நீங்கள் டிசம்பர் மாதத்திலே 11-12-1995-லே தான் போட்டிருக்கிறீர்கள். அதற்கு முன்னாலே ஆகஸ்ட் மாதத்திலே நீங்கள் மனு செய்தது இன்டர்லாக்குடரி அப்பிளிகேஷன் அல்ல. இம்பிளிமென்டேஷன் கமிட்டி. ஒரு மானிடரிங் கமிட்டி போடவேண்டும் என்பதற்காக நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். எனவே இந்த இன்டர்லாக்குடரி அப்ளிகேஷன் போடுகிறபோது 11-12-1995-லே பிரதமரை நீங்கள் சந்திக்கிற நேரத்திலே... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-8-1995-ல் கொடுத்த ஒரு எமர்ஜன்சி பெட்டிஷன் இன்டர்லாக்குடரி பெட்டிஷன் தான். தண்ணீர் பிரச்சினைக்காக 1-8-1995-லே I.A. போட்டிருக்கிறோம். இன்டர்லாக்குடரி அப்ளிகேஷன் போட்டிருக்கிறோம். அவசர மனுவாக எமர்ஜன்சி பெட்டிஷனாகத்தான் 21-8-1995-லேயும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல 21,25,28 மற்றும் 30-8-1995 தேதிகளில் நடவடிக்கை எடுத்து விசாரணைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு, மனு தாக்கல் செய்யப்பட்டு அவசர மனுவாக அன்றே போடப்பட்டது. ஜூலை மாதத்தில் தண்ணீர் குறைவு, மழை பொய்த்துப் போகிறது, வருகிற வரத்து குறைந்தது என்று கணக்கிட்டு அன்றைக்கே உடனடியாக, 1 ஆம் தேதியன்று ஆகஸ்ட் மாதம் போடப்பட்டது.

பிற்பகல் 12-45

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கிற தீர்மானத்திலே 2-வது பக்கத்தில் 7-வது பாராவிலே 11-12-1995 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுவை இண்டர்லாக்யூட்டரி அப்ளிகேஷனை தாக்கல் செய்தோம். அதற்குப்பின்னாலே 14-12-1995 அன்று விசாரணைக்கு வந்தது. 19-12-1995 அன்று தீர்ப்புக்கு வந்தது என்று நீங்களேதான் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். அதைத்தான் நானும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர் நடுவர் மன்ற இடைக்கால ஆணைப்படி கர்நாடக மாநிலம் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய காவிரி நதி நீரை முழுமையாக வழங்க வேண்டும் என்று கூறிதான் உச்ச நீதிமன்றத்தில் 1-8-1995 அன்று முறையீடு செய்திருக்கிறோம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 4 மாதங்களாக தண்ணீர் வரத்து குறைந்துபோய் விட்டது. மீண்டும் எங்களுக்கு இப்போது 30 டி.எம்.சி. தண்ணீர் விட

வேண்டுமென்று 11-12-1995 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு மனு இண்டர்லாக்யூட்டரி அப்ளிகேஷன் தாக்கல் செய்தது என்று தீர்மானத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, நீங்கள் 1-8-1995-லே தாக்கல் செய்ததாக இதில் இல்லாவிட்டாலும்கூட, 11-12-1995-ல் தான் முதல் முறையாக உச்சநீதிமன்றத்தை அணுகி எங்களுக்கு விடவேண்டிய தண்ணீரை விடவில்லை; 30 டி.எம்.சி. தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இடைக்கால உத்தரவு கேட்டு இங்கே மனு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 4 மாதங்களிலே கணக்கெடுத்து, ஜூன், ஜூலையிலே தண்ணீர் பற்றாக்குறை வந்திருக்கிறது; ஆகஸ்ட் மாதம் குறைவாக வந்திருக்கிறது என்று ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக சொன்னார்கள். 1-8-1995-லே அந்த மனு போடப்பட்டது. இண்டர்லாக்யூட்டரி அப்ளிகேஷன் உடனடியாக போடப்பட்டது. 2 மாதத்திலே தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது. தண்ணீர் வரத்து கணக்கிட்டு, குறைவாக வந்தவுடனே போடப்பட்டது. அன்றைக்கே உச்சநீதிமன்றத்திலேதான் போடப்பட்டது, இந்த மனு என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது போட்டிருக்கிற மனு, உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று. அந்த மனு நிலுவையில் இருக்கிறது. உடனடியாக தண்ணீர் விட வேண்டுமென்று உச்சநீதிமன்றத்திற்குப் போனோம். அவர்கள் டிரிபியூனலுக்கு போகச் சொன்னார்கள். எவ்வளவு தண்ணீர் இப்போது தேவைப்படும், எவ்வளவு வராமல் இருக்கிறது என்பதை டிரிபியூனல்தான் கணக்கு செய்ய முடியும் என்ற அளவிலே அந்த ஆலோசனையை உச்சநீதிமன்றம் தெரிவித்தது. அதற்குப் பின்னாலே டிரிபியூனலிலே போட்டோம். அவர்கள் 11 டி.எம்.சி. தண்ணீர் உடனே கொடுக்க வேண்டும். டிசம்பருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும். ஜனவரிக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கணக்கிட்டு ஏறத்தாழ 20 டி.எம்.சி.. தண்ணீர் உடனே கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தார்கள். நமக்கு வர வேண்டியது 65 டி.எம்.சி. என்று நாம் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். முப்பதாவது கொடுங்கள் என்ற கேட்டோம். அவர்கள் குறைவாகச் சொன்னார்கள். இதை முடிவு செய்ய வேண்டியது நம்முடைய நடுவர் நீதிமன்றம்தான். உச்சநீதிமன்றம் அளவுகளை, கணக்கீடுகளை சரியாக சொல்லமுடியாது என்ற காரணத்தால்தான் அந்த ஆலோசனையை அவர்கள் வழங்கினார்கள். எவ்வளவு தர வேண்டும் என்பதை நடுவர் நீதிமன்றம் தீர்ப்பு அளிக்க வேண்டும்; நீங்கள் அங்கே போங்கள் என்று சொன்னார்கள். நாம்

1995 டிசம்பர் 28] [திரு. எஸ். கண்ணப்பன்]

அங்கே போய் நம்முடைய தேவையைச் சொன்னோம். அவர்களும் மாற்றுக் கருத்தாக தங்கள் வாதத்தை வைத்தார்கள். அதை நம்முடைய நடுவர் நீதிமன்றம் பரிசீலித்துதான் 11 டி.எம்.சி. உடனடியாக விட வேண்டும்.; அந்த டிசம்பர் மாதத்திலே ஏழு புள்ளி சொச்சம் டி.எம்.சி. விட வேண்டும்; ஜனவரிக்குக் கொடுக்க வேண்டிய இரண்டு புள்ளி சொச்சம் ஆக கிட்டத்திட்ட 20 டி.எம்.சி. விடவேண்டும் என்று தெளிவான தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அதை நாம் அமல்படுத்த வேண்டும். அதற்கு ஒரு டைரக்ஷன் வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்திலே மறுபடியும் போய் இருக்கிறோம். நீங்கள் சொன்னபடி நாங்கள் போனோம். இவ்வளவு தந்து இருக்கிறார்கள். அதை நிறைவேற்றித்தர வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்று போய் இருக்கிறோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் குறித்து மேலும் விவாதம் செய்ய விரும்பவில்லை. ஏனென்றால் இதிலே காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும், இப்போது குறைத்துச் சொல்வதில் ஒன்றும் ஆகிவிடப்போவதில்லை. வெளியே இருக்கிற பொது மக்கள், ஆளும் கட்சியின் சார்பிலே சரியான நடவடிக்கை நாங்கள் எடுத்துள்ளோம் என்று சொல்வதையும் எதிர்க் கட்சியின் சார்பிலே நீங்கள் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை என்று நாங்கள் சொல்வதையும், இவற்றையெல்லாம் நாம் பதிலுக்கு ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருந்தாலும், வெளியிலே இருக்கிற பாதிக்கப்பட்டிருக்கிற விவசாய பெருமக்கள் நேரிடையாக கூர்ந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றெல்லாம் அவர்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தெரிந்து கொண்டுதான் இருக்கிறார்கள். நேரிடையாக அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இதிலே வாதம் செய்ய நான் விரும்பவில்லை. இப்போதாவது இந்தப் பிரச்சினை, இந்த அளவிற்கு வந்ததற்குப் பின்னாலே இன்றைக்கு வருகிற உச்சநீதிமன்றத் தீர்ப்பு கண்டிப்பாக அமல்படுத்தப்பட வேண்டும். அதற்கு முன்னாலே கர்நாடக அரசுக்கு இன்னும் நெருக்கடியை உண்டாக்குகிற விதத்திலே உயர்நீதிமன்றத்திலே டைரக்ஷன் ஒரு பக்கம், இன்னொரு பக்கத்திலே 800 கோடி ரூபாய்க்கு நமக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. உற்பத்தி இழப்பு ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. குறுவைப் பயிர் நஷ்டத்தில் 200 கோடி ரூபாய்க்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இவற்றுக்கு எல்லாம் காரணம் கர்நாடக அரசின் பிடிவாதம். அவர்கள் வேண்டுமென்றே அழுத்தமாக தண்ணீர் திறந்துவிட மறுக்கிற காரணத்தால்தான் இந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று விவசாயிகளின் சார்பிலே அல்லது அரசாங்கத்தின் சார்பிலே இந்த நஷ்டத்தைக் கூறி ஆயிரம் கோடி

ரூபாய்க்கு நஷ்ட ஈடு கோரி கர்நாடக அரசு தரவேண்டும் என்கிற ஒரு வழக்கு உடனடியாக பதிவு செய்ய முடியுமா, அதன்மூலம் கூடுதல் நெருக்கடியை, நிர்பந்தத்தை இந்த கர்நாடக அரசுக்கு ஏற்படுத்தி அதனால் செய்ய முடியுமா என்பதையெல்லாம் நீங்கள் அரசு வழக்கறிஞர்களோடு கலந்தாலோசித்து அந்த வகையிலும் செயல்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், ஏற்கெனவே கிருஷ்ணராஜசாகர் ஏறக்குறைய 360 டி.எம்.சி. அளவுதான் அவர்களுக்கு கொள்ளளவு கொசிட்டி. நம்முடைய மேட்டூர் அணையில் ஏறக்குறைய 90 டி.எம்.சி. அடி அளவிற்கு மேட்டூர் அணைக் கட்டிலே ஒரே நேரத்திலே தண்ணீர் தேக்கி வைக்க முடியும். அதற்குப் பின்னாலே கடந்த காலங்களில் நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தால் 3 அணைக்கட்டுகளை தொடர்ச்சியாக அவர்கள் கட்டிக்கொண்டு அதிகமாக வருகிற உபரித் தண்ணீரையெல்லாம் அவர்கள் சேகரித்து வைத்துக் கொண்டு, புதியதாக உலக வங்கியிடத்திலோ, மத்திய அரசாங்கத்தினிடத்திலோ கடன் வாங்க வேண்டுமென்று சொன்னால்தான் இரண்டு மாநிலங்களிலும் கன்கரன்ஸ் தேவை.

பிற்பகல் 12-50

அவர்கள் ஸ்டேட் ஃபண்டிலேயிருந்தே அணைக்கட்டுக்களைக் கட்டுகிறார்கள். அப்படி 2,3 அணைக்கட்டுக்களைக் கட்டியிருக்கிறார்கள். அதைப்போல விவசாய நிலத்தையும அதிகரித்திருக்கிறார்கள். அப்படிச் செய்துகொண்டு அதே நேரத்திலே தமிழ்நாட்டிலே விவசாயிகள் விவசாய நிலத்தை நாம் அதிகரித்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு நமக்குத் தரவேண்டிய அளவையே தர மறுக்கிறார்கள். அது ட்ரிபியூனல் உச்ச நீதிமன்றம் என்கிற அளவுக்கு வந்து நிற்கிறது. எனவே இதிலே நான் மீண்டும் கேட்டுக்கொள்வது இன்றைய தீர்ப்புக்குப் பின்னலே இதற்கு மேலேயும் காலதாமதத்தை அல்லது பிடிவாதத்தை கர்நாடக அரசு காட்டுமேயானால் அந்த அரசை டிஸ்மிஸ் செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும், ஒன்று. இரண்டாவது நஷ்ட ஈடு கோரிப் பெறுவதற்கு நம் தமிழக அரசின் சார்பிலே அல்லது விவசாயிகள் சங்கங்களின் சார்பிலே தமிழக அரசே ஏற்பாடு செய்து அதற்கும் மனு செய்ய வேண்டும். இவற்றிற்கும் கர்நாடக அரசு மசியாமல் அல்லது ஒத்துக்கொள்ளாமல் இருக்குமேயானால் நம்முடைய ஒட்டுமொத்த எதிர்ப்பைக் காட்டுவதற்கு தமிழகத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே பதவிகளை ராஜினாமா செய்து அதன்மூலம் ஒரு அரசியல் நெருக்கடியை உண்டாக்க முன்வர வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு எப்படியாவது தமிழ்நாட்டிலே வாடுகிற விவசாயப் பெருமக்களை காப்பாற்ற இந்த அரசு எடுக்கிற முயற்சிக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா எதிர்க்கட்சிகளும்

1995 டிசம்பர் 28] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

கண்டிப்பாக ஒத்துழைப்பாக இருப்போம் என்பதையும் தெரிவித்துக் கொண்டு மத்திய அரசை வற்புறுத்துகிற முயற்சியிலே நீங்கள் இன்னும் வேகமாகவும் தூரிதமாகவும் காலதாமதம் இல்லாமலும் செயல்பட வேண்டும் என்கிற என்னுடைய கருத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை அகில இந்திய பார்வார்டு ப்ளாக் கட்சியின் சார்பில் முழு மனதாக ஆதரிப்பதோடு எனது கருத்துக்களையும் இங்கே கூற விரும்புகிறேன். காவிரி நதி நீர்ப் பிரச்சினையால் இன்றைக்கு ஏறத்தாழ 11 இலட்சம் ஏக்கரா நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. 100 கோடி ரூபாய்க்கு மேல் தஞ்சை மக்கள் வருமானம் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதன்மூலம் தமிழகமே பாதிக்கின்ற நிலை உருவாகி இருக்கிறது. அதற்கு அரசு எடுக்கின்ற நடவடிக்கைக்கு ஒட்டுமொத்தமாக தமிழக மக்கள் உணர்வை காட்டுகின்ற வகையில் இந்தச் சட்டப் பேரவையிலே நமது கருத்துக்களைச் சொல்ல வேண்டும். சிலவிதமான கருத்துக்களைச் சொல்வதற்கு காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் வருத்தப்படக் கூடாது. தினமும் டெல்லி செல்கிறேன் என்று இங்கிருந்து காங்கிரஸ்காரர்கள் காலையிலேகூட வந்து இறங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எங்கேயாவது ரொம்ப மீறிப் போகிறது என்றால் நான் தலையிடுகிறேன். இங்கே காங்கிரஸ் என்று சொன்னவுடனே நீங்கள் எழுந்திருக்க வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியிருக்கிறீர்களே; பேசியிருக்கும்போது அதற்கு ஏதோ ஒரு கருத்தைச் சொல்கிறார். நீங்கள் காங்கிரஸ் என்று சொன்னவுடனே எழுந்து நின்றுவிட்டீர்கள் என்றால் எப்படி?

திரு. எஸ். ஆண்டித் தேவர்: தலைவர் அவர்களே, ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் இதில் மத்திய அரசு அக்கறை காட்ட வேண்டும். மத்திய அரசு சார்ந்திருக்கின்ற அந்த இயக்கம் இதுவரையிலும் டெல்லிக்குச் செல்கிறேன்; பலமுறை செல்கிறேன்; இன்று காலையில் தான் வந்தேன் என்று சொல்கிறார்கள். பிரதமரைச் சந்திக்கின்ற நேரத்தில் காவிரி நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக அவர்கள் சொன்னதாக செய்தி வரவில்லை. ஆனால் இங்கேயிருந்து சென்று என்ன பேசுகிறார்கள் என்று சொன்னால் இங்கேயிருக்கிற ** என்று பேசிவிட்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

வந்திருக்கிறார்கள். இதுதான் அவர்கள் அங்கே டெல்லியிலே போனால் செய்கின்ற முயற்சி. அவர்களுக்கு இந்த நாட்டு மக்கள்மீது வாக்களித்த மக்கள்மீது எந்தவித அக்கறையும் இல்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது அவர் கேட்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் நான் டெல்லிக்குச் செல்கிறேன், (குறுக்கீடு) பிரதமரை வற்புறுத்துகிறேன் என்று சொன்னார். நீங்கள் வற்புறுத்தியதாகத் தெரியவில்லையே என்று அவர் கேட்கிறார். (குறுக்கீடு) நான் அதைத்தான் கவனித்துக் கொண்டே வருகிறேன் என்று சொன்னேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லி சென்றதைப்பற்றி நான் குறிப்பிடவே இல்லை. 'நான் டெல்லி செல்கிறேன்; பேசுகிறேன்' என்று சொன்னபோது, நான் டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்தபோது காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் அவர் தலையிட்டு தமிழகத்திற்கு உரிய பங்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்; நடுவர் மன்றத்தின் தீர்ப்பை அமல்படுத்த அவர் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னேன் என்று அப்போதுதான் குறிப்பிட்டேன். இவர் ஏதோ சம்பந்தமே இல்லாமல் பேசுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் அவர் சொல்கிறார். அப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் அப்படிச் செய்தி இல்லை என்கிறார். (குறுக்கீடு) நான் அடுத்து வருகிறேன். அதற்கடுத்து அவர் சொன்ன ** என்பது தேவையில்லை, நீங்கள் பேசவில்லை என்று உங்கள்மீது குற்றச்சாட்டு சொன்னது வரை சரி.

பிற்பகல் 12-55

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள்மீதோ, தமிழக விவசாயிகள் மீதோ காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு அக்கறை இல்லை என்று அவர் சொல்கிறார். அதை அவைக்குறிப்பிலே இருந்து எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவருடைய கருத்து. (குறுக்கீடு) நீங்கள் செய்யவில்லை என்று சொல்கிறார். நீங்கள் செய்யவில்லை என்று சொல்லிவிட்டு, அதற்கு அவருடைய கருத்தையும் சொல்கிறார். மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கம்யூனிஸ்ட் உறுப்பினர் என்ன சொன்னார்களோ அதைத்தான் அவரும் சொல்கிறார்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பேசியதாக எந்தச் செய்தியும் வரவில்லை என்பதைத்தான் நான் சொன்னேன். கர்நாடகத்திலே இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் பதவியை ராஜிநாமா செய்வேன் என்று சொல்லி இருக்கிறார்கள். மத்திய அரசுக்கு அவர்கள் நெருக்கடி கொடுக்கிறார்கள். அவர்கள் சட்டத்தையும் மீறிவிட்டு, மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்கின்ற தீர்மானத்தை அங்கே இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் போட்டுகொண்டு இருக்கிறார்கள். இங்கே இருக்கிற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நேற்றையதினம் சொல்லி இருக்கிறார்கள். மற்றவர்களெல்லாம் ஏன் ஓட்டுமொத்தமாக சேர்ந்து அப்படியொரு தீர்மானத்தைப் போடக்கூடாது என்றுதான் நான் இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜிநாமா செய்யவேண்டும் என்று சொல்வதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அவர்கள்தான் சொன்னார்கள், மத்தியிலே மைனாரிட்டியாக இருக்கிறது என்று. நமது 10 ஓட்டுக்கள் இல்லை என்று சொன்னால் அந்த அரசும் கவிழ்ந்து விடும். அந்த அளவுக்கு நாமும் தீர்மானம் போட வேண்டும். மைனாரிட்டி அரசாக இருந்தாலும் தொடர்ந்து பதவியிலே இருக்கிற பிரதமர் இதுசம்பந்தமாக கர்நாடக அரசை வலியுறுத்தியதாகத் தெரியவில்லை. நாம் உரிமைக்குப் போராடிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் மத்திய அரசுதான் இதற்குக் காரணம் என்று அனைவரும் சொல்கிறோம். அப்படிப்பட்ட மத்திய அரசு இருக்கிறதா, இல்லையா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இன்றைக்கு கர்நாடகம் சட்டத்தை மீறுகின்றபோது, மத்திய அரசுக்கு அந்த அரசை டிஸ்மிஸ் செய்கிற அதிகாரம் இருக்கிறது. அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும். மத்திய அரசு அந்த அளவுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஓட்டுமொத்தமான தமிழ் மக்கள் தங்களது குரலை எழுப்ப வேண்டும். அதுமட்டுமல்ல, அப்படிக் கிடைக்காவிட்டால் நமது நிலைமை என்ன? பெரியாறு அணையிலும் இந்த நிலைமைதான் இருக்கிறது. மதுரை மாவட்டம் பாதித்து இருக்கிறது. காரணம் 132 அடிதான் நாம் வைத்துக்கொள்ளலாம் என்று கேரளா அரசு சொல்லுகிறது. நாம் பலகோடி ரூபாய் செலவழித்து அந்த அணையைக் கட்டியிருக்கிறோம். 156 அடி தண்ணீரை நாம் தேக்கிக் கொள்ளலாம் என்ற நிலை இருந்தும் அவர்கள் அனுமதிக்காத காரணத்தால் இன்றுமுதல் பெரியாறு அணை மூடப்படுகிறது. இன்றுமுதல் காவிரி அணையையும் மூடுகிறார்கள். ஆகவே, பாசனத் தண்ணீர் நிறுத்தப்படுகிறது. இனி ஒரு வினாடி தவறினாலும் தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற

உழவர்களுக்கு, அங்கேயுள்ள பயிர்களுக்கு தண்ணீர் தாமதப்பட்டால், இறந்தவனுக்கு உணவு கொடுத்தது போன்றுதான் ஆகும். ஆகவே, இன்றைக்கே அவர்கள் திறக்கின்ற அளவுக்கு மத்திய அரசு அவர்களைக் கட்டாயப்படுத்த இந்த அவையின் மூலமாக பிரதமருக்கு நாம் தெரிவித்துக்கொள்ள வேண்டும். அதை வற்புறுத்தவேண்டும். இன்னும் இரண்டு தினங்கள் பிந்தினாலகூட கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் போய்ச் சேருவதற்கு 30 தினங்கள் ஆகும். ஆகவே, உறுதியாக மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அப்படி இந்த மத்திய அரசும் நமக்கு வரவில்லை என்று சொன்னால், தமிழ் இனம் பாதிக்கப்படுகின்றபோது ** தஞ்சை மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பினைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று இருக்கிற வாதம் சரியல்ல. ** வித்திடுவதாக அது அமையும், எனவே, அது அவைக்குறிப்பில் இருக்க வேண்டியது இல்லை. திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் தனித் தீர்மானத்தை இந்தியக் குடியரசுக்கட்சியின் சார்பிலே முழு மனதாக வரவேற்று சில கருத்துக்களை வழங்க வாய்ப்பு தந்த உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த நான்கரை ஆண்டுக்காலமாக காவிரி நீரைப் பெறுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து வந்த அனைத்து நடவடிக்கைகளையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரிக்கு மிக நீண்ட வரலாறு உண்டு, கரிகால் பெருவளத்தான் காவிரியிலே கல்லணையைக் கட்டியதாக நம்முடைய தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரம் சொல்கின்றபோது,

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூவாடை அது போர்த்தி
நடந்தாய் வாழி காவிரி"

என்று இளங்கோவடிகள் அந்த காவிரி நடந்து வருகிற விதத்தை அழகுபட தெளிவுபடுத்துவார்கள். இன்றைக்கு கர்நாடகம் அதிலே அணைகள் கட்டியதன் மூலமாக, நடந்து வந்த காவிரியினுடைய கால்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பிற்பகல் 1-00

தமிழகத்தின் வரலாற்றைச் சொல்லுகிறபோது காவிரி, தென்பெண்ணை, பாலாறு என்று சொல்வார்கள். வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவேரி என்று சொல்வார்கள். இப்படியெல்லாம் சொல்லப்பட்ட அந்தக் காவிரியின் சிறப்பும், புகழும் இன்றைக்குக் கொச்சைப்படுத்தப்பட்டு, நம்முடைய பக்கத்து மாநிலமான கர்நாடக மாநிலம் மத்திய அரசையும் பொருட்படுத்தாமல், எந்த வரைமுறைகளையும் பொருட்படுத்தாமல் சட்டங்களையும் பொருட்படுத்தாமல், நடுவர்மன்றத்தையும் பொருட்படுத்தாமல், கயநலத்தனமாக அதிலே கபினி, ஹேமாவதி, சொர்ணவதி ஆகிய அணைக்கட்டுக்களை அவர்களாகவே கட்டிக் கொண்டதன் மூலம் நமக்குக் கிடைக்கவிருந்த நீர் இன்றைக்குத் தடைபட்டுப் போய் அதன் மூலமாக தஞ்சை டெல்டா பகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகள் நூற்றுக்கணக்கான கோடியை இழக்கின்ற அளவுக்கு, மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டு சொல்லொணாத் துயரிலே மூழ்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பேச்சுவார்த்தை 1892-லே துவங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 1924-லே, 75 ஆண்டுகாலத்திற்கு முன்பு ஒரு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை 75 ஆண்டுகளாகவே கர்நாடக அரசு மீறி வந்திருக்கிறது. 1956-லே இந்த நதிநீர் தாவா சட்டம் உருவாக்கப்பட்ட பின்னாலும், அந்தச் சட்டம் கர்நாடக அரசை எந்தவகையிலும் கட்டுப்படுத்தாமலேயே இருந்திருக்கிறது. 1950-லே இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியபோது, அரசியல் சட்டத் தந்தை டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்தியாவிலே உள்ள எல்லா நதிகளையும் தேசியமயமாக்க வேண்டும். அதன் மூலம்தான் மாநிலங்களுக்கிடையில் இந்த நதிப் பிரச்சினையைத் தவிர்க்க முடியும் என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். அந்த நதிகள் தேசிய மயமாக்கப்படுகின்ற சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால் இன்றைக்கு இந்தப் பிரச்சினை எழுந்திருக்காது. இப்படி மாநிலங் களுக்கிடையே பிரச்சினை எழுந்திருக்காது. இந்தியாவிலே துரதிருஷ்டம். ஒரு புறம் வெள்ளம், ஒருபுறம் பெரும் வறட்சி, ஒருபுறம் நதிகளின் மூலம் வெள்ளம் ஏற்பட்டு அங்கே உள்ள பயிர்கள் நாசம் ஆகிறது. இன்னொருபுறம் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் நாசமாகிறது. ஆகையால், இந்த நிலைமைகள் மாற வேண்டுமென்றால் நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை தேசிய அளவிலே நாம் வலியுறுத்த வேண்டும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். பல்வேறு அனைத்துக் கட்சிக் கூட்டங்களைக் கூட்டியிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். பல தனித் தீர்மானங்களை இந்த அவையிலே நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து டெல்லிக்குக் கொண்டுபோய் பிரதமர் அவர்களிடம் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே நம்முடைய மாநில அளவிலே கடையடைப்புகள் நடத்தியிருக்கிறார்கள். தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இவ்வளவு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டும், கர்நாடக மாநில அரசு சுயநலத்தனமாக நடந்து வந்திருக்கிறது. மத்திய அரசு முழுக்க முழுக்க ஒரு கேட்பாரற்ற தன்மையோடு, ஒரு மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய உரிமையை இன்னொரு மாநிலம் ஆக்கிரமிக்கிறபோது, அதைப் பாராமுகமாக இவ்வளவு ஆண்டுகாலமாக தொடர்ந்து பின்பற்றி வந்திருக்கிறது. இனியும் இந்தப் பாராமுகத்தை மத்திய அரசு பின்பற்றுமேயானால், தேசிய ஒற்றுமைக்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் இந்தியாவிலே பொருள் இல்லாமல் போய்விடும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கிற, இந்தத் தமிழக அரசு எடுக்கிற நடவடிக்கைகள் அனைத்தையும் நான் இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே வரவேற்று அவர்களோடு செயல்பட இதயப்பூர்வமான உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதரண பள்ளிக் கூடத்துப் பிள்ளைகள் பட்டாசு வெடித்தால்கூட சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்கிறவர்கள், எதற்கெடுத்தாலும் 356-ஐப் பற்றிப் பேசுகிறவர்கள், ஒரு மாநில அரசு இன்னொரு மாநில அரசின் உரிமைகளைத் தொடர்ந்து அத்துமீறி பறித்து வருவதைப் பார்த்து பேசாமல் இருப்பது இன்றைக்கு வியப்பாக இருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் காவிரி தந்த கலைச்செல்வி என்ற புகழுக்கும், பெருமைக்கும், உரியவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர்கள் இந்தக் காவிரியை மீட்டுத் தந்த புரட்சித் தலைவியாக நிச்சயம் வரலாற்றிலே பரிமளிப்பார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே, தமிழக அரசு எடுக்கிற எல்லா நடவடிக்கைகளுக்கும் இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் வரவேற்புத் தரப்படும் என்று சொல்லி, நாளை நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு நமக்குச் சாதகமாகக் கிடைக்குமானால், அந்தத் தீர்ப்பையும் நிறைவேற்ற கர்நாடக அரசு தவறுமேயானால் கர்நாடக அரசின்மீது நாம் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றைத் தொடரலாம் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லி, இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை விவசாயிகளையும் மற்றும் காவிரி பாய்கின்ற பகுதி விவசாயிகளை எல்லாம் காக்கவேண்டுமென்ற நோக்கத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை முழுமையாக வரவேற்கிறேன்.

பிற்பகல் 1-05

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு விவசாயிகள் சங்கமும், உழவர் உழைப்பாளர் கட்சியும் தமிழக முதல்வர் அவர்களுக்கு உறுதியாக பக்கத் துணையாக நிற்கும் என்ற வாக்குறுதியைத் தந்து இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றியைக் கூறி ஒருசில கருத்துக்களை முன்வைக்கிறேன்.

இன்றைக்கு தஞ்சைத் தரணியில் இருக்கின்ற நிலைமைகள் நாட்டிலே உள்ள அனைவருக்கும் தெரியும். காவிரி நடுவர் நீதி மன்றம் 11 டி.எம். சி. தண்ணீரை உடனடியாகத் திறந்துவிட வேண்டும் என்று ஆணையிட்டு பத்து நாட்களுக்கு மேல் ஆகின்றன. இதற்குப் பிறகும் கர்நாடக அரசு நடுவர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அவமதித்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு மட்டுமே இருக்கிறது. இதை மத்திய அரசின் நீர் வளத் துறை அமைச்சர் பத்திரிகையிலே சொல்லியிருக்கிறார். அந்த நடுவர் நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்தப்படுகின்ற பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு வி.சி. சுக்லா அவர்கள் சொல்லியது பத்திரிக்கையிலே செய்தியாக வந்திருக்கிறது. ஆனால் இன்றுவரை அமல்படுத்தப்படவில்லை. அது நிச்சயமாக அமல் ஆகாது என்பது நமக்குத் தெரியும். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் காவிரித் தண்ணீருக்காகத் தன்னையே தியாகம் செய்து உண்ணாவிரதம் இருந்த நேரத்திலே, அந்த உண்ணாவிரதத்தை முடித்துவைக்க வந்த மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லிவிட்டுச் சென்றார்கள். காவிரித் தண்ணீரைத் தமிழகத்திற்கு விடுவதற்காக கண்காணிப்புக் குழு ஒன்றையும், நடைமுறைப்படுத்தும் குழு ஒன்றையும் மத்திய அரசு அமைக்கும் என்று சொல்லிச் சென்றவர்தான். இன்றுவரை அந்தக் குழுக்கள் அமைக்கப்படவில்லை. அது மத்திய அரசினுடைய அரசாணையில் வந்திருக்கிறது. ஆனால் அந்த அரசாணை இன்னும் வெறும் எழுத்தளவிலேயே இருக்கிறது அல்லாமல் செயல்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு பிரச்சினைக்கும் உச்சநீதிமன்றம் சென்று, உச்சநீதிமன்றத் தீர்ப்பினைப் பெற்று, அந்தத் தீர்ப்பினை அமல்படுத்தப்படுவதற்காகத்தான் மத்திய அரசு தலையிடும் என்ற நிலைமை இருக்குமேயானால் எப்பொழுது நம்முடைய தஞ்சைத் தரணியினுடைய பயிர்களைக் காப்பாற்றுவது? நேற்றைக்குப் பொதுப் பணித்துறை அறிவிப்பாகப் பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. அதாவது மேட்டூரிலே செவ்வாய்க்கிழமை இருக்கின்ற

தண்ணீர் 37.25 கனஅடி என்றும் 1850 கியூசெக்ஸ் தண்ணீர்தான் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும், 8895 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டுக் கொண்டு இருந்தது, இப்போது வெளியேற்றம் வெறும் 1850-கனஅடிக்குக் குறைந்திருக்கிறது என்றும் தெரிவித்துள்ளது. வேளாண்மைத் துறை, இன்னும் இந்தப் பயிர்கள் இந்த ஈரப்பதத்தை வைத்துக் கொண்டு, ஒருசில நாட்கள்தான் இருக்கும் என்ற அறிவிப்பையும் சொல்லியிருக்கிறது. அதுவும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆனால் இது மத்திய அரசுக்குத் தெரியவில்லையா? மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குத் தெரியவில்லையா? ஒவ்வொன்றுக்கும் நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகே நிர்வாகம் செயல்படும் என்றால், Justice delayed is justice denied என்று சொல்லுவார்கள். நீதிமன்றத் தீர்ப்பு என்பது எப்பொழுதும் எந்த வழக்கிலும் விரைவாக கிடைக்காது. நீதிமன்றத்திற்குச் செல்லுவது என்பதே இழுத்தடிப்பதற்காகத் தான். காலதாமதத்திற்காகத்தான் நீதிமன்றம் பயன்படுகிறது, ஏனென்றால் அங்கே வழக்கறிஞர்கள் சட்டத்தின் சந்து பொந்துகளை எல்லாம் வைத்து நீண்டநாட்களாக அதை வாதாடிக் கொண்டிருப்பார்கள். அந்தத் தீர்ப்பு கிடைத்ததற்குப் பிறகுதான் நமக்குத் தண்ணீர் என்றால் தஞ்சையிலே இருக்கின்ற பயிர்கள் நிச்சயமாகக் காப்பாற்றப்படாது. நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகுதான் நிர்வாகம் செயல்படும் என்றால் உச்சநீதிமன்றமே மத்திய அரசாக இருந்து விட்டுப்போகலாம். இதற்கு மத்திய அரசு தேவைதானா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு மத்திய அரசு இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள இந்தப் பிரச்சினையை நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகும் அதை நிறைவேற்றாமல் காலதாமதம் செய்து கொண்டே இருந்தது என்றால் உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகும் அதை நிறைவேற்றும் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? ஆக கர்நாடக அரசு உடனடியாகத் தண்ணீர் திறந்து விடவேண்டும் என்கின்ற உத்திரவைப் பாரதப்பிரதமர் அவர்கள் பிறப்பிக்க வேண்டும். இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்களைப் பற்றிச் சொல்லுகின்ற போதெல்லாம் ஆத்திரப்பட்டார்கள். இந்த நேரத்திலே அவர்களுக்கு விவசாயிகள் பெருமக்களின் வேண்டுகோளாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இங்கே இருக்கின்ற காங்கிரஸினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை அழைத்துச் சென்று பிரதமரைச் சந்தித்து நாளையே ஏன் தண்ணீரைத் திறந்துவிட அவர்கள் சொல்லக் கூடாது? அவர்கள் தமிழகத்திலே ஆட்சியில் இல்லாமல் இருக்கலாம். ஆனால், தமிழகத்தினுடைய ஆட்சியைப் பிடிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இது அனைவருக்கும் தெரியும்.

பிற்பகல் 1-10

ஆனால் தமிழகத்தின் ஆட்சியைப் பிடிக்கத் துடிப்பவர்கள் ஏன் தமிழக மக்களுக்காகத் தண்ணீர் திறந்துவிடப்படுவதற்காகத் துடிக்கக் கூடாது? கண்ணில் பட்டால் கரிக்குமா, புருவத்தில் பட்டால் கரிக்குமா என்று சொல்வார்கள். இப்போது நம்முடைய கண்ணிலே பட்டுக்கொண்டிருக்கிறது. அது கரித்துக்கொண்டிருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையில் காலதாமதம் செய்யாமல் காங்கிரஸ் கட்சியினர் செயல்படவேண்டும். மத்தியில் காங்கிரஸ் கட்சிதான் ஆட்சியில் இருக்கிறது. கர்நாடகத்தில் இன்று எதிர்க்கட்சிதான் ஆட்சியில் இருக்கிறது. அவர்களுடைய காங்கிரஸ் கட்சி அங்கே ஆட்சியிலே இருந்தாலாவது அந்த ஆட்சிக்கு ஏதாவது வந்துவிடும் என்று அவர்கள் அச்சப்படலாம். ஆனால் அங்கே இப்போது எதிர்க்கட்சிதான் ஆட்சியில் இருக்கிறது. ஏன் இந்த நேரத்தில்கூட இதனை அமலாக்க அவர்கள் முயற்சி செய்யவில்லை என்பதுதான் இங்கிருக்கின்ற விவசாயப் பெருமக்கள் கேட்கின்ற கேள்வி. எனவே இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினை என்பது தமிழகத்தினுடைய உயிர்நாடியான பிரச்சினை.

இந்தக் காவிரிப் பிரச்சினை முன்பு வந்த காலத்திலே காங்கிரஸ் கட்சி கர்நாடக மாநிலத்திலே ஆட்சியில் இருந்தபோது காவிரிப் பிரச்சினையில் அடிபட்டு உதைபட்டு தங்களுடைய உயிரையும் உடைமையையும் இழந்தவர்கள் கோவை, பெரியார் மாவட்ட விவசாயப் பெருங்குடிமக்கள். அவர்கள் கர்நாடக மாநிலத்தை வளப்படுத்துவதற்காகச் சென்றவர்கள் உதைபட்டு வந்தார்கள்.

இன்றைக்குத் தமிழகத்தில் காவிரிப் பாசனத்தில் இருக்கின்ற விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகப் பெரியார் மாவட்டத்திலே இருக்கின்ற பவானிசாகர் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்துவிடுவதற்குத் தமிழக அரசு உத்திரவு பிறப்பித்து இருக்கிறது. இவ்வாறு பவானிசாகர் அணையில் இருக்கின்ற தண்ணீரைத் திறந்து விடுவதால் அங்கே இருக்கிற பயிர் முழுவதும் பாதுகாக்கப்படும் என்றால் நிச்சயமாக அதைத் திறந்துவிடுவதில் தவறு இல்லை.

பவானிசாகரிலும் இந்த ஆண்டு மழை குறைவாகப் பெய்து1243.93 மில்லியன் கன அடிதான் இருக்கிறது. எனவே இந்தச் சூழ்நிலையில் அங்கே இருக்கிற விவசாயிகளும் தங்களுடைய பயிர் காய்கிறதே என்று அவர்களும் தங்களுடைய உணர்வுகளைத் தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அங்கே வெறும் கடலை, எள் போன்ற புஞ்சைப் பயிர்கள்தான் சாகுபடி செய்யப்பட்டு இருக்கின்றன. எனவே அவர்கள்

நிலைமையும் பாதிக்கப்படாமல் அவர்களையும் இந்தத் தண்ணீர்ப்பிரச்சனையில் பாதுகாத்தவேண்டும் என்ற ஒரு கருத்தையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குக் காவிரியிலிருந்து உடனடியாகத் தண்ணீரைத் திறந்து விட்டாலன்றி தஞ்சையில் இருக்கின்ற பயிர்கள் பாதுகாக்கப்பட மாட்டாது. அங்கே 13 இலட்சம் ஏக்கரில் பயிர்சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு விவசாயி 3000 ரூபாய் செலவழித்திருந்தாலும்கூட இன்றைக்கு 400 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு மட்டும் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 15 இலட்சம் டன் நெல்லை விலையாகக் கணக்கிட்டால் கிட்டத்தட்ட 1000 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையின்றி, உண்ண உணவின்றி இருக்க வேண்டிய பரிதாபகரமான நிலை இருக்கிறது. இந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டத்திற்குத் தமிழக அரசு மட்டுமே பொறுப்பேற்றுக் கொள்வது என்றால் அந்தச் சுமையைத் தமிழக அரசு தாங்க முடியாது. எனவே இந்த நேரத்தில்கூட ஒரு மத்திய அரசு வந்து இதற்கு நிவாரணம் அளிக்கத் தவறினால், ஜனநாயக நாட்டில் அதாவது கூட்டாட்சித் தத்துவ முறை இருக்கிற நிலையில், ஜனநாயகமே சீர்குலைந்து விட்டது என்றுதான் நாங்கள் இந்த நேரத்தில் சொல்லவேண்டி இருக்கிறது. மத்திய அரசில் இருக்கின்ற பாரதப் பிரதமர் அவர்கள் கர்நாடக முதல்வரையும், தமிழக முதல்வரையும் அழைத்துப் பேசவேண்டும் என்று இன்னும் சொல்லிக் கொண்டிருப்பது அவ்வளவு சரியானதல்ல. அழைத்துப் பேச வேண்டும் என்ற அவசியமே இல்லை. எனவே பாரதப் பிரதமர் அவர்கள் உத்திரவாகப் போட்டு மத்தியில் இருக்கின்ற ராணுவத்தை வைத்தாவது அங்கே தண்ணீரை நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி திறந்துவிட வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். வி. சண்முகம், சுருக்கமாகப் பேச வேண்டும்.

திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியார் அவர்கள் இந்தக் காவிரி நதிநீர்ப்பிரச்சினையில் எவ்வளவு நிதானமாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அவ்வளவையும் எடுத்து விட்டார்கள். சட்ட ரீதியாக எடுக்கவேண்டியதையும் எடுத்து விட்டார்கள். சத்தியாக்கிரகம் செய்தும் பார்த்துவிட்டார்கள். நான் எண்ணிப்

பார்க்கிறேன். இந்த மன்றத்திலே இப்படித் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற இருக்கின்ற நேரத்திலே இதை அரசியல் ஆக்கி ஆதாயம் தேட வேண்டும் என்பதற்காக எத்தனைவிதமான பேச்சு, விவாதம்? இந்த நடுவர் மன்றம் அமைத்தது யார் என்றெல்லாம் கூறி அரசியல் ஆதாயம் தேடுவதற்கான முயற்சியினைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த முதலமைச்சர் அவர்கள் நினைத்தால் கீழே இறங்கி, இந்தப் பிரச்சினையைத் தட்டிவிட்டு, இதிலே வேறு மாதிரியாக ஆதாயம் தேடவேண்டும் என்று நினைத்திருந்தால் என்ன ஆகி இருக்கும்? ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. இதிலிருந்து இந்த முதலமைச்சருக்கு நாட்டுப் பற்று இருக்கிறது, தேசப்பற்று இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

இந்தத் தேசியம் என்கிற அமைப்புக்குள்ளே நின்று ஒரு முதலமைச்சர் எவ்வளவு காரியங்கள் ஆற்றவேண்டுமோ அவ்வளவும் செய்தாகிவிட்டது. தேசியத்திற்கு வெளியே போய்ச் செய்வதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள். ஏடா தம்பி எடுடா பேனா என்று தட்டிவிட்டு வேடிக்கை பார்க்க ஆட்கள் எல்லாம் இருக்கிறார்கள். எதற்குச் சொல்கிறேன் என்றால், இந்தமாதிரி விஷயங்களைத் தேசபக்தியோடு அணுகவேண்டும். தேச பக்தி இருந்தால்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். எனக்கு மிகவும் வருத்தம் என்னவென்றால், பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் ஒரு வரியிலே வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் பேசியது, இந்தக் குதிரை கீழேயும் தள்ளி விட்டு குழியும் பறித்தது என்று கிராமத்தில் சொல்வார்கள் அது மாதிரி எனக்கு இருந்தது. இன்றைக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய அனைத்து அதிகாரமும் பாரதப் பிரதமர் கையில்தான் இருக்கிறது. எல்லாம் செய்து பார்த்தாகிவிட்டது. எம்.பிக்கள் குழு, சர்வகட்சிக் குழு, எட்டு நாள் அபிடவிட் பைல் செய்துவிட்டோம், ஐ.ஏ. தேதி ஏப்ரல், ஜூன் இப்படியெல்லாம் ஒரு சாக்கு, 13 லட்சம் ஏக்கர் தண்ணீர் இல்லாமல் பாழாகிக் கொண்டிருக்கிறது. அவர் ஒரே ஒரு வார்த்தை சொன்னால் முடிந்துவிட்டது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் வேண்டாம்.** என்று சொன்னதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் பிரச்சினையில் பேசி முடியுங்கள்.

திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு மைல்டா இந்தப் பிரச்சினையை அணுக முடியுமோ அவ்வளவு மைல்டாக அணுகி விட்டார்கள். இதில் ஒவ்வொருவருக்கும் வரக்கூடிய சந்தேகம் என்னவென்றால், இந்தியாவில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மத்திய அரசு இருக்கிறது, மாநில அரசு இருக்கிறது. மாநில அரசு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்கிறது. மத்திய அரசு பேசாமல் இருந்தால் என்ன செய்ய முடியும்? செயல்படாத பிரதமர் என்றால் கோபம் வருகிறது. 13 லட்சம் ஏக்கர் தண்ணீர் இல்லாமல் பாழாகிக் கொண்டிருக்கிறது. இதில்கூட பேசமாட்டேன் என்றால் எப்படி? ஆகவே ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தாகவேண்டும். தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் கட்சியினர் எத்தனையோ வேலைகள் செய்கிறார்கள். டெல்லிக்குப் போகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு போகிறார்கள். யார் யாரையோ கூப்பிட்டுக் கொண்டு போகிறார்கள். என்னவெல்லாமோ செய்கிறார்கள். அவர்கள் எல்லாம் இதிலே அக்கறை எடுத்துக்கொண்டால் 13 லட்சம் ஏக்கர் விவசாயிகள் வாழ்ந்துவிடுவார்கள். அதில் காட்டுகிற அக்கறையை இதில் கொஞ்சம் காட்டுங்கள். இப்போது தண்ணீர் வந்து இந்த முதலமைச்சருக்கு நல்ல பெயர் வந்துவிடும் என்ற பயம் இருந்தால் என்ன செய்ய முடியும்? முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். இதிலே அரசியல் வேண்டாம், தனித்துப் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டார்கள். நமக்குத் தைரியம் இருந்தால் நானும் தனித்துப் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்ல ஆள் இல்லை, தேடிக் கொண்டு இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், பேரவைத் தலைவர்கூட நினைக்கலாம். இதில் அரசியல்தான் இருக்கிறது. இந்த நிலை நீடித்தால் என்ன ஆகும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை அரசியல் ஆக்கலாம். ஆக்க வேண்டாம் என்று நான் வேண்டுகோள் வைத்தேன். வேறொன்றும் இல்லை.

திரு. எஸ். வி. சண்முகம்: இந்தக் காவிரித் தண்ணீர்ப் பிரச்சினையே இப்படித் தள்ளிப்போட்டு தள்ளிப்போட்டு இங்கொரு வேஷம், அங்கொரு வேஷம் என்று இருந்தால் கடைசியில் எங்கு போய் முடியும்? அதுபோல்தான் பஞ்சாப் சீரழிந்தது. இப்படி இரட்டை வேஷம் போடுவதால் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு) அவர் காவிரிப் பிரச்சினைக்குத்தான் வருகிறார். நான் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடு) வேறு எங்காவது மீறிப் போனால் அப்போதெல்லாம் நீக்கவில்லையா, உட்காருங்கள். இந்தப் பிரச்சினையை முடிக்கவில்லை என்று சொன்னால், பஞ்சாபிலே எந்த அளவுக்கு

நிலைமைகள் வந்ததோ அது வரும் என்று சொல்கிறார், அவ்வளவுதான். மேற்கொண்டு ஏதாவது அதற்குள்ளே போனார் என்றால் நான் அதை நிறுத்தலாம்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பதாக இருந்தால் அதைத் தெரிவிப்பதில் தவறு இல்லை. ஆனால் ஆசனத்தில் அமர்ந்து கொண்டே பேரவைத் தலைவருடன் பேசிக்கொண்டு இருப்பதை நான் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். இது முறையற்ற செயல் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் முறையற்ற செயல் எதுவும் இல்லை. எங்கள் கட்சிக் கொறடா எழுந்து சொல்லிக் கொண்டிருக்கிறார். நான் கீழே உட்கார்ந்துகொண்டு அவருக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன். அதுதானே தவிர முறையற்ற செயல் எதுவும் இல்லை. கட்சிக் கொறடா எழுந்து பேசிக் கொண்டிருக்கும்போது நான் எழுந்திருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் அங்கே சில பிரச்சினைகளில் என்ன ஆயிற்றோ அது இங்கே வந்துவிடக்கூடாது என்று சொல்கிறார், வேறொன்றுமில்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சென்சிடிவ் இஷ்யூ. எங்கள் மாவட்டத்திலேகூட பக்கத்து மாவட்டத்திற்குத் தண்ணீர் தரவேண்டும் என்ற மத்திய அரசின் திட்டத்திற்கு நாங்கள் போராட்டம் நடத்தினோம், ஊர்வலம் சென்றோம். பல்வேறு போராட்டங்கள் நடத்தினோம். தண்ணீர்ப் பிரச்சினை பெரிய இஷ்யூ. இதை சென்சிடிவ் இஷ்யூவாக ஒரு தீர்மானம் கொண்டு வருகிறோம். இதில் பிரதமர் செயல்படாதவர் என்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்த உணர்வோடு முதலில் பேசி இருந்தால் பரவாயில்லை. இந்தப் பேச்சிலேயிருந்து ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்கிறார். உட்காருங்கள்.

பிற்பகல் 1-20

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வருத்தப்படக்கூடாது. ஏனென்றால் நீங்கள் இந்தியாவை ஆளுகின்றவர்கள், சுயேட்சை அல்ல. கம்யூனிஸ்ட் கட்சிபோல் ஒரு ஓரத்தில் இருக்கின்ற கட்சி அல்ல. நீங்கள் இந்தியாவை ஆளுகின்றவர்கள் (குறுக்கீடு).

[1995 டிசம்பர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தம்புசாமி உட்காருங்கள், நான் சொல்லுகிறேன். காங்கிரஸ் கட்சி சுயேட்சை இல்லை என்று சொல்லுகிறார். கம்யூனிஸ்ட் கட்சி எங்கோ ஒரு இடத்தில் இருக்கிறது என்று சொல்ல வேண்டாம். அவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள்.

திரு. ஜி. பழனிசாமி : கம்யூனிஸ்ட் கட்சி உலகமெங்கும் இருக்கின்ற கட்சி, ஆட்சிக்கு வரப்போகின்ற கட்சி என்பதைப் புரிந்து கொண்டால் நன்றாக இருக்கும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ், அவர் காங்கிரஸ் கட்சி சுயேட்சை இல்லை என்றுதான் சொன்னார்.

திரு. மா. சுந்தரதாஸ் : As he is a Congress Member..... (Interruption) under my whip only he is acting.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்த உரிமைதான். பேரவைத் தலைவராகப் பார்த்து அவரைப் பேசவிடலாம் என்று நீங்கள் சொல்லியதால் நான் அனுமதித்திருக்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : அவர் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இருந்து கொண்டு காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் பேசுவது என்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு நான் என்ன செய்வது?

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது என்னவென்றால் காங்கிரஸ் கட்சி நாடாளுகின்ற கட்சி, எந்தச் சிறிய பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டிய உயர்ந்த அதிகாரத்தில் இருக்கின்ற கட்சி. கம்யூனிஸ்ட் கட்சியை நான் குறைபடுத்திச் சொல்லவில்லை. அவர்கள் போராடுகின்ற கட்சி. கோரிக்கையை யார் வேண்டுமானாலும் கொடுக்கலாம். தீர்ப்பது என்பது மிகவும் சிரமமான வேலை. அப்படிப்பட்ட தீர்க்கின்ற இடத்திலே காங்கிரஸ் கட்சி இருக்கிறது (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே அரசியல் வேண்டாம்.

திரு. எஸ். வி. சண்முகம் : காங்கிரஸ் கட்சி என்பது, உயர்ந்த இடத்தில் இருக்கின்ற, பிரச்சினைகளை எல்லாம் தீர்க்க வேண்டிய இடத்தில் இருக்கிற கட்சியாகும். அதைத்தான் நான் திரும்பத் திரும்பச் சொன்னேன். இந்தியாவில் இருக்கின்ற மாகாணங்களில், கர்நாடகமும் இந்தியாவில் இருக்கிறது என்ற நினைப்பில் நான் பேசிக்

கொண்டிருக்கிறேன். ஆனால் கர்நாடகாவில் நடந்து கொண்டிருக்கிறது என்பது, அவர்கள் இந்தியாவில் இருக்கிற மாநிலம் மாதிரி இல்லை—அங்கே நடக்கின்ற விசயங்கள், சம்பவங்கள் எல்லாம்—எனக்கு இருக்கின்ற வருத்தம் என்னவென்றால் இதுபோன்ற சமயத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைமை இடத்தில் வல்லபாய் பட்டேல், நேரு போன்றவர்கள் இருந்திருக்க வேண்டும். ஒரே தட்டு தட்டியிருப்பார்கள். இதுமாதிரி, சந்தர்ப்பவாதிகள், பிரச்சினைகளை ஆரப்போடுவது, தள்ளிப்போடுவது, மழுப்புவது, பேசவே மாட்டேன் என்பது, பேசாமல் போய்ப் படுத்துக் கொள்வது, தேவை இல்லாத வேலையைப் போய்ச் செய்வது போன்ற காரணங்களால்தான் இந்தியாவில் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படவில்லை (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஞானசேகரன், என்ன பாயின்ட் ஆப் ஆர்ட்ர்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் என்னதான் மறைத்து மறைத்துப் பேசினாலும், பிரதமரைத் தாக்கிப் பேசுவது என்பது நாம் வைத்திருக்கின்ற விதிகளுக்கு விரோதமான ஒன்று. ஆகவே நம்முடைய விதிமுறைகளுக்கு மாறாக அவர் பேசிக்கொண்டு போவதை நீங்கள் எப்படி அனுமதிக்கிறீர்கள்? அதை அவைக் குறிப்பிலிருந்து தயவுசெய்து எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானமே, மத்திய அரசும், பிரதமரும் இதில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இருக்கிற தீர்மானமாகும் (குறுக்கீடு).

திரு. சி. ஞானசேகரன் : மத்திய அரசை நீங்கள் கோரலாம். ஆனால் பிரதமரைத் தாக்கிப் பேசுவதற்கு அனுமதி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரதமரைத் தாக்கி ஒன்றும் அவர் பேசவில்லை. பிரதமரை உயர்த்தித்தான் பேசுகிறார். பிரதமரை நீங்கள் ஏன் தாழ்த்திப் பேசுகிறீர்கள்? உயர்வாகத்தான் சொல்லுகிறார். தீர்க்க வேண்டிய கட்சி, தீர்க்க வேண்டிய இடத்தில் இருக்கிறவர்கள், தீர்க்க வேண்டும் என்று சொல்லுகிறார். திரு. எஸ். வி. சண்முகம், உரையை முடித்துவிடலாம்.

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன குற்றச்சாட்டுகளை ஒப்பிட்டால் நான் சொன்னது ஒன்றும் இல்லை.

[திரு. எஸ். வி. சண்முகம்] [1995 டிசம்பர் 28

அவர் சொன்ன குற்றச்சாட்டுகளை வரிக்கு வரி எடுத்துப் பார்த்தால், தெரியும் அவை பெரிய குற்றச்சாட்டுகள். யாரோ மாதிரி பேசிவிட்டுச் சென்றிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர். அதுதான் எனக்கு மிகவும் வருத்தம். இந்தச் சட்டமன்றம் நிறைவேற்ற இருக்கின்ற இந்தத் தீர்மானத்தையாவது பிரதம மந்திரியிடம் சொல்லி, இந்தத் தீர்மானத்தைப் படித்துப் பாருங்கள், முழித்துப் பாருங்கள், இது மிகவும் முக்கியமான பிரச்சினை என்று சொல்லி, அவரைக் கொஞ்சம் பேச வைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற பல பிரச்சினைகளில் நீங்கள் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறீர்கள். நான் இதை மீண்டும் வலியுறுத்துவதற்குக் காரணம், ஒரு மாநில முதல்வர் இதற்கு மேல் என்ன செய்ய முடியும்? 4 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தாகிவிட்டது. எல்லோரையும் 8 தடவை விமானத்தில் எடுத்துக்கொண்டு சென்று வந்தாகிவிட்டது. இங்கே 13 தடவை தீர்மானங்கள் போட்டாகிவிட்டது. 14 தடவை ரிமைன்டர் லெட்டர் எழுதியாகிவிட்டது. கடைசியாக இங்கே ஒரு தீர்மானம் போட்டாகிவிட்டது. இதையும் வாங்கி படுத்துக்கொண்டால் என்ன செய்ய முடியும்? ஒரு மாநிலத்தில் 13 லட்ச ஏக்கர் நிலத்தில் போடப்பட்ட பயிர் வீணாகிவிட்டால் என்ன செய்வது? அந்தப் பழியைத் தூக்கி இந்த ஆட்சியின்மேல் போடுவதற்கு முயற்சி நடக்கிறது. மின்சாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று இவர்கள் சொல்லுகிற யோசனை நல்ல யோசனை அல்ல. அது எதற்கு என்றால் பின்னால் பழியைப் போடுவதற்காகத்தான். நீங்கள் மின்சாரத்தை ரத்து செய்ததால் நாங்கள் தண்ணீர் தர மறுத்தோம் என்று ஒரு பழியை நம்மீது போடுவதற்காகத்தான். ஆகவே, இந்தப் பிரச்சினையில், காங்கிரஸ் கட்சியின் எதிர்க்கட்சித் தலைவர் மற்ற விசயங்களை இரண்டு மூன்று வாரங்கள் கழித்து கவனத்தோடு செய்யலாம், இந்தப் பிரச்சினையில் உடனடியாகச் செய்ய வேண்டும். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு சென்று, டெல்லியில் காட்டி, பேசி, தஞ்சாவூர் மக்களைப் பாதுகாத்தால்தான் தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாக்க முடியும் என்று சொல்ல வேண்டும். ** (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் வேண்டாம். நீங்கள் வைக்கும் வேண்டுகோளோடு முடியுங்கள்.

திரு. எஸ். வி. சண்முகம் : நான் மீண்டும் அழுத்தமாகச் சொல்லுவது, இந்தத் தீர்மானத்தை முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துவிட்டார்கள் என்று இல்லாமல், இங்கே பேசியது போல் அல்லாமல் இதய சுத்தியோடு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மத்திய அரசிடம் பேசி மத்திய அரசு இதில் கவனம் செலுத்துவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானம் தமிழகத்திற்கு வழிகாட்டக் கூடிய தீர்மானம் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து இந்தப் பேரவையில் நான் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் அரசைப் பொறுத்தவரையில் காவிரி நதி நீர்ப் பிரச்சினையை ஆரம்பத்திலிருந்தே ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் அணுகி, தமிழகத்தின் நலன் காக்க தீவிரமாகச் செயல்பட்டு வந்துள்ளது. நாங்கள் தொடர்ந்து சட்ட நுணுக்கங்களைக் கூர்ந்து கவனித்து, நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கண்காணித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளோம். எனவே, தமிழக அரசு உரிய நேரத்தில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயங்கியது என்றோ அல்லது தவறியது என்றோ கூறுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான கூற்றாகும். எனவே, தமிழக அரசைப் பொறுத்த வரையில் சரியான நேரத்தில் சரியான நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து எடுத்து வந்துள்ளது என்பதை மீண்டும் ஒரு முறை தெளிவுபடுத்தி, இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி, நீங்கள் கொடுத்திருக்கின்ற அறிவிப்பில் உள்ள திருத்தம் முதலமைச்சர்களை அழைத்துப் பேச வேண்டும் என்பது. கர்நாடக அரசை வற்புறுத்த வேண்டும் என்று அந்தத் தீர்மானத்திலேயே இருக்கிறது. மற்ற சில உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டது போல இரண்டு மாநில முதலமைச்சர்களையும் அழைத்துப் பேச வேண்டும் என்று அது இருக்குமேயானால், அதுவே கூட தாமதத்திற்கு வழி வகுக்கும் என்கின்ற காரணத்தால் அது வேண்டாம் என்று கருதப்படுகிறது. தங்களது திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறீர்களா?

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களின் அறிவிப்பு திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட தனித் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தனித் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.45, 46, 47 மற்றும் 48/1995 ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.